
# வாழ்வியல்

## அனுபவப் பகிர்வு

பாகம் - 03



கலாபூஷணம் வீ.என்.சந்திரகாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியல்

## அனுபவ பகிர்வு

## பாகம் - 03

கலாபூஷணம் வீ. என். சந்திரகாந்தி

வெளியீடு :
தி/ஜெயகாந்தி கலை கலாச்சார விளையாட்டு
மேம்பாட்டு கழகம்.
572A ஏகாம்பரம் வீதி
திருக்கோணமலை
026-2224706

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் விபரப் பட்டியல்.

வெளியீடு :- 08

நூல் :- வாழ்வியல் அனுபவ பகிர்வு
பாகம் - 03

இலக்கிய வகை :- கட்டுரை

ஆசிரியர் :- கலாபூஷணம் வீ.என்.சந்திரகாந்தி.
572A , ஏகாம்பரம் வீதி
திருக்கோணமலை.

பதிப்புரிமை :- திருமதி. செல்வச்சோதி சந்திரகாந்தி.

முதற் பதிப்பு :- 01.08.2020

கட்டுரைகள் கணனி மயப்படுத்தலும் அட்டைப்பட வடிவமைப்பும்
:- ச.சதீஷ்காந்தன்.

அச்சுப்பதிப்பு :- A.R.Traders, திருஞானசம்பந்தர் வீதி
திருக்கோணமலை

வங்கி கணக்கு விபரம் :- V.N.Chandragandi
( HNB PLC . Main St. Trincomalee)

கணக்கு இலக்கம் :- 031020435441

E-Mail Address :- vnchandragandi@gmail.com

ISBN :- 978-955-98979-6-5

பக்கம் :- 156

சொற்கள் :- 21135 (கட்டுரைகள்)

பிரதிகள் :- 500

நூல்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய இடம்
:- 572A,ஏகாம்பரம் வீதி, திருக்கோணமலை

தொடர்புகளுக்கான தொலைபேசி
:- 071-9392190 / 026-2224706

விலை :- 400.00

**(ஒரு நூலினை கொள்வனவு செய்வதானது
புதிய நூல் ஒன்றின் பிரசுரத்திற்கு வழி வகுப்பதாகும்.)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே.....

I. சமர்ப்பணம்

II. கட்டுரை விபரம்.

III. வாழ்த்துரை
திருமலை சுந்தா

IV. அணிந்துரை
திரு.பர்னாஸ் இஸ்மெயில் (SLAS)

V. முகவுரை
திரு. இ.மதன்.

VI. எனதுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமுரசு வாரமலரில் வெளியான கட்டுரைகள்.

| | | |
|---|---|---|
| 1. | தலைமைத்துவம். | 21.11.2015 - 27.11.2015 |
| 2. | சத்தியம் காத்தலும் இரகசியம் பேணலும் | 26.07.2014 - 01.08.2014 |
| 3. | அரட்டை அடித்தலும் விதண்டாவாம் பேசலும் | 30.05.2015 – 05.06.2015 |
| 4. | அரசியல் வாதிகளும் கல்விமான்களும் | 10.01.2015 – 16.01.2015 |
| 5. | அறிவை பகிர்தலும் ஆற்றலை வளர்த்தலும் | 29.08.2015 – 04.09.2015 |
| 6. | அத்தியாவசிய செலவுகளும் அநாவசிய செலவுகளும் | 25.07.2015 – 31.07.2015 |
| 7. | எழுத்தாளர்களும் நன்மதிப்பும் | 13.12.2014 – 19.12.2014 |
| 8. | எதிரியும் எதிரியின் நண்பனும் | 12.07.2014 – 18.07.2014 |
| 9. | எமது முன்னேற்றமும் பொருத்தமான துறையும் | 12.07.2014 – 18.07.2014 |
| 10. | நமது உடலை பராமரிப்பது எப்படி? | 20.09.2014 – 26.09.2014 |
| 11. | எதேச்சையாக பிறர்க்கு தீங்கிழைத்தல் | 04.07.2015 – 10.07.2015 |
| 12. | காலம் பொன்னானது | 17.10.2015 - 23.10.2015 |
| 13. | குடியை கெடுக்கும் குடி | 20.12.2014 -- 26.12.2014 |
| 14. | மனமுறிவுகள் | |
| 15. | நாம் ஏன் சட்டத்திற்கு பணியவேண்டும்? | |
| 16. | பதவியும் படாடோபமும் | 28.03.2015 – 03.04.2015 |
| 17. | பெண்ணியம் போற்றுவோம் | 31.10.2015 – 06.11.2015 |
| 18. | பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் வகிபாகம் | 17.01.2015 – 23.01.2015 |
| 19. | பழிவாங்கலும் வன்முறையும் | |
| 20. | சொல்லொன்று செயலொன்று | 08.11.2014 – 14.11.2014 |
| 21. | சொந்தகாலில் நிற்றல் | 19.12.2015 – 25.12.2015 |
| 22. | பசி...பசி...பசி...! | 25.04.2015 – 01.05.2015 |
| 23. | தாயும் தாரமும் | 28.02.2015 – 06.03.2015 |
| 24. | திட்டமிடப்பட்ட வாழ்க்கை அமையாமை | 08.08.2015 – 14.08.2015 |
| 25. | பணக்கொடுக்கல் வாங்கல் | 14.03.2015 – 20.03.2015 |
| 26. | பிரச்சனைகளும் இலட்சியங்களும் | 02.08.2014 – 08.08.2014 |
| 27. | விமர்சனங்களும் விமோசனங்களும் | 26.09.2015 – 02.10.2015 |
| 28. | மாறுபட்ட மனோ நிலைகள் | 19.03.2016 – 25.03.2016 |
| 29. | வரலாற்றில் இடம் பிடித்தல் | 30.04.2016 – 06.05.2016 |
| 30. | மகிழ்ச்சியின் இரகசியங்கள். | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்.

இனங்காணப்படாததும்
தடுப்பு மருந்துகள் எதற்கும் கட்டுப்படாததுமான
புதிய வைரஸ்க்கு எதிராக
நேரில் களமிறங்கி போராடி
மானிட உயிர்களையும்
இந்த உயிர் வாழ் உலகையும்
பாதுகாத்த வைத்தியர்கள்,
ஆண் பெண் தாதியர்கள்,
வைத்தியசாலையின் அனைத்து ஊழியாகள்,
அலுவலாகள், கடற்படை வீரர்கள் இராணுவ வீரர்கள்
சுகாதார உத்தியோகத்தர்கள்
பல்வேறு விமான, வாகன ஓட்டுநர்களுக்கும்
அரச துறையினர் அனைவர்க்கும்
இந்நூல் சமர்ப்பணம்!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் பிற நூல்கள்.

1. ஸ்திரீ இலட்சணம்
   சிறுகதை தொகுப்பு 2002.

2. தொடரும் தலைமுறைகள்.
   தினமுரசு சிறுகதைகள் தொகுப்பு 2003.

3. மீண்டும் வசந்தம்.
   நாவல் 2004.

4. இந்திரர்கள் நாடும் அகலிகைகள்
   சிறுகதை தொகுப்பு 2006.

5. வாழ்வியல் - அனுபவபகிர்வு
   பாகம் - 1 2016

6. வாழ்வியல் - அனுபவபகிர்வு
   பாகம் - 11 2017

7. நிகழ்காலத்தில் வாழ்தல்
   சிறுகதை தொகுப்பு 2018.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

கலாபூஷணம் வீ. என். சந்திரகாந்தி அவர்களின் இலக்கிய பயணத்தில் அவரது வாழ்வியல் அனுபவப் பகிர்வு நூல்களின் வரிசையில் இந்நூல் பாகம் மூன்றாக வெளிவந்துள்ளது.

நல்ல கதை சொல்லியாக சிறுகதைகள், நாவல்கள் மூலம் வாழ்வின் அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொண்ட நூலாசிரியரின் கட்டுரை வடிவிலான நூலே இது.

சாதாரண வாசகனும் அறிந்து கொள்ளும் விதத்தில் தனது அனுபவங்களை சிறந்தமுறையில் பங்கிட்டுக் கொள்கின்றார். அவரது சொல்லும் திறன் கட்டுரைகளினை வாசித்தால் எந்தளவு சிறப்பானது என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடியும்.

வாழ்வின் அனுபவங்களை நுனிப்புல் மேயாது வாழ்வின் அடித்தளம் வரை சென்று அக்குவேறு ஆணிவேறாக அலசுகின்றது இந்நூல்.

வாசித்தவர்கள் பயனடைவர். வாழ்வின் அர்த்தங்களை புரிந்துகொள்வர். சமுதாய மேம்பாடு... சிந்தனைகளை அவர்களுக்கு துளிர்க்க வைக்குமென திடமாக நம்புகின்றேன்.

ஒவ்வொருவர் இல்லங்களில் இருக்க வேண்டிய நூலாக இந்நூலினைக் கருதுகின்றேன். நூலாசிரியரின் அனுபவ பகிர்வு எங்களின் வாழ்விலும் இடம் பிடித்து சிறந்த ஒழுங்கான வாழ்வுக்கு இட்டுச் செல்லும் என்பது எனது முழுமையான நம்பிக்கை.

நீங்களும் நூலாசிரியரின் வாழ்வியல் அனுபவங்களை அனுபவியுங்கள். வாழ்த்துகளோடு... நூலாசிரியரின் அடுத்தடுத்த வாழ்வியல் அனுபவ பகிர்வுகளை எதிர்பார்க்கின்றேன்.

கலாபூஷணம்
திருமலை சுந்தா
31, சமாது ஒழுங்கை
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. பர்னாஸ் இஸ்மெயில் இலங்கை நிருவாக சேவை அதிகாரியாக பணிபுரிபவர். பரந்த வாசிப்பு பழக்கம் உள்ளவர். எழுத்தாற்றல் கைகூடியவர் எவரையும் மதிப்பவர். ஆசிரியரின் வாழ்வியல் அனுபவ பகிர்வு பாகம் 01 மற்றும் பாகம் 02 நூல்களை வாசித்து மெச்சியவர்.

"நிகழ்காலத்தில் வாழ்தல்" சிறுகதை தொகுப்பை வாசித்து மகிழ்ந்த அவர் அதனை மனதில் மட்டும் வைத்து மெச்சாமல் வாசகர்கள் அனைவரும் அறிந்து கொள்ளும்படி தனது முகநூலில் பதிவு செய்து ஆசிரியரை கௌரவித்தவர்!

அவரின் எழுத்தாற்றலை என்னில் அன்பு பூண்ட வாசகர்கள் அனைவரும் அறியும் வண்ணம் வாழ்வியல் அனுபவபகிர்வு பாகம் 03க்கு மெருகூட்டும் வண்ணமும் நூலாசிரியரின் எழுத்துக்களுக்கான அங்கீகாரமாகவும் இங்கு அணிந்துரையாக தருகின்றேன்.



# அணிந்துரை

திருமலை கலாபூஷணம் வீ.என். சந்திரகாந்தி அவர்களினால் அண்மையில் வெளியிடப்பட்ட அவரது ஏழாவது படைப்பான 'நிகழ்காலத்தில் வாழ்தல்' எனும் சிறுகதைத் தொகுப்பானது சென்ற வருடம் என் கரம் கிட்டியது.

அவரது கைப்படவே அதனை என்னிடம் வந்து சேரும்படி அனுப்பியிருந்தார். அதற்கு நன்றியை தெரிவித்தவனாக அப்படைப்பிற்கு எனது அணிந்துரையை பதித்திருந்தமைக்கு மனதார அவரை பாராட்டுகின்றேன். நீங்கள் சீரும், சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வல்ல இறைவனை முதலில் பிரார்த்திக்கின்றேன். உங்களது கடந்த படைப்புக்களாக வெளிவந்த அனுபவப் பகிர்வுகள் பாகம் 01 மற்றும் பாகம் 02 இன் மூலமாக உங்கள் எழுத்தின் மீது பூரண விசுவாசம் மற்றும் பற்றுக் கொண்ட ஒரு வாசகனாகவே மாறிவிட்டேன். அப்படைப்புக்களின் விடயங்கள், ஆழங்கள் பற்றி உங்களுடன் நேரடியாகவே தொலைபேசி மூலம் வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்திருந்தேன். அதனை முகப்புத்தகத்திலும் பதிவிட்டதோடு மாத்திரமல்லாது, Kalmunai Municipal Council (கல்முனை மாநகர) வாசகர்களின் நன்மை கருதி எங்களது அனைத்து வாசிகசாலைகளிலும் காட்சிப்படுத்தவும் ஏற்பாடுகளையும் செய்திருந்தேன். அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளனாகிய உங்களைப் போன்றவர்களுக்கு ஒரு ஆத்மார்த்த திருப்தியையும், பெருமிதத்தினையும் வழங்கியிருக்கும் என நம்புகிறேன்.

ஆனால் இந்தப் புதிய வெளியீட்டின் உள்ளடக்கம் மற்றும் அதன் ஆழங்கள் பற்றிய எவ்வித பின்னூட்டல்களையும் இதுவரை வழங்காமையானது என்மனதில் ஒரு பாரமாகவே உள்ளதனை இன்னும் உணர்கின்றேன். அதற்காக ஒரு கணம் உங்களிடம் மன்னிப்புக் கோரியவனாக விடயத்திற்குள் நுழைகின்றேன். உண்மையில் உங்களது இச் சிறுகதைத் தொகுப்பானது 'நிகழ்காலத்தில் வாழ்தல்' என்று தலைப்பிட்டிருந்தாலும் ஒரு படைப்பாளியின் இறந்தகால உள்ளக்கிடக்கையை அச்சொட்டாக வெளிக்கொணர்வதாகவே நான் காண்கிறேன். இச்சிறுகதைகள் 2007 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதில் வீரகேசரி, தினக்குரல் மற்றும் ஞானம் பத்திரிகைகளில் வெளிவந்த தொகுப்புக்களாகும். அப்பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருப்பதானது எந்தளவு உங்கள் படைப்புக்கள் வரவேற்பினைப் பெற்ற சிறந்தவைகள் என நான் சொல்லி நீங்கள் அறிந்து கொள்ள தேவையில்லை. யுத்தத்திற்கு முன்னரான காலம் தொடங்கி யுத்தத்திற்கு பின்னரான காலத்தில் வாழ்ந்த, வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைப் பிரதிபலிப்பினை கோடிட்டுக் காட்டுவதாக இப்படைப்பு ஆக்கப்பட்டிருப்பது உங்களின் உள்ளக்கிடக்கையை வெளிக்கொணர்வதாக அமைந்திருக்கின்றது.

இச்சிறுகதைகளில் பாவிக்கப்படும் சொற்களானவைகள் பெரும்பாலும் எந்தவித மொழிக்கலப்புக்கள் இல்லாமல் தமிழ் கலைச்சொற்களைக் கொண்டு ஆக்கியிருப்பது தமிழ் மொழியின் மீதுள்ள உங்களின் பற்றை பறைசாற்றுகின்றது. அநேகமான இடங்களில் தமிழினத்திற்கு சொந்த இலக்கு மொழி நடையில் தங்களது கலாசார விழுமியங்களைப் பேணி இத்தொகுப்பில் வெளியிட்டமையானது தம்மினத்தின் மீதுள்ள சரியான புரிதலை காட்டுவதோடு, தங்களது தனித்துவ அடையாளத்தை வெளிக்காட்டுவதாக அமைந்திருக்கின்றது. வாசகர்களுக்கு தேவையானவிடத்து நவீனத்துவ இயந்திர சாதனங்களின் விழிப்புணர்வுகளையும், அறிவுறுத்தல்களை புத்திமதியாக வழங்கியிருப்பதும் மேலும் உங்களுடைய எழுத்தில் வலுச்சேர்க்கின்றது.

தமிழ், சிங்கள உறவுப் பாலத்தை மேம்படுத்துவதற்காக இன நல்லிணக்கத்தையும், தமிழினத்தில் காணப்படும் சாதி பேதமைகளை ஒழிப்பதற்கான கருத்துக்களையும் நீங்கள் அவ்வப்போது வெளிப்படுத்தியிருப்பது நிச்சயம் பாராட்டப்பட வேண்டியதாகும். மேலும் எல்லா மதத்தவர்களையும் சமனாக மதித்து உங்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பு ஆக்கப்பட்டிருப்பது உங்களது இன நல்லுறவின் மீதான ஈடுபாட்டினை வெளிப்படுத்தி நிற்பதனை பறைசாற்றி நிற்கின்றது.

இச்சிறுகதைகளை வாசிக்கும் போது என் மனதில் வந்த விடயம் என்னவென்றால் இதிலுள்ள காட்சிகளும், சம்பவங்களும், கதாபாத்திரங்களும் உங்களது வாழ்க்கையில் நடந்த உண்மைச் சம்பவங்களாக இருந்திருக்குமோ என்பதாகும். ஏனென்றால் ஒரு படைப்பின் உயிரோட்டம் அமைந்திருப்பது படைப்பாளியின் உண்மை அனுபவத்தினை மையப்படுத்தியதாகும். அப்போது தான் வாசகர்களின் உள்ளத்தில் ஒரு பிரதிபலிப்பை நிச்சயம் உண்டுபண்ணும். அதுவே படைப்பாளியின் வெற்றியுமாகும்.

கொரோனாவின் இம் முடக்கமானது உங்களது படைப்பினை ஒரு நாளின் நல்லிரவு வரை வாசித்து சுவைக்க வழிசமைத்திருக்கிறது. காலம் தாழ்த்திய வாசிப்பாக இருப்பதனால் மீண்டும் ஒரு முறை உங்களது மன்னிப்பை வேண்டியவனாகவும், உங்களை நேரடியாக தொடர்பு கொண்டு கருத்து தெரிவிப்பதில் ஒரு வெட்க உணர்ச்சி மேலிட்டதனாலேயே இப்பதிவினை பொதுவெளியாகிய முகப்புத்தகத்தில் இடுவது உங்களை நிச்சயம் மகிழ்ச்சிப்படுத்தும் என எண்ணுயவனாகவும், இன்னும் நிறைய விடயங்களை குறிப்பிடக்கூடியதாக இருப்பினும் நேரத்தின் பெறுமதி கருதி இத்துடன் சுருக்கிக் கொள்கின்றேன்.


உங்களது எழுத்துப் பயணமும், கலையுலக வாழ்க்கையும் மென்மேலும் எந்தவித தடங்கலின்றி தொடரவேண்டும் எனவும், அதற்கு பொருளாதார வளமும், உடல் பலமும், நீண்ட ஆரோக்கியமும் கிடைக்க வேண்டும் எனவும் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து விடை பெறுகின்றேன்.

என் இனிய நண்பர்களே,
திருமலை வீ.என். சந்திரகாந்தியின் படைப்புக்களை அவருடன் முகப்புத்தகம் மூலமாகவும், தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்டு பெற்று அவரது படைப்புலக பயணத்திற்கு புத்தியிர் ஊட்ட வினயமாக வேண்டுகிறேன்.

Firnas Ismail
17/04/2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முகவுரை

**வாழ்வியல் அனுபவபகிர்வு – பாகம் - 03**

ஈழத்து இலக்கியத்தில் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கும் மூத்த எழுத்தாளராகிய திருமலை வீ.என்.சந்திரகாந்தி அவர்களின் புதிய வெளியீடாக வெளிவருவதே ''வாழ்வியல் அனுபவப்பகிர்வு'' பாகம் - 03.

சிறுகதை இலக்கியத்திலும் நாவல் இலக்கியத்திலும் தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்திருக்கும் இவர் நான்கு சிறுகதை தொகுப்புக் களையும் நாவல் ஒன்றையும் வெளியிட்டு ஈழத்து இலக்கியத்திற்கு பெருமை சேர்த்துள்ளார். அவற்றோடு வாழ்வியல் அனுபவபகிர்வு பாகம் -01 மற்றும் பாகம் 02 ஏற்கனவே பிரசுரமாகியுள்ளன.

இவரது கதைகள் மனித பண்புகளையும், மனித நேயத்தையும், வாழ்விய லையும் அடிப்படையாக கொண்டதாகவே அமைந்திருப்பதை அவதானிக் கலாம். அது அவர் மனிதர்கள் மீது கொண்ட அன்பினாலும் வாழ்வின் மீது கொண்ட பற்றினாலும், வாழ்க்கையில் கடைப்பிடிக்கப் படுகின்ற நல்லொழுக்கத்தின்பாலும் உருவானது என்றே கருதக்கூடியதா யுள்ளது.

அவரது அந்த எழுத்தின் நீட்சியாகவே, அவர் தமது வாழ்வில் பெற்ற அனுபவங்களை எம்மோடு பகிர்ந்து கொள்ள எண்ணிய நல்லெண்ணத்தின் பாலே இந்த ''வாழ்வியல் '' அனுபவபகிர்வு என்ற கட்டுரைத் தொகுதி உருப்பெற்றிருக்கலாம்.

இத்தொகுப்பில் முப்பது கட்டுரைகள் இடம்பெற்றிருக்கின்றது. அவை அனைத்தும் தலைப்பிற்கு ஏற்றால் போல் வாழ்வியல் பற்றி, வாழ்க்கையின் ஒவ்வொரு தனிமனிதனும் கடைப்பிடிக்க வேண்டிய நல்லொழுக்கங் களையும் நற்பண்புகளையும், அவன் விலத்த வேண்டிய விடயங்களையும், அவன் முன்னேற்றத்திற்கான வழிகளையும், எழுத்தாளர் தான் பெற்ற அனுபவத்தின் மூலமாக, சுவாரசியமாக எளிய எழுத்தின் மூலமாக வாசிப்பவர்களுக்கு கருத்திலே பதியக்கூடியவகையில் எழுதியிருக்கின்றார்.

இக்கட்டுரைகளை வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் இதிலிருந்து ஏதோ ஒரு விடயம் அவர்கள் வாழ்வில் ஏதோவொரு காலத்தில் அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்து போனவையாகவே இருக்கும். அதை நான் சொல்வதை விட நீங்கள் ஒவ்வொருவரும் வாசிக்கும் போது உணர்ந்துகொள்வீர்கள்.

மனிதனின் வாழ்க்கை காலம் என்பது அவன் பிறந்து வளர்ந்து , முதுமையடைந்து , இவ்வுலகைவிட்டு நீங்கும் வரையான காலமாகவே கணிக்கப்படுகின்றது. அக்காலப்பகுதியில் மனிதர்கள் வாழ்க்கையை வாழ்கின்றார்களா என்றால் அது கேள்விக்குறிதான். வாழ்வதற்கான முயற்சியில் ஒவ்வொருவரும் ஈடுபடுகின்றார்கள். ஆனால் ஒரு சிலரே வாழ்கின்றார்கள். அது ஏன் என்றும் அவர்கள் அதற்காக என்ன செய்ய வேண்டும் என்றும் இக்கட்டுரைகள் எமக்கு எடுத்துரைக்கின்றன.

இத்தொகுப்பில் உள்ள கட்டுரைகள் பல நாம் வாழ்க்கையில் கடைப் பிடிக்கவேண்டிய விடயங்களையும் தவிர்க்கவேண்டிய விடயங்களையும் எடுத்துக்கூறியுள்ளதோடு நாம் அன்றாடம் சந்திக்கும் பிரச்சனைகளையும் இலகுவாக தீர்த்துக்கொள்ள கூடிய பல வழிமுறைகளையும் எடுத்தியம் பியிருக்கின்றது.

வாழ்க்கையின் ஒவ்வொரு பருவ நிலையிலும் இருக்கின்ற குழந்தை, சிறுவர், இளைஞர், முதியோர் வெவ்வேறு பொறுப்புக்களையும் குடும்பத்தில் வகிக்கின்ற தாய், தந்தை, மகள், மகன், அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, மாமா, மாமி, பாட்டன், பாட்டி, சமுதாயத்தில் ஒன்றுக்கொன்று முரணான படிநிலையில் இருக்கின்ற ஏழை பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன், நல்லவன், கெட்டவன் ஒவ்வொருவருக்குமான முன்னேற்றத் திற்கான வழிகளும் அவர்கள் கடமைகளும் பொறுப்புக்களும், செய்ய வேண்டுபவையும் செய்யகூடாதவையும் இக்கட்டுரைகளில் ஆங்காங்கே தெளிவுபடுத்தப்பட்டிருப்பது இக்கட்டுரைத்தொகுப்பின் சிறப்பம்சமாகும்.

இனி கட்டுரைக்குள் அடங்கியுள்ள ஒரு சில விடயங்கள் பற்றி பேசுவோம்.

**''காலம் பொன்னானது''** என்ற கட்டுரையில் கால நேரத்தை வீண்விரயமாக்காது எமது ஒவ்வொரு செயற்பாடுகளையும் திட்டமிட்டு எவ்வாறு செயற்படுத்தவேண்டும் என்று மிக அழகாக எடுத்துரைக்கின்றார். இக் கட்டுரை ஆசிரியரும் இக்கட்டுரைகள் ஒவ்வொன்றையும் திட்டமிட்டு நேர்த்தியாக வடிவமைத்திருப்பதை பார்க்கும் போது அவரும் வெறும் எழுத்தில் மட்டுமல்லாது தனது வாழ்கையிலும் நேர்த்தியையும் திட்டமிடலையும் கடைப்பிடிப்பவராக இருக்கின்றார் என்பது தெரிகின்றது. அதை நாம் ஒவ்வொருவரும் கடைப்பிடிப்போமானால் நாமும் நமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் நாம் எண்ணியதை போன்று முன்னேற முடியும் என்பதில் ஐயமில்லை.

எம்மில் அனேகமானோர் நம் வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க தயங்குகின்றோம். பிரச்சனையை கண்டு ஓடுவதும், அதிலிருந்து விலத்தி நிற்பதும் அதை எதிர்கொள்ள மறுப்பதுமே நாம் செய்யும் பெரும் தவறாக இருக்கின்றது. அவ்வாறில்லாமல் எமக்கு ஏற்படும் பிரச்சனைகளை எவ்வாறு எதிர்கொள்வது, அதை எவ்வாறு சமாளிப்பது, அல்லது தீர்த்துவைப்பது என்று மிகதெளிவாக எடுத்துரைத்திருக்கின்றார். 'எமது வாழ்க்கையின் வெற்றி நாம் கொடுக்கும் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கும் விதத்திலேயே தங்கியுள்ளது! என்ற அவரது கூற்று அதனை தெளிவாக்குகின்றது.

மனிதர் ஒவ்வொருவரும் தமது முன்னேற்றத்திற்காக எவரையும் நம்பி யிருக்கலாகாது. தத்தமக்கான முன்னேற்ற பாதையை தாமே வகுத்துக் கொண்டு நேர்மையான முறையில் அதை நோக்கி செல்லவேண்டும்.

'இறைவன் இயற்கையின் வாயிலாக மனிதனுக்கு பல செய்திகளை பகிர்ந்துள்ளான். அதை சரியாக புரிந்துகொள்வதில் தான் வாழ்கையின் வெற்றி தங்கியுள்ளது' என்ற மேற்கோளை உதாரணமாக காட்டி எமது முன்னேற்றத்திற்கான பாதையை எமக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

பிறிதொரு கட்டுரையில் ஒரு சிறந்த தலைவனுக்கு இருக்கக்கூடிய ஐந்து அத்தியாவசியமான அடிப்படை தகமைகளை விபரிக்கின்றார். அவையாவன திட்டமிடல், செயற்படுத்தல், ஒன்றிணைத்தல், கட்டளையிடல் கட்டுப் படுத்தல் என்பனவாகும். இன்றைய எமது தலைவர்களும், எதிர்காலத்தில் தலைவர்களாக வர துடிப்பவர்களும் நிச்சயமாக இக்கட்டுரையினை வாசிக்கவேண்டும்.

''**பழிவாங்கலும் வன்முறையும்**' என்ற பத்தொன்பதாவது கட்டுரையிலே, பழிவாங்கும் எண்ணமே வன்முறையை உருவாக்குகின்றது என்றும், பேசித்தீர்த்துக்கொள்ளக்கூடிய விடயங்களை உடனுக்குடன் பேசி சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளாமல் பிரச்சனைகளை பெரிதுபடுத்துவதி லேயே நாம் முன்னிற்கின்றோம் என்று விசனப்படுகின்றார். அத்தோடு, ''வேற்றுக்கிரகங்களில் உயிர்வாசிகள் இருக்கின்றார்களா என்று விஞ்ஞானிகள் பணத்தையும் நேரத்தையும் கொட்டி முயற்சிக்கின்றார்கள். எமது தாய் பூமியிலேயே ஒற்றுமையை காக்கமுடியாத மனித இனம் வேற்றுக்கிரக வாசிகளுடன் எத்தகைய உறவை பேணப்போகின்றது?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற அவரது கேள்வி மனித குலத்திற்கே விழுந்த சாட்டை அடியாகவே கருதவேண்டியிருக்கின்றது.

அனேகமான கட்டுரைகள் பெண்மையை போற்றுவனவாகவும், பெண்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நல்லொழுக்கங்கள் பற்றியும். அவர்கள் முன்னேற்றத்திற்கான வழிபற்றியும், பெண்ணியம் பற்றியும் பேசுகின்றது.

ஒரு சில கட்டுரைகள் தலைப்பிலிருந்து சற்று விலகி வேறு விடயங்களை பேச முற்படுகின்றது. இதுவும் தவிர்க்க முடியாத ஒன்றுதான். எனெனில் இவ் எழுத்தாளர் தன் அனுபவங்களினுடாகவே பல விடயங்களை விளக்க முயற்சிப்பதனால் விடயம் தலைப்பு சார்ந்ததாகவே இல்லாமல் சற்று அங்கிங்கு விலத்திபோவது தவிர்க்க முடியாததொன்றாகவே தோன்று கின்றது.

அடுத்து, மனிதனின் சிந்திக்கும் ஆற்றல் பற்றியும், நாகரீக, விஞ்ஞான, அறிவியல் வளர்ச்சிகளுக்கு அடிப்படை காரணமாய் அமைவது மனிதனின் சிந்திக்கும் ஆற்றலே என்றும் ''அறிவை பகிர்தலும், ஆற்றலை வளர்த் தலும்'' எனும் தலைப்பிலான கட்டுரையில் விளக்கியுள்ளார். தற்போதைய எமது இளைய சமுதாயம் சிந்தித்து செயற்படும் ஆற்றலை வளர்த்துக் கொள்ள தயங்குகின்றது. அவர்கள் மத்தியில் தேடல் மிக அரிதாகவே காணப்படுகின்றது. தேடலும் சிந்தித்து செயற்படுதலுமே அறிவை வளர்க்கும் என்று எமக்கு நயமாக எடுத்துரைத்துள்ளார்.

இவ்வாறு இத்தொகுப்பில் உள்ள ஒவ்வொரு கட்டுரைகளும் நமது வாழ்க்கைக்கு ஏதோ ஒரு விதத்தில் பயனுள்ளதாகவும், வாழ்கையை அமைதியாகவும், நிம்மதியாகவும் கொண்டு செல்வதற்கான வழிகளை எமக்கு எடுத்துக்காட்டியும் நிற்கின்றது. எனவே நாம் ஒவ்வொருவரும் இத்தொகுப் பினை வாசித்து பயன்பெறவேண்டும் என வினயமாக வேண்டிக் கொள்கின்றேன்.

திருமலை. இ. மதன்.

இ.அசோக்
15, கஸ்கிசன் வீதி,
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனதுரை.

எனது எழுபத்தி நான்கு வருட கால வாழ்க்கைப் பயணத்தில் இறைவன் என்னை ஒரு எழுத்தாளனாக செதுக்கியுள்ளான்... அதை தவிர எனக்கு வேறு எதுவும் மகிழ்ச்சி தரவேண்டியதாக இல்லை...!

நான் 'கம்பஸ்' சென்றமை... போட்டிப்பரீட்சைகளில் தெரிவாகி திசைமாறி அரச சேவைக்கு வந்தமை, மொழியாற்றல் தமிழ், சிங்களம், ஆங்கிலம் மூன்றிலும் கைகூடியமை... அரச திணைக்களங்கள் அமைச்சுக்களில் 44 வருட தலைமைத்துவத்தினை ஏற்றமை.... அரசசார்பற்ற நிறுவனங்களில் திட்ட முகாமையாளராக சேவை செய்தமை.... 'நியாப்' அரச திட்டத்தில் நிர்வாக அதிகாரியாக இருந்து சமூக மட்டத்தில் பயிற்றப்பட்டமை... மூன்று தசாப்த கால எழுத்துப்பணி இவைதான் எனது தகமைகள்.

எனது ஆங்கில மொழி வரைபுகளுக்கு நிறுவனத்தலைவர்களிடம் உயர் மதிப்பு இருந்தது. அவை கூட எனது எழுத்தாற்றலை உறுதி செய்தன!

'தமிழ் மொழியில் சிறுகதை தொகுப்புக்கள், நாவல், கட்டுரை தொகுப்புக்கள் என்பனவற்றுக்கு அப்பால் ஆங்கில இலக்கணத்தையும் தமிழ் இலக்கணத்தையும் ஒப்பு நோக்கி நான் எழுதிய ''Easy way to learn English' என்ற நூல் கணனி மயப்படுத்தப்பட்ட நிலையில் அச்சுக்கு தயாராக உள்ளது. நிதிநிலை ஒத்துழைப்புக்கப்பால் அந்நூலை கொள்வனவு செய்பவர் எண்ணிக்கை தெரியவேண்டும்!

இவற்றையெல்லாம் நான் ஏன் கூறுகின்றேன் என்றால் படைப்பாளிகளுக்கு கல்வி அறிவு கட்டாயமில்லை என்ற தவறான கருத்து ஒன்று நிலவுகின்றது. அந்த நிலையில் இருந்து நான் 'வாழ்வியல்' அனுபவபகிர்வு நூலை எழுதுவதாக நீங்கள் கருதக்கூடாது என்ற பணிவான எண்ணம்தான் என்னை இப்படி எழுத தூண்டுகின்றது.

எனது வாழ்வியல் அனுபவபகிர்வு பாகம் 01 மற்றும் பாகம் 02 தொகுப்புக்களை படித்து என்னை பலர் பல வழிகளில் பாராட்டியுள்ளார்கள். அதிலும் முஸ்லிம் நண்பர்கள் திரு.பர்னாஸ் இஸ்மெயில் மற்றும் திரு.U.L.Badheeuz Zamaan ஆகியோர் என்மேல் கொண்ட நம்பிக்கைக்கு தலைவணங்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியம் காத்தலை பிரதானமாக கொண்டவன் நான். இரகசியம் பேணுவேன் அன்றி அரட்டை அடித்தலையும் விதண்டா வாதத்தையும் ஏற்றுக்கொள்பவனல்ல. அறிவை பகிர்தலும் ஆற்றலை வளர்த்தலும் எனது இரு கண்கள்.

எதேச்சையாகவேனும் பிறர்க்கு தீங்கிழையேன்... குடியை தொடேன்... காலத்தை பொன்னென நினைக்கின்றேன்... சட்டத்திற்கு பணிபவன்... பெண்மையை போற்றுபவன்.

பழிவாங்கலும் வன்முறையும் எனது அகராதியில் கிடையாது! மற்றவர்கள் பசித்திருக்க நான் பொறுத்திருக்கமாட்டேன்.

சொந்தக்காலில் நிற்பதொன்றே எனது மகிழ்சிக்கு அடிப்படை என நம்புபவன்!

அன்பு வாசகர்களே!

நான் மேலே தொட்டுக்காட்டிய விடயங்களை இந் நூலில் கட்டுரை வடிவில் வழங்கியுள்ளேன். இவை நிச்சயம் உங்களுக்கு வழிகாட்டி ஆரோக்கியத்திலும் தலைமைத்துவத்திலும் முன்னிலைப்படுத்தும். இரண்டு வருடங்கள் இடைவிடாது நான் மலைமுரசு வாரமலரில் வாராந்தம் எழுதிய 114க்கு மேற்பட்ட கட்டுரைகளின் தெரிவே இவை. கிழமை தவறாது இரண்டு வருடங்கள் பத்திரிக்கைக்கு விடயதானத்தை அனுப்புவதென்பது இலகுவான காரியமல்ல. இறை சக்தி ஒன்று எனக்கு துணையாக இருந்து என்னை எழுத தூண்டியதை எனது ஒவ்வொரு கட்டுரையை நான் எழுதும் போதும் உணர்ந்துள்ளேன். இந்நூலை வாசிக்கும் உங்களுக்கும் அந்த இறையருள் கிட்ட வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

இந்நூலின் உருவாக்கத்திற்கும் கணனி பதிவுகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கிய எனது மகன்.ச.சதீஷ்காந்தனுக்கும் முகவுரை வழங்கிய திரு.மதன் அவர்களுக்கும் எனது எழுத்துக்களுக்கு பாராட்டுரை வழங்கிய திருமலை. சுந்தா அவர்களுக்கும், என்மேல் அன்பு பூண்டு எனது எழுத்துக்களுக்கு பாராட்டும், அணிந்துரையும் வழங்கிய திரு.பர்னாஸ் இஸ்மெயில் அவர்களுக்கும் சிறந்தமுறையில் அச்சுப்பதிப்பை மேற்கொண்ட A.R. ரேடர்ஸ் நிறுவனத்திற்கும் நன்றி கூறி வழிவிடும்...

உங்கள் அன்பு

வீ.என்.சந்திரகாந்தி
572A, ஏகாம்பரம் வீதி
திருக்கோணமலை
0719392190



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01 தலைமைத்துவம்.

உலகில் அனைவர் மத்தியிலும் அனைத்து நேரங்களிலும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒரு போட்டியென்றால் அது தலைமைத்துவத்திற்கான போட்டி என்றே கூறவேண்டும். மற்றொரு விதமாக கூறுவதென்றால் உலகம் தலைமைத்துவத்தை மையமாக கொண்டே சுழன்று கொண்டிருக்கின்றது. வளரும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும் என்று கூறுவர். அது ஒரு பிள்ளை தன்னை ஒத்த சிறுவர்களுடன் விளையாடும் போது வெளிப்படுத்தும் தலைமைத்துவ பண்பை அடிப்படையாக கொண்டே தீர்மானிக்கப்படுவதாகும். மிருகங்கள் மத்தியில் கூட தலைமைத்துவ பண்புகள் விருத்தி பெற்றுள்ளன. தாவர பட்சணிகள் அனைத்துமே தத்தமக்குள் ஒரு தலைமைத்துவத்தை ஏற்று கூட்டம் கூட்டமாக வாழ்கின்றன. " அனிமல் பிளனெட் "( Animal Planet ) தொலைக்காட்சி சேவையை பார்ப்பவர்கள் அம்மிருகங்களின் வழிநடாத்தல் திறனை பார்த்து வியந்திருப்பார்கள். இரையை வேட்டையாடி சீவிக்கும் மிருகங்களிடம் குடும்பங்களாக வாழும் தலைமைத்துவ பண்பு அதிகம் காணப்படுகின்றது. அதே நேரத்தில் திட்டமிட்டு ஒன்று சேர்ந்து. வேட்டையாடுதலில் கடைப்பிடிக்கப்படும் தந்திரம் (Strategy) வியக்கவைப்பதாகும். சிங்கம் காட்டு மிருகம் அனைத்திற்குமே ராஜா என்று கூறப்படுவதன் காரணம். அதன் தலைமைத்துவ பண்புகள் தான்!

இனி அடுத்தகட்டமாக தலைமைத்துவ பண்புகள் என்றால் அவை யாவை என்று பார்ப்போம். பிரதானமாக சிறந்த தலைவன் ஒருவனுகக். ஐந்து அடிப்படை தகைமைகள் அத்தியாவசியமாகின்றன. அவையாவன. திட்டமிடல், செயற்படுத்தல், ஒன்றிணைத்தல், கட்டளையிடல், கட்டுப்படுத்தல் என்பனவாகும்.

திட்டமிடல் என்பது எதிர்காலத்தில் சம்பவிக்ககூடிய அரசியல் சமூக பொருளாதார மாற்றங்களை முற்கூட்டியே கணித்து எய்தப்படக்கூடிய இலக்கை எப்படி வெற்றி கொள்ளலாம் என தீர்மானித்தலும் அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகாரம் வழிமுறைகளை தெரிவுசெய்தலுமாகும். முகாமைத்துவத்தில் தந்திரம் உபாயம் என்ற சொற்கள் இப்போ அதிகம் பேசு பொருளாக உள்ளன. ஒரு இலக்கை அடைவதற்கான உபாயத்தை முற்கூட்டியே ஊகிக்க கூடிய ஒருவனே சிறந்த தலைவன் ஆகின்றான். திருவள்ளுவர் ஒரு தலைவன் கடைப்பிடிக்கவேண்டிய உபாயங்களை ' தெரிந்து செயல்வகை', 'வலியறிதல்', 'காலமறிதல்', இடனறிதல்', 'தெரிந்து தெளிதல்', 'தெரிந்து வினையாடல்' ஆகிய ஆறு அதிகாரங்கள் மூலம் எடுத்துரைக்கின்றார்.

ஒரு இலக்கை எய்த முடிவெடுக்க முன்னர் அது பற்றி எண்ணித்தீர்மானிக்க வேண்டும். தீர்மானித்து விட்டு பிறகு யோசிப்போம் என்பது தவறான வழிமுறையாகும். ஒரு செயலின் வலிமை தனது வலிமை , எதிரியின் வலிமை, இரு சாராருக்குமான துணையின் வலிமை , ஆகிய நான்கினையும் அளந்தறிந்த பின்பே செயலில் இறங்கவேண்டும். இந்த உலகை ஆள்வதை இலக்காக கொண்டாலும் அது கைகூடும் சரியான காலம் மற்றும் இடமறிந்து முயற்சித்தால். வெற்றி நிச்சயம் அதே சமயம் துணை என ஒருவனை ஆராயமால் தெரிவதும் தெரிவு செய்த பின் ஐயுறுவதும் தவறு. அதே போன்று இவ்வினையை இக் கருவியால் இவன் முடிக்க வல்லான் என்பதை தீர்மானிக்க வல்லவனே சிறந்த தலைவன் ஆவான். செயற்படுத்தல் எனப்படுவது வகுக்கப்பட்ட இலக்கை நோக்கி எடுக்கப்படும் நடவடிக்கைகளாகும். இந்நாட்களில் இதற்கு உறுதுணையாக கணிக்கப்படக்கூடியவை மனித வலுவும் இயந்திரவலுவும் ஆகும். தொண்டர்களாக தெரிவு செய்யப்படக்கூடியவர்கள் தலைவன் மேல் அன்புடையவனாக தலைவனுக்கு வேண்டியதை அறியும் அறிவும் கருமத்தை செய்கையில் கலங்காமையும் பேரவா இன்மையும் உடையவனாகவும் இருத்தல் அவசியம். அதே போன்று பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் குறைந்த நேரத்தில் அதிக பயனை விளைவிப்பனவாக இருத்தல் வேண்டும். ஒன்றிணைத்தல் என்பது தாபனத்தின் இலக்கை அடையக்கூடிய வகையில் மனித, இயந்திர வலுக்களை சரியான முறையில் நிர்வகித்தல் ஆகும். கட்டளையை மேற்கொள்ளல் என்பது. பொதுவாகவே தொண்டர்கள் சரியான முறையில் தாபனத்தின் இலக்கை தெரிந்து கொண்டோ புரிந்துகொண்டோ இருக்க மாட்டார்கள். ஒவ்வொரு சமயமும் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்ற வேண்டிய கருமங்கள் பற்றி நியாயப்படுத்தவும் இயலாது. அச்சமயங்களில் அவர்கள் ஆற்ற வேண்டிய செயற்பாடுகளை கட்டளை வடிவத்தில் வழங்க வேண்டும்.

கட்டுப்படுத்தல் என்பது ஒரு தாபனத்தின் இலக்கை நோக்கிய செயற்பாடுகள் சரியான திசையில் செல்கின்றனவா என்பதை அவதானித்தலும் .தவறும் சந்தர்ப்பங்களில் நெறிப்படுத்தலுமாகும்.

மேற்கூறிய ஐந்து தகைமைகளும் தலைமைத்துவத்திற்கான அடிப்படை தகைமைகளாகும். அதே சமயம் ஒரு தலைவனுக்கு தனிநபர் தகைமைகளும் அதிகம் வேண்டப்படுகின்றன. துணிச்சல் ஒரு பிரதானமான அம்சமாகும். எதற்கும் கலங்காத அஞ்சாத தலைவனுக்கு கீழ் தொண்டர்கள் பணிவுடன் பணியாற்றுவர். நல்லொழுக்கம் உடைமை , அறத்தின் மேல் பற்று , பணிவு ஆகியவை மற்றவர்களை நன்கு கவரும். நீதி நியாயம் , ஆகியவற்றின் வழி நடத்தல் வேண்டும். தாபனத்தின் இலக்கு பற்றி நல்ல தெளிவு இருத்தல் வேண்டும்.. உறுதியான திட்டத்துடன் துணிவுடன் மற்றவர்களை வழிநடத்தினால் தான் தாபனம் முன்னேற்ற பாதையில் நகர்ந்துகொண்டிருக்கும். தொண்டர்கள் தான் வேலை செய்ய அமர்த்தப்பட்டுள்ளார்களே நான் சுழல் நாற்காலியில் சுற்றிக்கொண்டிருந்தால் எல்லாமே நல்ல முறையில் நடைபெறும் என்று எதிர்பார்க்க கூடாது. தொண்டர்கள் வேலைசெய்யும் நேரத்தை காட்டிலும் அதிக நேரம் வேலைசெய்தால் தான் சரியான கண்காணிப்பை ஏற்படுத்த முடியும்.

ஒவ்வொரு விடயத்தையும் அக்கறையுடன் நோக்க வேண்டும். மற்றவர்களை அன்புடன் அரவணைத்து வேலைவாங்க தெரிந்திருக்க வேண்டும். இனிய சுபாவமும் இன்சொல்லும் மற்றவர்களை கவரும். அப்படியான தலைவனின் கட்டளைக்காக தொண்டர்கள் எப்போதும் ஆயத்தமாக காத்திருப்பார்கள். தொண்டர்களின் தனிப்பட்ட பிரச்சனைகளில் பரிவும் புரிந்துகொள்ளும் மனப்பாங்கும் இருக்க வேண்டும். அவர்களுக்கான தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்கு சித்தமாக இருக்க வேண்டும். மனக்கவலைகள் இன்றி உற்சாகமாக இருக்க வேண்டும். வீட்டுப்பிரச்சனைகளை தலைமேல் போட்டுக்கொள்பவராக இருக்க கூடாது. தாபனத்தின் இலக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கிய செயற்பாடுகள் சார்ந்த தரவுகள் மனப்பாடமாக இருக்க வேண்டும். ஒரு சந்தர்ப்பம் ஏற்படுமாயின் விலாவாரியாக தகவல்களை உடன் வழங்க ஆயத்தமாக இருக்க வேண்டும். அதற்கான நினைவாற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும். பொறுப்புக்கள் என்று வரும் போது அவற்றை தட்டிக்கழிக்க கூடாது. பிறர் மேல் தவறுகளை போடுதலும் ஆகாது. ஒரு தொண்டர் ஆற்றும் எந்த கருமமும் தலைமைத்துவத்தின் மேற்பார்வையிலேயே நடைபெறுமாதலால் எந்த தவறுக்குமே தலைமைத்துவமே பொறுப்பு வகிக்கவேண்டும். மேலும் கடினமான பொறுப்புக்களை தொண்டர்கள் மீது சுமத்தாமல் தானே ஏற்று செய்தல் வேண்டும். இந்நாட்களில் அனைத்து முயற்சிகளும் நிறுவன மயப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கான தலைமை எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றியே மேலே ஆராயப்பட்டது. ஆனால் பலதுறைகள் சரியான தலைமைத்துவத்தினை எதிர்நோக்கியுள்ளன. முக்கியமாக அரசியலில் பெரும் போட்டாபோட்டி நிலைமை அவதானிக்கப்படக்கூடியதாக உள்ளது. இன்று நேற்று அல்ல அன்றுதொட்டே பல நாடுகள் தலைமைத்துவத்திற்கான போட்டியில் ஈடுபட்டிருப்பதை எவரும் மறுக்க முடியாது. அதனால் தான் இருபெரும் உலக மகா யுத்தங்கள் நடந்து முடிந்துள்ளது. ஐம்பெரும் வல்லரசுகள் மற்றொரு உலக யுத்தத்திற்கு முகம் கொடுக்க கூடிய ஆயுத தயாரிப்புக்களில் ஈடுபட்டுள்ளன. இந்தியா, பாக்கிஸ்தான், கொரியா , உள்ளிட்ட பல நாடுகள் அணு பரிசோதனைகளில் வெற்றி பெற்றுள்ளன. இந்நாடுகளில் எல்லாம் அரசியல் நடவடிக்கைகள் சீராக இருக்க வேண்டுமாயின் நல்ல தலைமைத்துவத்தின் வழிகாட்டல் அவசியத்தின் மேல் அவசியமாகும். அல்லாத பட்சத்தில் இலட்சக்கணக்கான உயிர் அழிவுகளை உலகம் மீண்டும் எதிர்நோக்க வேண்டியதாகிவிடும்.

அடுத்து பட்டினிச்சாவு பல நாடுகளை ஆக்கிரமித்துள்ளது. விவசாயம் மருத்துவம் இரண்டு துறைகளுமே சரியான தலைமைத்துவத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் சனத்தொகை அதிகரிப்பிற்கு ஈடுகொடுக்க கூடிய வகையில் உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டுமாயின் புதிய திட்டங்கள் அமுலாக்கப்படவேண்டும். சோமாலியா உட்பட பல கறுப்பு இன மக்கள் வாழும் நாடுகள் உணவுப்பஞ்சத்தை எதிர்நோக்கியுள்ளன , சத்துணவு பற்றாக்குறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக பல கறுப்பின மக்கள் நோய்வாய்பட்டு சாகும் நிலைக்கு ஆளாகியுள்ளனர். அவர்களுக்கு வேண்டிய சத்துணவு கிடைக்கும் வண்ணம். செயலாற்றுவதுடன் அத்தியாவசிய மருத்துவ உதவிகளையும் வழங்க கூடிய தலைமைத்துவம் உருவாக வேண்டும்.

உலக பொருளாதாரம் வீழ்சியடைந்துள்ளமை பல பிரச்சனைகளுக்கும் அடிப்படையாக உள்ளது. வங்கித்துறை சீரமைக்கப்பட வேண்டும் ஏழை மக்களும் பண உதவி பெற்று முயற்சிகளில் ஈடுபடக்கூடியதாக புதிய தலைமைத்துவம் உருவாக வேண்டும். வேறுபாடு இன்றி அனைத்து மனிதர்களுக்குமே அடிப்படை வசதிகளான் உணவு, உடை , இருப்பிடம் ஆகியன கிட்டவேண்டும். இவ்வுலகில் ஒரு சாரார் ஆடம்பரத்தின் உச்சியில் இருக்க மறுசாரார் ஏழ்மையில் துவழ்வதானது என்ன நியாயம்.?

அண்மையில் 'த பினான்ஸ்' நிதி நிறுவனம் மத்தியவங்கியால் மூடி சீல்வைக்கப்பட்டது, 1940ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம் சரியான தலைமைத்துவம் இன்மையால் தொடர்ந்து நட்டத்தில் ஓடியது. பொது மக்களின் பணம் மில்லியன் கணக்கில் ஏப்பம் விடப்பட்டது. ஆறு இலட்சத்துக்கு உட்பட்ட வைப்புக்களை மீளளிக்க மத்தியவங்கி உடன்பட்டது. பல வைப்பாளர்களின் பணத்தை நிறுவனம் பலவந்தமாக பங்குசந்தைக்கு மாற்றி விட்டிருந்தது. அவர்களுக்கு மீளளிப்பு எதுவும் இல்லை என மத்தியவங்கி தெரிவித்தது.

சிறந்த தலைமைத்துவத்தின் அவசியத்தை பார்த்தீர்களா?...

மலைமுரசு 21.11.2015 - 27.11.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02 சத்தியம் காத்தலும் இரகசியம் பேணலும்.

'அப்பாடா...... அதெவற்றையும் எம்மால் கடைப்பிடிக்க முடியாதப்பா....' என்று நீங்கள் கட்டாயமாக தலையில் கையை வைப்பீர்கள்!

ஆனால் சத்தியத்திற்காக பல கஷ்டங்களையும் சோதனைகளையும் எதிர் கொண்டு இறுதிவரை வாழ்ந்த நாயகர்கள் இருவர் பற்றி எமது பெற்றோர் எமக்கு அறிவூட்டியிருக்கிறார்கள். ஒருவர் சத்தியவான் என பெருமையுடன் அழைக்கப்பட்ட அரிச்சந்திர மகாராஜா.... அடுத்தவர் எமது பெற்றோரின் காலத்திலேயே அவர்கள் கண்முன்பாக வாழ்ந்து 1948ல் இறைவனடி சேர்ந்த 'மஹாத்மா' என கொண்டாடப்பட்ட மோகனதாஸ் கரம் சந்திரகாந்தி ஆவார்.

'சத்தியவான் சாவித்திரி' நாடகத்தையும் 'சத்திய சோதனை' சுயசரிதை நூலையும் எமது பிள்ளைகள் கட்டாயம் பார்க்கவும் வாசிக்கவும் வேண்டும்.

சத்தியம் என்றால் என்ன?

சத்தியம் என்றால் குற்றமற்ற உண்மை அல்லது வாய்மை என கொள்ளல் வேண்டும்.

'பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்'

என வள்ளுவரும் கூறியுள்ளார். எனவே வாய்மை, சத்தியம் இரு சொற்களும் ஒரு பொருட் கிழவி என கருத வேண்டும்.

சத்தியம் பேசுவதை அறமாக கொண்ட மகான்களை பின் பற்றி நாமும் சத்தியம் பேச வேண்டும். அதுவே அறம்!

மக்கள் ஏன் பொய் பேசுகின்றார்கள் என்பதை புரிந்து கொண்டால் நாம் அத் தவறுகளிலிருந்து விலகி நடக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் தமது குற்றத்தை மற்றவர்கள் அறியார் என்றும் தனது பலம் குற்றங்களை மறைக்கும் என்றும் தம்மை துறந்தார் போல் காட்டியும் நடத்தலால் பல சந்தர்ப்பங்களில் பொய் பேச நேரிடுகின்றது. அதேபோல் பிறர் பொருளை வஞ்சனையால் கவர்பவர்களும் பொய் பேசுகின்றனர்.

எனவே வஞ்ச மனம் கொண்டு நடப்பதை முதலில் நாம் தவிர்க்க வேண்டும். அதுவே சத்தியம் காத்தலில் பிரவேசிக்க தீர்மானித்திருக்கும் எமக்கான முற்று முழுதான பயிற்சி!

அடுத்து இரகசியம் காத்தல் பற்றி ஆராய்வோம். இரகசியம் என்பது மூன்று நிலைகளில் அவதானிக்கற்பாலது.

ஒன்று தனிநபர் சார்ந்தது..... இரண்டாவது இருவர் சார்ந்தது..... மூன்றாவது இரண்டுக்கு மேற்பட்டோர் சார்ந்தது.

தனி நபர் சார்ந்த இரகசியம் காத்தல் இலகுவானது. ஒருவர் தான் சார்ந்த எந்த உண்மைகளையும் மற்றவர்களுக்கு மறைப்பதில் கஷ்டம் இல்லை. அந்த இரகசியம் நன்கு பேணப்படும். அதற்கு உறுதுணையாக கனடா போன்ற நாடுகளில் ஒருவரது மருத்துவ அறிக்கையை அவரது தாய் கூட மருத்துவமனையிலிருந்து பெற முடியாது!

அடுத்து இருவர் சார்ந்த இரகசியம் பேணல் நிலை. இதுவும் ஓரளவு பாதுகாப்பானதே. பெற்றோர்-பிள்ளை,கணவன்-மனைவி, நண்பர்கள் இருவர் என்ற பாசப் பிணைப்புகளுக்கிடையே இரகசியத்தை காத்தல். அங்கு பாசம்.... காதல்.... நட்பு காரணமாக இரகசியத்துக்கு குந்தகம் நேராமல் தடுக்கப்படுகின்றது.

ஒரு பெண்ணானவள் தனது மானம்..... மரியாதை.... கௌரவம்.... அனைத்தையும் தனது கணவனுக்கு அர்ப்பணிக்கிறாள். அதற்கு காரணம் கணவன் - மனைவி தம் இருவருக்கும் இடையே உள்ள இரகசியம் காக்கப்படும் என்கின்ற அவளது நம்பிக்கையே அல்லவா!

அடுத்து இருவருக்கு மேற்பட்டோர் சார்ந்த இரகசியம் பேணல் நிலை. மிகவும் ஆபத்தான நிலை! பல சாம்ராஜ்யங்கள் சாய்ந்து விட்டன.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னமும் சாயக் காத்திருக்கின்றன! தமது மனைவியரான இளவரசிகள் மெய்ப்பாதுகாவலருடன் சோரம் போய்விடக்கூடிய சந்தர்ப்பத்தில் இரகசியங்கள் கசிந்து விடும் என பயந்து திருநங்கைகளை மெய்பாதுகாவலராக வைத்திருந்த மன்னர்கள் பற்றி அறிந்திருக்கின்றோம்.

இருவருக்கிடையே உள்ளதே இரகசியம்...... இருவருக்கு மேற்பட்டுவிட்டால் அது பரகசியம்!

இந் நிலைபற்றியே நாம் விழிப்பாக இருக்க வேண்டும்! எமது எதிரிகள் எம்மை பழிவாங்க வாய்த்த நிலை இதுவேயாகும். 'அவர் சொன்னார்.... இவர் சொன்னார்' என்று எம்மைப்பற்றிய இரகசியங்களையெல்லாம் கசியவிட அவர்களுக்கு வேறு என்ன சந்தர்ப்பம் வேண்டும்?

இப்போ மீண்டும் சத்தியம் பற்றி சிந்தித்து பாருங்கள். சத்தியம் பேசும் எவனாவது மற்றவர்களுக்கு தீங்கை உண்டுபண்ணக் கூடிய வகையில் அவர்கள் பற்றிய இரகசியங்களை கசிய விடுவானா? இல்லவே இல்லை!

எனது நண்பரான மூத்த எழுத்தாளர் ஒருவர் 2006ல் வடக்கு கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தித் திணைக்களத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தார். திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்தின் சாகித்திய விழா குழுவில் அங்கத்தவராக இருந்த 'அனாஸ்' என்கின்ற மற்றொரு எழுத்தாளர் அவரிடம் ஒரு படிவத்தை கொடுத்து அதை பூர்த்தி செய்து கிராம சேவை உத்தியோகத்தரின் கையொப்பத்தைப்பெற்று பிரதேச செயலகத்தில் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் அவருக்கு இவ்வாண்டுக்கான பிரதேச செயலர் விருது வழங்கப்படும் என்று உறுதி கூறினார். அந்த மூத்த எழுத்தாளரும் அப்படியே செய்தார். ஆனால் அவர் அங்கு தவறொன்றினை இழைத்தார். இந்த விபரத்தை மற்றொரு எழுத்தாளரும் சாகித்திய விழா குழுவில் அங்கத்தவராகவும் இருந்த தனது நண்பருக்கு கசிய விட்டார். தெரிவுக்குழுவில் இருப்பவர்களுக்கு விருது வழங்கப்படக்கூடாது என்பது நியதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பினும் அவருக்கு விருது வழங்கப்பட்டது! தெரிவுக்குழுவிலிருந்து அவரை இராஜினாமா செய்யவைத்ததன் மூலம் அது சாத்தியமானது!

மூத்த எழுத்தாளரான எனது நண்பருக்கு விருது கிடைக்கவில்லை. ஆனால் அவருக்கு 2008ல் எழுத்தாளர் கௌரவிப்பு விருதும், 2010ல் கலாபூசணம் விருதும், 2011ல் முதலமைச்சர் விருதும் கடந்த 28.06.2014ல் நகர முதல்வர் விருதும் கிடைத்தன!

ஆனால் இன்றுவரை பிரதேச செயலாளர் விருது கிடைக்கப் பெறாமைக்கு காரணம் இரகசியம் பேணலில் அவர் விட்ட தவறேயல்லவா!

மலைமுரசு வாரமலர் - 26.07.2014 - 01.08.2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03 ' அரட்டை அடித்தலும் விதண்டாவாதம் பேசுதலும்.'

மனிதன் செய்வதில் பாதி கருமங்களையாயினும் மிருகங்கள் பறவைகள் உட்பட ஏனைய உயிர்வாசிகளால் செய்ய முடியும். எம்மைப்போலவே அவை உணவு உண்ணுகின்றன. எம்மைப்போலவே குடும்ப வாழ்க்கை வாழ்கின்றன. தமது சகாக்களை அண்டியும் அரவணைத்தும் வாழ்கின்றன. நல்ல வேளையாக அவற்றால் செய்ய முடியாத காரியம் அரட்டை அடித்தலும் விதண்டாவாதம் பேசுதலுமாகும். அதனால்தான் காடுகள் இன்றுவரை முற்றாக தீப்பிடித்து எரியாமல் இருக்கின்றன!

மனிதன் உயிர்வாழ்வதற்கு எத்தனையோ அத்தியாவசிய தேவைகள் இருப்பினும் அவன் அன்றுதொட்டு இன்றுவரை அரட்டை அடிப்பதிலும் விதண்டாவாதம் பேசுவதிலும் அதிக அளவு கண்ணும் கருத்துமாக இருப்பது ஆச்சரியமாக உள்ளது.!

அரட்டை அடித்தல் என்று கூறியதுமே நினைவுக்கு வருவது பெண்கள் தண்ணீர் சேகரிக்கும் குழாயடியே!.

சொல்லப்போனால் பத்திரிகை படித்தல், வானொலி கேட்டல், தொலைக்காட்சி பார்த்தல் ஆகிய பொழுதுபோக்கு அம்சங்களெல்லாம் சுவையில் அரட்டை பேசுதலுக்கு கிட்டவும் வரமுடியாது. நீர் குழாயில் ஒன்று கூடும் பெண்கள் புதினங்களை ஏனையோருடன் வெறுமனே பகிர்ந்து கொண்டால் அது எந்த பிரச்சனையையும் கொண்டுவராது. அதுவல்ல அரட்டை என்பது. சம்பவங்களை ஊதிப்பெருப்பித்து கதைகள் கட்டுவதையே உண்மையான அரட்டை என கூற முடியும்.!

அரட்டை பேசுவதற்கு குழாயடி ஒன்றும் கட்டாயமில்லை. கோயில், சந்தை, கடற்கரை என்று எங்கெல்லாம் ஒரு சாட்டுடன் ஒன்று கூட முடியுமோ அங்கெல்லாம் அரட்டை பேச முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர அரட்டை பேசுவதற்கு பெண்களால்தான் முடியும் என்று ஒரு நிலையும் இல்லை. ஆண்களாலும் அரட்டை பேச இயலும். அவர்கள் அரட்டை பேசும் பிரதான இடங்களாக கள்ளுக் கொட்டில் , மரண வீடுகள் , சீட்டாடும் இடங்கள் , அலுவலகங்கள் ஆகியவை அமையும்.

அரட்டை அடித்தலின் பிரதான இலக்கு பொழுதுபோக்கு தான். அரட்டை அடிப்பவர்களின் வாய்க்கு அவலாக இருக்கும் விடயங்கள் காதல் வலையில் விழுந்த கன்னிப்பெண்கள் . உறவில் விரிசல் ஏற்பட்ட கணவன் மனைவி மற்றும் குடும்பச்சண்டைகள். காதலிப்பது ஒன்றும் தவறான காரியமல்ல. ஆனால் அரட்டை அடிப்பவர்கள் ஒரு பெண்ணை மையப்படுத்தி பழி சொல்லி கதைப்பதுடன் கட்டுக்கதைகளையும் அவிழ்த்துவிடுவதால் ஈற்றில் அப்பெண் தற்கொலை செய்யுமளவில் முடிவதுதான் கவலை தருவதாகும். ஒரு பெண் பிள்ளையை வளர்த்து ஆளாக்க பெற்றோர் சகோதரர்கள் எவ்வளவு பொறுப்பு எடுக்கிறார்கள். ஆனால் அக்கறை எதுவுமின்றி ஒன்றை இரண்டாக்குவதால் பல விபரீதங்கள் ஏற்படுவதை அரட்டை அடிப்பவர்கள் பொருட்படுத்துவதில்லை.

அரட்டை அடிப்பவர்களின் பொறுப்பற்ற பேச்சுக்களால் காதலர்கள் மட்டுமல்ல பெற்றோர் சகோதரர்களும் ஆத்திரமூட்டப்படுகிறார்கள். சாதி இன மத குரோதங்கள் இழுத்துப் பேசப்படுவதால் பகைமை உணர்வு வளர்வதுடன் பிரச்சனைகள் மனிதாபிமான அடிப்படையில் நோக்கப்படாமல் கொலை செய்யுமளவுக்கு மோசமாகின்றன.

அடுத்து கணவன் மனைவி உறவென்பது தெய்வீகமானது. அவர்களிடையே ஏற்படும் ஊடல்கள் உறவை வளர்க்க பயன்படுமேயன்றி பிளவை கொண்டுவராது. ஆனால் அரட்டை அடிப்பவர்களின் காதுக்கு கணவன் மனைவி சண்டை பற்றி ஒரு சின்ன செய்தி எட்டினால் போதும். அதை ஊதி பெருப்பித்து விடுவார்கள். கணவனுக்கு வேறு தொடர்புகள் இருப்பதாகவும் மனைவிக்கு கள்ள தொடர்பு இருப்பதாகவும் சம்மந்தப்பட்டவர்களுக்கு அச்செய்தி போய் சேருமளவிற்கு செய்து விடுவார்கள். அதனால் பல மணமுறிவுகள் நேர்ந்துள்ளன.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து கிராமங்களில் குடும்பங்களிடையே சண்டை ஏற்படுவதும் சமாதானமாவதும் சகஜமான விடயங்களேயாகும். ஆனால் அவற்றை ஊதிப் பெருப்பித்து குடும்பங்களுக்குள்ளான விரிசலை மேலும் வளர்ப்பது அரட்டை அடிப்பவர்களின் கைங்கரியமே.

மறுபக்கமாக அரட்டை அடிப்பவர்களின் நோக்கம் என்ன என்பது பற்றி நாம் தெரிந்துகொள்வதன் மூலம் பல சிக்கல்களில் இருந்து தப்ப முடியும்.

அரட்டை அடிப்பவர்கள் பிறர் மேல் குற்றங்களை சுமத்துவதன் மூலம் தமது பெருமையை நிலைநாட்டிக்கொள்வதை நோக்கமாக கொண்டிருப்பர். தமது சில தப்புக்களை மூடி மறைக்க பார்ப்பர். ஊரில் வதந்திகளை பரப்புவதன் மூலம் மக்களை அச்சுறுத்தி தமக்கு சாதகமான நிலைப்பாட்டை உறுதி செய்து கொள்வர். யார் யாருக்கிடையில் சண்டையை மூட்டிவிட முடியும் என்று கணக்கிட்டு கதை கட்டுவர். தமக்கு சாதகமில்லாத விடயங்கள் ஊரில் நடைபெறுவதை தடுப்பர். தமது பகையாளிகளை பழிவாங்க மற்றவர்களை தூண்டுவர்.

இந்திய தொலைக்காட்சி சேவையில் ' நீயா ? நானா ? நிகழ்ச்சியில் இரு தரப்பினரை வருவித்து ஏறத்தாள அரட்டை அடிக்க வைக்கின்றனர்.

அண்மையில் கணவன்மார் ஒரு பக்கமும் மனைவிமார் ஒரு பக்கமாகவும் கலந்து கொண்ட ' நீயா ? நானா ? ' நிகழ்ச்சி இடம்பெற்றது. ஆச்சரியம் என்ன வென்றால் கணவன் மனைவி இருவரும் வீட்டில் தமக்குள் பகிர்ந்து கொள்ளாத பல விடயங்களை அந்த நிகழ்ச்சியில் போட்டுடைத்தார்கள். உதாரணமாக கணவன் தான் மனைவியுடன் வெளியே செல்லும் போது கவர்ச்சியாக உடையணிந்து அழகாக தோற்றமளிக்கும் பெண்களை மனைவிக்கு தெரியாமல் பார்ப்பதுண்டு என்ற உண்மையை போட்டுடைத்தார்!. அதே போன்று மனைவி தான் தனது கணவர் யார் யாரைப் போல இருந்தால் நல்லது என தான் சிந்திப்பதை கணவனுக்கு கூறுவதில்லை என்ற உண்மையை போட்டுடைத்தாள்!. அவர்களெல்லாம் வீட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த முகத்துடன் சந்திப்பார்கள் என்று எண்ண ஆச்சர்யமாக உள்ளது. பாருங்கள் அரட்டை எவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்துள்ளது.

'அரட்டையடித்தலின் ' மற்றுமொரு உடன் பிறப்புதான் ' விதண்டாவாதம் பேசுதல்' என்பது. உண்மைக்கு புறம்பான விடயம் ஒன்றை உண்மை என்று சாதித்தல். கடவுள் இருக்கிறார் என்பது அதிகமானோரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. 'கடவுள் என்றொருவர் இல்லவே இல்லை ' என்று சாதித்தால் விதண்டாவாதமாகும். ' ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர், குருமகராஜி, சத்தியசாய் பாபா, சின்மயானந்தா ஆகியோரை உலகமே போற்றி தொழுகின்றது. அவர்களுடைய போதனைகளை யாராவது மறுத்து பேசுவார்களேயானால் அதை விதண்டாவாதம் என்றே சொல்லவேண்டும்.

விதண்டா வாதத்தை நீங்கள் நேருக்கு நேர் சந்திக்க விரும்பினால் ஒரு நாள் பாராளுமன்ற அமர்வுக்கு செல்லுங்கள். அரசியல் வாதிகளுக்கு மத்தியிலேயே விதண்டாவாதம் மிகவும் பிரபல்யம் பெற்று விளங்குகின்றது!.

இனி பட்டிமன்றங்கள் பல சந்தர்ப்பங்களில் தமது பக்க நியாயத்திற்கு வலு சேர்க்க விதண்டாவாதத்தையே துணைக்கு அழைக்கின்றனர்.

நீதி மன்றங்களில் கூட விதண்டாவாதம் காணப்படுகின்றது.

சுமார் நாற்பது வருடங்களுக்கு மேல் என்று நினைக்கின்றேன். 'ராஜ்' என்ற பெயராலும் 'சக்கடத்தார்' என்ற பெயராலும் இலங்கையில் சிறந்த நகைச்சுவை நாடக நடிகர் என பெயர் பெற்றிருந்த எனது மாமனார் ராஜரட்ணம் அவர்களின் ' ஆச்சிக்கு சொல்லாதே' நாடகத்தில் ஒரு கட்டம். சிங்கள வேலைக்காரன் பாத்திரத்தில் தோன்றும் அவர் அவருக்கு உரித்தில்லாத காணி ஒன்றிற்குள் விழுந்து கிடக்கும் தேங்காய்களை எடுத்துச் சென்றுவிடுவார். காணி சொந்தக்காரியான ஆச்சி அவரை அதட்டி விசாரிக்கின்றார். ' ஏன் என்ரை காணிக்கை தேங்காய் திருடுகிறாய் ? வேலைக்காரனின் பதில் ' தேங்காய் காலுக்கை கிடந்து தடக்குப்பட்டுது.... அதுதான் எடுத்துக்கொண்டு போனனான்' ஆச்சி மீண்டும் அதட்டுகிறா.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலுக்கை கிடந்து தடக்குப்பட்டால் அதை ஒரு பக்கம் தட்டிப்போட்டு நீ போறதுதானே?' பதில் , ' அது மற்றவைக்கும் தடக்குப்படும் எண்டுதான் எடுத்துக்கொண்டு போனனான்'

நகைச்சுவையில் கூட விதண்டாவாதம் எப்படியெல்லாம் பயன்படுகிறது என்பதை சற்று பாருங்களேன்.!

மலைமுரசு வாரமலர் - 30.05.2015 - 05.06.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04 "அரசியல்வாதிகளும் கல்விமான்களும்."

ஒரு நாடு சர்வதேச மட்டத்திற்கு உயர்ச்சியடைய வேண்டுமாயின் அங்கு நல்லாட்சியும் நாகரீக வளர்ச்சியும் நீடிக்கவேண்டும். இந்த இரண்டு அம்சங்களுக்குமே அடிப்படைக்காரண கர்த்தாக்களாக இருக்க கூடியவர்கள் அரசியல்வாதிகளும் கல்விமான்களுமாகும்.

ஒரு நாட்டின் நிர்வாகம் அரசியல் முறைமையிலும் அதனை கொண்டு நடாத்தும் அரசியல் வாதிகளினதும் கையில் தான் உள்ளது. அண்மைக்கால அரசியல் பின்னணிகளை நோக்கினாலும் கூட மன்னராட்சியில் இருந்து சோசலிச ஆட்சி வரையிலான நிர்வாகத்தின் கீழ் பல நாடுகள் அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. அதே சமயம் இராணுவ பலத்துடனான சர்வாதிகார ஆட்சி மக்களையும் நாட்டையும் அழிவுப்பாதைக்கு இட்டுச்சென்றமைக்கான ஆதாரங்களும் உள்ளன. நீண்ட கால அரசியல் நோக்கில் பார்க்குமிடத்து ஜனநாயகமானது சர்வதேச மட்டத்தில் சிறப்பான இடத்தை பிடித்திருக்கின்றது என்று கூறலாம். ஜனநாயகம் என்பதன் பொருள் மக்கள் மக்களை மக்களுக்காக ஆட்சி செய்யும் அரசியல் முறையாகும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பாராளுமன்ற முறைமையின் கீழ் நாட்டை நிர்வகிப்பர். தீர்மானங்கள் பெரும்பான்மை பலத்தை வைத்து முடிவு செய்யப்படும். ஜனநாயகமுறை ஆட்சியில் பல குறைபாடுகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. அதில் ஒன்று ஒன்பது கல்விமான்களின் தீர்மானத்தை நிராகரித்து பத்து அறிவிலிகளின் முடிவை ஏற்று அமுல்படுத்துவதாகும். அடுத்து மக்களின் பிரதிநிதியாக ஒருவர் தெரிவுசெய்யப்பட்டுவிட்டால் மறுதேர்தல் வரை அவரை தட்டிக்கேட்பதென்பது இயலாதகாரியம்.

இன்று எமது நாட்டில் நடந்து கொண்டிருப்பது இந்த இருவகை தவறுகளுமே ஆகும்! அதனால் தான் பள்ளிவாசல்களும், தேவால யங்களும், மற்றும் கோயில்களும் தகர்க்கப்படுவதும் கூட ஏதோ ஒரு விதத்தில் யாரோ ஒரு சாராருக்கு நியாயப்படுத்தப்படுகின்றது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து எமது தேசம் பல்லின மக்களை கொண்டது. சிங்களம் மட்டும் எழுபத்திரெண்டு சதவீதமாகும் இந்த நிலையில் இந்த நாட்டில் எடுக்கப்படும் எந்த முடிவும் பெரும்பான்மையினத்தவரின் அபிலாசைகளை அடிப்படையாக கொண்டதாக அமையுமே அல்லாமல் எந்த சிறுபான்மையினத்தவரின் எந்த ஒரு குறைந்த பட்ச கோரிக்கையையாயினும் நிறைவேற்றும் வகையில் அமையாது. அதனால் தான் வடக்கு கிழக்கு இணைப்பும் முஸ்லிம் மக்களின் தனிமாவட்ட அலகும் இந்திய தமிழர்களின் தனிவீட்டு வசதிக்கோரிக்கையும் வெற்றியளிக்கவில்லை. இந்த நிலைமைக்கு சிறுபான்மையினர் உள்ளாகக்கூடாது என்பதற்காக தான் ஜி.ஜி.பொன்னம்பலம் போன்ற அரசியல்வாதிகள் பாராளுமன்றத்தில் 50க்கு 50 என்ற பிரதிநிதித்துவத்தை கோரினார்கள். அது மறுக்கப்பட்டதன் விளைவையே இன்று நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.

பெரும்பான்மை அரசியல்வாதிகள் பகுத்தறிவுடன் முடிவெடுக்காமல் ஆட்பலத்தை மட்டும் வைத்து முடிவெடுக்கும் நிலைமை முற்றாக மாறவேண்டும். முன்நாட்களில் எமது தமிழ் அரசியல்வாதிகள் சட்டத்தரணிகளாக இருந்துள்ளார்கள். அதனால் அரசியல் வானில் நன்கு பிரகாசித்தனர். இது நல்தொரு நோக்கத்தை அடிப்படையாக கொண்டதென்றே கூறவேண்டும். அரசியல்வாதிகள் தமது கல்வியறிவை மேம்படுத்துவதன் மூலம் தாம் பெரும்பான்மை யினத்துக்கு மட்டும் செய்யும் சேவையினை இந்நாட்டு சிறுபான்மை யினத்தவருக்கும் எட்ட செய்யவேண்டும்.

அப்போதுதான் தமிழர்கள், முஸ்லீம்கள் , இந்திய தமிழர்கள் கூட தமது மத கலாச்சாரங்களை பேணிப்பாதுகாக்கும் அதே நேரத்தில் 'நாம் இலங்கையர்கள்' என்ற கோஷத்துடன் ஒன்றிணைவர்.

அடுத்து எமது நாட்டு கல்விமான்கள் எமக்கு எவ்வளவு தூரம் சேவையாற்றுகின்றார்கள் என்பதை பார்ப்போம்.

'Brain Drain' என்று ஒரு ஆங்கில சொல் உண்டு. ஒரு நாட்டின் தொழில்நுட்ப வல்லுனர்களும் விஞ்ஞானிகளும் கல்விமான்களும் அயல் நாட்டுக்கு போய் விடுவதை இச் சொல் குறிக்கும். இது ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுக்கு மட்டுமன்றி ஒரு சமூகத்துக்கும் பெரும் சாபக்கேடாக அமைகின்றது!

இலங்கையில் அன்றுதொட்டு இலவசக்கல்வி நடைமுறையில் உள்ளது. ஏழைகள் பணக்காரர் என்ற பேதமின்றி இந்த சலுகை வழங்கப்படுவதற்கு காரணம் மாணவர்கள் அனைவரும் நாலு எழுத்து எழுத படிக்க கற்றுக்கொள்ளட்டும் என்ற எண்ணம் அல்ல. எமது நாட்டில் தொழில் நுட்ப வல்லுனர்களும் விஞ்ஞானிகளும் உருவாக வேண்டும் என்ற எதிர்பார்ப்பே அந்த ஊக்குவிப்புக்கு காரணம். ஆனால் என்ன நடக்கின்றது? பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் போதே வெளிநாட்டுக்கு எப்படி போகலாம் என்ற சிந்தனைதான் மாணவர்களின் மனதில் இருக்கின்றது.

கற்கை முடிந்தபின் குறிப்பிட்ட காலம் நாட்டில் சேவையாற்ற வேண்டும் என்ற ஒப்பந்தத்திற்கும் மாறாக தந்திரமாக நாட்டை விட்டு பலர் வெளியேறிவிடுகிறார்கள்.

அதே சமயம் கற்கை விசாவில் வெளிநாடு செல்லும் மாணவர்கள் தமது கற்கை முடிந்து தாம் திரும்ப வேண்டிய நேரம் வந்ததும் அந்த நாட்டில் மாறிவிடுகிறார்கள். பணம் சம்பாதிப்பதும் சொகுசு வாழ்க்கையும்தான் அவர்கள் நோக்கமாக இருக்கிறதேயல்லாமல் எமது நாட்டுக்கும் சமூகத்துக்கும் சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடம் கிஞ்சித்தும் கிடையாது.

பொறியியல், மருத்துவம் இரண்டுமே மிக முக்கியமான துறைகள். இத் துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்கள் எம் மத்தியில் இல்லையென்றால் விஞ்ஞானிகள் எப்படி உருவாக முடியும்?

அதனால்தான் பாலங்கள் அமைப்பதற்கும் கட்டடங்கள் வீதிகள் அமைப்பதற்கும் ஜப்பானியர்களையும் சீனர்களையும் வரவழைக்கிறோம்.

இனி வெளிநாட்டில் மருத்துவ கற்கை நெறியை கற்கும் எமது மழலை செல்வங்கள் தமது திறமையை வெளிக்காட்ட எமது சமூகத்துடன் வந்தா இணைகின்றார்கள்? இல்லவே இல்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இடத்தில் ஒரு அனுபவத்தை பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கின்றேன். எனது நண்பனின் மருமகள் முறையான சிறுமி ஒருத்தி தனது ஆரம்ப கல்வியை கனடாவில் மேற்கொண்டார். ஆங்கிலத்தில் தனது பட்டப்படிப்பை முடிக்கும் தறுவாயில் அவளது நண்பி ஒருத்தியுடன் இணைந்து அமெரிக்காவில் மருத்துவ கல்வியை தொடர்ந்தாள். அது இலவசக்கல்வி அல்ல. பெரும் பணச்செலவுடன் கற்கை நெறியை பூர்த்தி செய்ய ஐந்து வருடங்கள் ஆயின. எமது நாட்டில் என்றால் உடன் அரச நியமனமும் உயர்சம்பளம், அலவன்ஸ் மற்றும் விடுதி வசதிகள் வாகன வசதிகள் வழங்கப்படும். அமெரிக்காவில் அப்படியல்ல. அங்கு தனியார் வைத்திய நிலையங்கள் ஏராளமாக இருக்கின்றன. அதேசமயம் மக்கள் தமது மருத்துவ வசதிகளுக்காக காப்புறுதி செய்திருப்பார்கள். வைத்திய நிலையங்கள் ஒவ்வொன்றும் குறிப்பிடப்பட்ட குடும்பங்களின் மருத்துவ தேவைகளை பொறுப்பேற்று பராமரிக்கும். அதற்கான கொடுப்பனவுகள் எவருக்கும் நோவின்றி காப்புறுதி 'கம்பனி'களால் வழங்கப்படும்.

இப்படியான வைத்திய நிலையங்கள் புதிதாக வெளிவரும் மருத்துவதுறை மாணவர்களை இணைத்துக்கொள்ள வருடமொரு தடவை ஒன்றுகூடல் விருந்துபசாரம் ஒன்றை வழங்குவார்கள். அந்த விருந்துபசாரத்தில் புதிய மருத்துவதுறை மாணவர்கள் கலந்து கொண்டு மற்றவர்களுடன் இணைந்து செயல்படும் முறையை அவதானித்து தத் தம் நிறுவனங்களில் இணைத்துக்கொள்ள விரும்பும் மாணவர்களின் பெயரை பட்டியலிட்டு முடிவை இணையத்தில் அறிவிப்பர். அதில் ஒரு வருடம் தெரிவாகாவிட்டால் அடுத்தடுத்த வருடங்களுக்காக காத்திருக்க வேண்டி ஏற்படும்.

தெரிவு செய்யப்பட்டால் குடும்ப வைத்தியர்களாக பணிபுரிந்து சம்பாதிக்கலாம்.

எல்லாமே எமது தலைவிதி தான் என்று எண்ண தோன்றுகின்றதா?

மலைமுரசு வாரமலர் - 10.01.2015 - 16.01.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05 "அறிவை பகிர்தலும் ஆற்றலை வளர்த்தலும்."

மக்களில் அனேகம் பேர் சமூகத்துடன் எந்த ஒரு அறிவு பகிர்தலுமின்றி வாய் பேசா மௌனிகளாக ஒதுங்கி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இங்கு அறிவு பகிர்தல் என்று குறிப்பிடப்படுவது மக்களாகிய நாம் நண்பர்கள், சமூகம் ஆகியவர்களிடையே அறிவை குறிப்பாக தகவல்கள், செய்திகள், ஆற்றல்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுதலையேயாகும். மனிதன் சிந்திக்கும் ஆற்றல் படைத்தவன். நாகரீக வளர்ச்சி.... விஞ்ஞான வளர்ச்சி மற்றும் அனைத்து அறிவியல் வளர்ச்சிகளுக்கும் அடிப்படையானது மனிதனின் சிந்தனைத்திறனே!

அறிவானது அனேகமாக செய்தியின் உயர் வடிவமாகும். எமக்கு செய்திகள் எப்படி கிடைக்கின்றது? நிச்சயமாக அறிவு பகிர்தல் மூலமே ஆகும். உலகின் மீதான எமது பார்வை, நாம் உலகைக்காணும் விதம், மனத்தில் ஏற்படும் பதிவு அவை மீதான எமது சிந்தனை ஆகியவையே அறிவுக்கான வித்துக்களாகும். அந்த வித்து விருட்சமாக வளர்வதில்தான் எமது சிந்தனைத்திறன் தங்கியுள்ளது. அறிவென்பது என்னவென்றால் செய்திகளையும் அனுபவங்களையும் எப்படி அறிவது, ஏன் அறிவது என்பது பற்றியதாகும். நாங்கள் எதை எவ்வளவு தூரம் அறிவோம் என்பதை நாம் அறியமாட்டோம். அறிவு பகிர்தல் ஒன்றுதான் எமது சிந்தனைகளை கூர்மையாக்க வல்லது.

அறிவே சக்தி என்று கூறுவார்கள். உண்மையில் அறிவு பகிர்தலே சக்தி என கொள்ள வேண்டும். எமது அறிவையும் அனுபவங்களையும் நாம் மற்றவர்கள் முன் வைக்க வேண்டும். எமது நண்பர்கள், சக உத்தியோகத்தர்கள், அதிகாரிகள் மற்றும் நாம் பழகும் அத்தனைபேருமே எமது கருத்துக்களுக்கான சாதக பாதக தன்மைகளை எமக்கு எடுத்துரைக்க இடம் தரவேண்டும். அப்போது எமது அறிவு கூர்மை அடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக அளவு அறிவு தொடர்பாடலால் நாமே மிகுந்த நன்மை அடைகின்றோம். எமது சுய ஆற்றல் அதிகரிக்கின்றது. அலுவலகத்திலும் சமூகத்தின் முன்னும் எமது திறமை வெளிப்படும், பாராட்டுக்கள் குவியும், விருதுகள் தேடிவரும்.

எமது அறிவை சரியாக உறுதி செய்து கொள்வதற்கு இரண்டு வழிகள் உண்டு. அவைதாம் கலந்துரையாடல். ஏனையது எழுதுதல். இந்த இரண்டு வழிகளையும் நாம் பயிற்சி செய்ய வேண்டும். கலந்துரையாடல் எமது கருத்துக்களுக்கு எதிர்க்கருத்துக்களை தோற்றுவிக்க வல்லது. அதே போன்று எழுதுவதன் மூலம் எமது கருத்துக்கள் வலுப்பெறும். ஒரு கட்டுரையை, கதையை, கவிதையை எல்லோராலும் வடிக்க முடியாது. அறிவுபூர்வமான தெளிந்த சிந்தனை அதற்கு அவசியம். உங்கள் அறிவை எடைபோடுவதற்கு கலந்துரையாடலும் எழுத்தாற்றலுமே சிறந்த வழிகளாகும். அந்த ஆற்றல்கள் ஒரு சிலருக்கே கைகூடும். எம்மால் முடியாதப்பா என்று ஒதுங்கியிருக்கக் கூடாது. முயற்சித்தால் முடியாதது எதுவும் இல்லை அல்லவா? கட்டாயமாக முயற்சிக்க வேண்டும். இந்த உலகில் வலுவானவர்களாக நாம் வளர வேண்டுமானால் எமது ஆற்றல்களை வளர்க்க வேண்டாமா? எமது இலக்கை பூர்த்தி செய்யும் திறன் எம்மில்தான் அதிகம் தங்கியுள்ளது.

எமது அனுபவங்கள் மிக மிக பெறுமதி வாய்ந்தன. அவைபற்றி நாம் அசட்டையாக இருப்போமாயின் எமது அறிவும் அதன் நிமித்தமான ஆற்றலும் எமக்கு கிட்டாமல் போய்விடும். எமக்கு கிடைக்கப்பெறும் அனுபவங்களில் நாம் முன்னர் அறியாத பல செய்திகள் புதைந்து கிடக்கும். சரியான முறையில் சிந்திப்பதன் மூலமும் அவைபற்றி மற்றவர்களுடன் கலந்துறையாடுவதன் மூலமும் அவை வெளிப்படும்.

மக்களில் அனேகம் பேரிடம் ஒரு தவறான சிந்தனை இருக்கின்றது. அது மற்றவர்களிடம் தமது அறிவுப் பற்றாக்குறையை காட்டிக்கொள்ளக்கூடாது என்ற தவறான எண்ணம். எனவே மற்றவர்களிடம் தமது ஐயங்கள் குறித்து கேள்விகள் கேட்பதை தவிர்கிறார்கள். உண்மையில் கேள்வி கேட்பவன் அந்த சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாடிகள் மட்டுமே முட்டாளாகின்றான். கேள்வி கேட்காதவன் அந்த ஐயம் தெளிவுறும் வரை அல்லது வாழ்க்கை பூராகவுமே முட்டாளாக இருக்க நேர்கின்றது. கேள்விகள் வாயிலாகவே பல சிந்தனைகள் உருவாகின்றன. கேள்விகள் எழும்போதுதான் பல சந்தேகங்களுக்கு விடை கிடைக்கின்றது. எமது வாழ்க்கையில் எந்த ஒரு விடயத்தையிட்டும் ஐயம் இருக்குமாயின் எமது முன்னேற்றம் தடைப்படும். ஆனால் மற்றவர்களுடன் கலந்துரையாடும் போது அந்த தடை தகர்த்தெறியப்படும் என்பதை மக்கள் ஒவ்வொருவரும் மனத்தில் இருத்திக் கொள்ள வேண்டும்.

மக்களில் அனேகம் பேர் ஒரு அலுவலகத்தில், நிறுவனத்தில், வியாபாரதலத்தில் அல்லது ஏதாவதொரு பொதுப்பணியில் ஈடுபடுபவர்களாகவே இருப்பார்கள். அவர்கள் பதவி நிலை உத்தியோகத்தர்களாகவோ, மேற்பார்வையாளர்களாகவோ, தொழில் நுட்பவியலாளர்களாகவோ, முகாமைத்துவ உதவியாளர்களாகவோ இன்னும் பல பொறுப்புக்களில் அமர்த்தப்பட்டிருப்பர். அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட பொறுப்புக்கள் பல இருக்கும். அவற்றை திறமையுடன் கையாள்வதில்தான் அவர்களது எதிர்கால சுபீட்சம் தங்கியிருக்கும். அதற்காக அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் தமது சகாக்களுடன் தவறாது கருத்து பரிமாறல் செய்வதுதான். எந்த ஒரு பதவியில் இருப்பவரும் ஒரு காரியத்தை செய்வதற்கு முன்பாக தான் திட்டமிடுவது என்ன என்று பிறருக்கு கூறுவது சிறந்த வழியாகும்.

இன்னும் சொல்லப்போனால் எவரும் முன்வந்து மற்றவர்களின் உதவியைக் கோர தயங்கக்கூடாது. பல அனுபவஸ்தர்கள் ஒவ்வொரு நிறுவனத்திலும் பணி புரிந்து கொண்டிருப்பர். மற்றவர்கள் ஒரு விடயம் குறித்து எவ்வளவு தூரம் அறிந்துவைத்திருப்பர் என்பதை அவர்கள் ஊகிக்க முடியாதவர்களாக மௌனம் காப்பார்கள். யாராவது முன்வந்து உதவி கேட்டால் உடனே தயாள மனத்துடன் ஒத்துழைப்பு நல்குவர். அவர்களால் தெளிவுபடுத்தப்பட்ட விடயம் நிச்சயம் வெற்றியைத்தரும்.

ஆனாலும் சில பொறுப்பான கருமங்களில் வாய்மூல ஆலோசனைகள் மட்டும் பூரண அறிவைத் தரமாட்டாது. அக்காரியத்தை நிறைவேற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதில் தடுமாற்றம் ஏற்படும். அப்படியான சந்தர்ப்பத்தில் மற்றவர்களை அப்பணியில் இணைத்து கருமமாற்ற அழைப்பதில் தவறேதுமில்லை. அதுவே உரிய வழியுமாகும். அதில் தராதரம் பார்க்க கூடாது. எதிர்காலத்தில் அக் கரியத்தை நூறு வீதம் சரியாக பூர்த்தி செய்வதற்கு அதனை விட்டால் வேறு மார்க்கம் இல்லை.

ஒவ்வொருவரும் தாம் நிறுவனத்தில் என்ன செய்கின்றோம், ஏன் செய்கின்றோம் என்பதை மற்றவர்களுடன் கருத்து பரிமாற்றம் செய்ய வேண்டும். அது அவர்களின் எண்ணம் அல்லது திட்டம் நிறுவனத்துக்கு இசைவானதா என்பதை வெளிப்படுத்தும். நிறுவனத்தின் கொள்கைக்கு சார்பானதாக இல்லாத கட்டத்தில் முற்கூட்டியே அதனை அறிந்து கொண்டு தவிர்க்கவும் முடியுமல்லவா?

இன்னும் சொல்லப்போனால் தாம் நினைப்பவற்றை மற்றவர்களுடன் கருத்துப் பரிமாற்றம் செய்யும் அதே வேளை, மற்றவர்கள் அவ்விடயம் பற்றி என்ன அறிந்து வைத்திருக்கின்றார்கள். அவ் விடயம் பற்றி என்ன எண்ணுகின்றார்கள் என்பது பற்றி கேட்டு தெரிந்து கொள்வதிலும் எந்த தவறும் இல்லை. அவர்களுக்கே தெரிந்த விடயங்கள் பற்றி ஊடுருவி கேள்வி கேட்க பலர் கூச்சப்படுவர். அது தவறு. அவரது குடும்ப பிரச்சனைகள் பற்றி கேள்வி எழுப்புவதே தவறு. அலுவலகம் நிறுவனம் போன்றவை பொதுத் தேவைகளை முன்னிட்டு பலரால் ஆக்கபூர்வமாக கொண்டு நடாத்தப்படுவன. இரகசியம் பேணுவதல்ல அதன் பொறுப்பு. நம்பகத்தன்மையையே. அது பிரதான இலக்காகக் கொண்டிருக்கும். அந்த வகையில் ஒவ்வொரு அலுவலரும் ஊழியரும் தாம் அறியாதவற்றை பிறரிடம் கேட்டு அறிந்து கொண்டு வினைத்திறனுடன் பணிபுரிய வேண்டும்.

அப்படி அவர்களது ஆலோசனையை கேட்டறிந்து ஒரு கருமத்தை ஆற்றும் அதே சமயம் ஆலோசனை வழங்குபவர் அக்கருமத்தை நிறைவேற்ற வேண்டி நேர்ந்தால் எப்படி காரியமாற்றுவார் என்பதையும் அறிந்து கொள்வது நன்று. ஒரு இடத்தை அடைய பல மார்க்கங்கள் இருக்கலாமல்லவா?

இன்றைய எமது இளைய சமுதாயத்தை எடுத்தால் அவர்கள் மத்தியில் தேடல் மிகவும் அரிதாக காணப்படுகின்றது. பல அடிப்படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களை மட்டுமன்றி பொதுவான சமூக நடப்புகளைக் கூட அவர்கள் தெரிந்துகொள்ளாது இருப்பது ஆச்சரியத்திற்குரியதாக இருக்கின்றது. நாலு பேர் பேசிக்கொண்டிருக்கும் போது பலரும் பலவிடயங்கள் பற்றியும் அலசமுற்படுவர். அது அரசியல் பொருளாதாரம், நாகரீகம், விஞ்ஞானம், சம கால நடப்புக்கள் எதுவாகவும் இருக்கலாம். இவை பற்றி நாமும் சிறிதளவேனும் அறிந்திருந்தால் தான் அவர்களுடைய கலந்துரையாடலில் பங்குபற்ற முடியும். அவர்கள் பேசும் விடயங்களில் பங்குபற்றாமலும் நாமறிந்த விடயங்களை இட்டு வலிந்து கருத்து தெரிவித்தலும் விவாதத்தை திசை திருப்புதலும் எமது அறிவு பற்றாக்குறையை வெளிப்படுத்திவிடும்!

செய்திகளை நேரில் சென்று தேடி சேகரிக்கவேண்டிய ஒரு நிலை இன்று அற்றுப்போய்விட்டது. பத்திரிகை நிருபர்களின் தேவை கூட அருகிக்கொண்டு வருகின்றது. அந்த அளவிற்கு இணையம் இன்று செய்திகளையும் தகவல்களையும் முந்திக்கொண்டு தருகின்றது. கணனியில் பேரார்வம் கொண்ட நீங்கள் ஏன் அதன் மூலம் உங்கள் அறிவையும் ஆற்றலையும் வளர்க்கக்கூடாது.

மலைமுரசு - 29.08.2015 - 04.09.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06 அத்தியாவசிய செலவுகளும் அநாவசிய செலவுகளும்.

அத்தியாவசிய செலவுகள் என்னும் போது அது அவரவர் பண வரவினைப் பொறுத்து மாறுபட்டு அமைவதாக இருக்கும். பெரும் கோடீஸ்வரர்கள், வைர வியாபாரிகள், பணம் புரட்டும் அரசியல்வாதிகள், கட்டட ஒப்பந்தக்காரர்கள் போன்றோர் நாளொன்றுக்கு பல மில்லியன் ரூபாக்களை எடுத்தெறிந்து செலவு செய்துவிட்டு 'ஜம்' என்று இருந்து விடுகிறார்கள். ஒரு கோடீஸ்வரர் தனது அழகான புதுமணப் பெண்ணுடன் தேன் நிலவு செல்வதற்காக ஒரு தீவை விலைக்கு வாங்கி அங்கு அழகான பங்களா உட்பட சகல ஆடம்பர வசதிகளையும் கோடிக்கணக்கில் பணம் செலவு செய்து நிர்மாணித்தபின் தனது சகி சகிதம் சொந்த விமானத்தில் சென்று தரை இறங்கியதாக செய்திகள் வெளியாகியிருந்தன. அப்படியானவர்களுக்கெல்லாம் அத்தியாவசிய செலவு அநாவசிய செலவு என்ற வேறுபாடே கிடையாது. அவர்களுடைய பண விரயம் உடனுக்குடன் நிரவப்படும்.

ஆனால் உலகில் மிகப்பெரும்பான்மையானோர் நடுத்தர வருமானத்தைக் கொண்ட அலுவலர்கள், தொழிலாளர்கள், சிறு வர்த்தகர்கள், உழவர்கள், மற்றும் ஆடைநெய்வோர் போன்றவர்களேயாவார். அம் மக்கள் அனைவருமே தமது வருமானத்தையும், செலவீனத்தையும் 'பட்ஜெட்' செய்தே வாழ்க்கை நடாத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றார்கள். தவறின் காலக்கிரமத்தில் அவர்கள் 'வங்குரோத்து' (Bankrupt) நிலையை எய்த வேண்டி நேரும்.

சாதாரணமாக பெரும்பான்மையான வீடுகளில் தமது உணவுத் தேவைகளுக்காக தாமே சமையல் செய்கின்றார்கள். அதனால் ஆடம்பர உணவு வகைகளைத் தவிர்த்து அத்தியாவசிய உணவு தேவையை நிறைவு செய்வதுடன் சிக்கனத்தையும் கடைப்பிடிக்கலாம்.

அதே போன்று தண்ணீர் கட்டணம், மின்சார கட்டணம், 'இணைய' கட்டணம் போன்றவை அத்தியாவசிய செலவுகளேயாகும். அவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் செலுத்த வேண்டி இருப்பினும் சிக்கனமும் எமது கையில் இருக்கிறது. ஆனால் முகட்டுவரி, காப்புறுதி, வாகன பதிவு வரிகளில் நாம் சேமிப்பை செய்ய முடியாது.

வீட்டில் அனைவரினதும் தவிர்க்கப்பட முடியாத செலவீனமாக இருப்பது புதினப்பத்திரிகைகள், சஞ்சிகைகள்!

அதே போன்று உடல் ஆரோக்கியத்தை முன்னிட்டு 'ஜிம்' பயிற்சி நிலையத்துக்கு செல்வதும் பொழுது போக்கு காரணிகளுக்காக 'கிளப்' செல்வதும் 'பட்ஜெட்டில் உள்ளடக்கப்படவேண்டியவையே. சரி, எமது வீட்டிலேயே 'ஜிம்', தொலைக்காட்சி, கணணி என்று பொழுது போக்கு சாதனங்கள் நிறைய இருந்தாலும் அவற்றிற்கும் திருத்தச் செலவு என்று இல்லாமல் போகாது. ஒரு 'எலெக்ரோனிக்' சாதனம் பழுதடைந்து விட்டால் அதனை திருத்துவதற்கு 'எலெக்ரிஷன்' ஒருவரை நாடவேண்டும். அவர் விதிக்கும் கட்டணத்தை செலுத்தியே ஆக வேண்டும்.

இனி, எமக்கென்று ஒரு வீட்டினை செலவு செய்து கட்டி முடித்து விட்டால் பிரச்சனை தீர்ந்தது என்று இல்லை. எமது தேவைக்கேற்ப அதனை திருத்தியமைக்க வேண்டும். பராமரிப்பினை மேற்கொள்ள ஒரு தொகை ஒதுக்க வேண்டும்.

வீடு மட்டும் அல்லாது. எதற்குமே தேய்மானம் உண்டு. எமது உடல் நோய்வாய்ப்படுகின்றது. பரிகாரத்தை தள்ளிப்போட முடியாது. சாதனங்களுக்கு போன்றே எமது உடல் சார்ந்த பிரச்சனைகளுக்காக வைத்தியரை நாட வேண்டும்! அவர் கூறும்படியெல்லாம் செலவு செய்ய வேண்டும். இரத்தப் பரிசோதனை 'ஸ்கானிங்', எக்ஸ்ரே' இருதய நோய்கள் சாரந்த சத்திர சிகிச்சைகள் எல்லாமே தவிர்க்க முடியாததும் எமது கட்டுப்பாட்டில் இல்லாததுமான அத்தியாவசிய செலவுகளே.

எம்மில் பலருக்கு ஒரு குடும்ப வாகனம் அத்தியாவசியமாக உள்ளது. மொத்த பணத்தையும் செலுத்த வசதி இல்லை. தவணைக்கட்டண முறையில் கொள்வனவு செய்கின்றோம். மாதாந்தம் கட்டணத்தை செலுத்தியே ஆக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி மனித நேயம் எம் வாழ்வில் மதிக்கப்படவேண்டியதொரு முக்கிய அம்சமாக உள்ளது. எத்தனை எத்தனை அநாதை சிறுவர் இல்லங்கள் எத்தனை எத்தனை முதியோர் இல்லங்கள். இன்னும் தனிப்பட்ட ஏழ்மையில் வாழும் குடும்பங்கள், கல்விக்காகவும், உணவுக்காகவும், உடைக்காகவும் எத்தனை சிறார்கள் அல்லல்படுகின்றார்கள். அவர்களுடைய தேவைகள் நாளாந்த தேவைகளாக உள்ளன. சரி, எம்மால் மாதாந்தமாயினும் அவர்களுக்காக ஒரு நன்கொடையை ஒதுக்க முடியாதா? அதைக்காட்டிலும் அத்தியாவசிய செலவீனம் எமக்கு வேறு ஒன்று இருக்க முடியுமா?

செல்லப்பிராணிகளை வளர்த்தல் கூட ஜீவராசிகள் மீதான எமது அன்பை வெளிப்படுத்துகின்றது!

இனி வருடம் ஓரிரு முறையாவது குடும்பமாக உல்லாச பிரயாணம் மேற்கொள்வது மனதுக்கு மகிழ்ச்சியை உண்டு பண்ணுகின்றது. அப்படியில்லாவிட்டாலும் கூட உறவினர்களை சந்திக்கவும் குடும்ப விசேஷங்களில் பங்கு பற்றவும் பிரயாணங்களை மேற்கொள்ள வேண்டியே உள்ளது. பலர் தமது நேர்த்திக்கடன்களை பூர்த்தி செய்வதற்காக இந்தியா போன்ற தூர இடங்களில் உள்ள கோயில்களுக்கு யாத்திரை செல்கின்றார்கள். இவையெல்லாம் நாம் வாழ்வில் சாதிக்க வேண்டிய உயர்ந்த குறிக்கோள்களேயல்லவா?

வீட்டில் சாப்பிட்டு சாப்பிட்டு பலருக்கு அலுத்து விடுகின்றது. சிக்கனம் சிக்கனம் என்று சலித்தும் விடுகின்றது. அதனால் எங்களுக்கு வேண்டியவர்களுடன் கூடி ஒரு "காப்பி பாருக்கு" போவதை அநாவசிய செலவு என்று ஒதுக்க முடியாது. அதே போன்று இடையிடையே 'ஹோட்டல்' சாப்பாடு பெரிய பாதிப்பை உண்டு பண்ணாது.

இனி, மற்றவர்களிடமிருந்து எமக்கு கிடைக்க வேண்டிய மரியாதையை பெற்றுக்கொள்ள வேண்டுமானால் தரமான ஆடைகளை அணிந்து நாம் தோற்றமளிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதனின் தேவைகளை இவை இவை என்று வார்த்தைகளில் அடக்குவது கடினமே. சந்தர்ப்ப சூழ்நிலைகள், எமது பழக்க வழக்கங்கள், உடல் ஆரோக்கியம் என்று பல காரணிகள் எமக்கு எதிர்பாராத செலவுகளை உண்டு பண்ணிவிடும். எனவே நாம் எமது வருவாயை கருத்தில் கொண்டு எமது செலவுகளை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது அவசியம். அநாவசிய செல்வுகளை இனம் கண்டு அவற்றை தவிர்க்க வேண்டும்.

உதாரணமாக கார் எமக்கு பயன்படுவதைவிட பணத்தை அதிகம் விழுங்குகின்றதென்று தெரிந்தால் அதை உடனடியாக விற்று விடுவது நல்லது. அதனால் காருக்கான எரிபொருள் செலவு, பராமரிப்பு செலவு, வரிகள், மாதாந்த 'லீசிங்'. காப்புறுதி போன்ற செலவுகளை தவிர்த்துவிடலாம். எமது பயணங்களுக்கு பேரூந்து, தொடரூந்து போன்ற பொது வாகனங்களை பயன்படுத்திக் கொள்ள முடியும்.

தவிர, நாம் விடும் பெரும் தவறு கடனட்டை பாவிப்பதாகும். மாதாந்தம் எம்மை அறியாமலே ஒரு தொகை வட்டியாக அறவிடப்படுகின்றது. முத்திரை வரி வேறு. அது எதற்காக என்று கேட்டால் மத்திய வங்கியின் வரி என்று கூறுவர். இனி, வருடாந்தம் கடனட்டையை புதுப்பிக்கும் செலவாக எமது அனுமதியின்றியே ஆயிரம் ரூபா கழிக்கப்படுகின்றது. கடனட்டை எமது தேவைகளுக்கு அவசியமாக இருக்கலாம். வட்டியும், கட்டணமும் குறைந்த கடனட்டைகளை விநியோகிக்கும் வங்கிகளைக் கண்டு பிடிக்க வேண்டும்.

இந் நாட்களில் மின்சாரம் 90 'யூனிற்'களுக்கு மேல் இரு மடங்கு கட்டண அதிகரிப்பை விதிக்கின்றது. குளிர்சாதனப்பெட்டி, தொலைக்காட்சி, கணணி, சலவை இயந்திரம் போன்ற மிக மிக அத்தியாவசிய சாதனங்களை பாவித்தாலே போதும். அது 90 'யூனிற்'களை தாண்டிவிடும். இந்த சாதனங்களை சிக்கனமாக பாவிப்பதுடன் 'எல்.சீ.டி பல்ப்புகளுக்கும் மாறினால் ஓரளவாவது மின்சார கட்டணத்தை சேமிக்க முடியும்.

தொலைக்காட்சி 'சனல்'களில் அவசியமற்றவையை தவிர்ப்பதன் மூலம் பணத்தை மீதப்படுத்த முடியும். வதிவிட தொலைபேசியில் 200 யூனிட்டுகள் இலவசமாக பாவிக்கலாம். அதற்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்படுத்தினால் மேலதிக கட்டணம் வராது. 'மொபைல்' போனில் சில 'பக்கேஜ்' உண்டு. 1000 நிமிடம் இலவசம் என்றொரு 'பக்கேஜை' மொபைல் போன் சிறிது காலத்துக்கு முதல் அறிமுகம் செய்தது. ஒத்த தொலைபேசிகளுக்கு இணைப்பை ஏற்படுத்தினால் குறைந்த கட்டணத்தில் பேசமுடியும்.

அவசியமற்ற கழகங்களிலிருந்து (CLUBS) விலகிக் கொண்டால் மாதாந்த அங்கத்துவ கட்டுப்பணத்தை தவிரக்கலாம். நண்பர்களுக்கு செலவு செய்வதையும் நிறுத்தலாம். 'ஹோட்டலில்' குடிப்பது உணவு எடுப்பது பெரும் பணச்செலவை உண்டு பண்ணும். அவற்றை தவிர்க்க வேண்டும். கட்டாயமாக வீட்டில் சமைக்க வேண்டும். உணவு பொருட்களை சில்லறையாக அன்றி மொத்தமாக வாங்க வேண்டும். சில பொருட்களுக்கு நன்மதிப்பு இருக்கும். அதனால் விலையும் அதிகமாக் இருக்கும். தரமான விலை குறைந்த பொருட்களை நாம்தான் கண்டு பிடித்து வாங்க வேண்டும்.

உல்லாசத்தை குறைத்து விரயத்தை தவிர்த்தால் எமது வாழ்க்கை பிரகாசிக்கும்.

எனது நண்பரொருவர் எதிர்பாராத விதமாக வெளிநாட்டு பயணி ஒருவரை சந்தித்தார். பயணி கேட்டுக்கொண்டதற்கிணங்க தனது வீட்டு மேல்மாடியில் அவருக்கு ஒரு அறையை ஒதுக்கி சர்வதேச தொலைபேசி சேவையொன்றையும் தனது பெயரில் S.L.T யில் பெற்றுக் கொடுத்தார். ஒரு சில நாட்களில் பயணியை காணக்கிடைக்கவில்லை. அம்மாத முடிவில் நண்பரின் பெயரில் பதிவு செய்து, பயணியால் பயன்படுத்திய சர்வதேச தொலைபேசிக்கு 62 இலட்சம் ரூபா கட்டணம் விதிக்கப்பட்டிருந்தது. எமது கவனயீனம் எம்மை எப்படி மாட்டிவிடக்கூடும் என்பதை பாருங்கள்!

மலைமுரசு - 25.07.2015 - 04.09.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07

# எழுத்தாளர்களும் நன்மதிப்பும்.

சில மாதங்களுக்கு முன்னர் திருக்கோணமலை நகரமுதல்வர், பல கலைஞர்களையும் எழுத்தாளர்களையும் பாராட்டி விருது வழங்கி கௌரவித்தார். அச் சமயம் மேடையில் உரையாற்றிய கிழக்கு பல்கலைக் கழகமொன்றின் தமிழ் விரிவுரையாளர், திருக்கோணமலையில் எழுத்தாளர்களுக்கு உரிய கௌரவம் கிடைக்கப் பெறுவதில்லை எனவும் அதற்கான காரணங்களை ஆராய்ந்து தான் ஒரு நூலை எழுதியதாகவும் அந்நூலானது வெளிவரும் பட்சத்தில் அது பலருக்கும் மனத்தாங்கலை ஏற்படுத்தக்கூடும் என்ற அச்சத்தில் அந் நூலை வெளியீடு செய்வதை தவிர்த்துக்கொண்டதாகவும் கவலையுடன் தெரிவித்தார்.

அவ்விடயத்தில் ஒரு நூலை எழுதும் அளவுக்கு அவருக்கு விடயதானம் இருந்திருக்கின்றது எனும் போது அது பற்றி நாம் சிந்திக்காமல் இருப்பது அல்லது எமது எழுத்தாளர்களுக்கும்... ஏன் மக்களுக்கும் கூட ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தாமல் இருப்பது பெரும் தவறென்றே கொள்ளவேண்டும்.

தமிழகத்தில் உள்ள எழுத்தாளர்களை உலகமே அறியும்! அந்த அளவுக்கு அவர்கள் பிரபல்யம் அடைந்துள்ளார்கள்.

சங்ககாலம் முதல் இன்றுவரையான காலகட்டத்துக்கு அவர்களிடம் இலக்கிய வரலாறே உண்டு. ஏறத்தாள இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம்! இக்காலப்பகுதியில் வாழ்ந்த புலவர்கள் அவர்கள் ஆக்கிய இலக்கியங்கள். (அழிந்து போனவை தவிர) பற்றி எம்மால் அறியக்கூடியதாக இருப்பதுடன் அந்நூல்களை படிக்கக்கூடியதாகவும் இருக்கின்றது.

தவிர சேர, சோழ, பாண்டியர், நாட்டை சுயாட்சி மூலம் பரிபாலனம் செய்யக்கூடியதாக இருந்ததால் அவர்களால் புலவர் பெருமக்களுக்கும் இலக்கியத்துக்கும் பெரும் சேவை ஆற்றக்கூடியதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கு இன்றுவரை அப்படியானதொரு அரசியல் சூழ்நிலை இல்லாதிருப்பது எமது கவிஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் பெரும் வீழ்ச்சியாகவே அமைந்துள்ளது.

மன்னர் காலம் முடிவுற்று தமிழகம் இந்திய மத்திய அரசின் கீழ் வரும் வரைக்குமான அந்நியர் ஆட்சி காலத்தில் கூட பாரதியார் போன்ற எழுச்சிமிக்க பல கவிஞர்களை தமிழகம் உருவாக்கியது. பின்னர் தமிழகம் மாவட்ட சுயாட்சியை பெற்ற நிலையில் அண்ணாத்துரை, ராஜாஜி. கலைஞர் போன்ற எழுத்து வன்மைமிக்க தலைவர்கள் உயர் அரச பீடத்தில் இருந்து தமிழுக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் தொண்டு செய்தார்கள். கலைஞர் கருணாநிதி தனது 81வது அகவையிலும் திரையுலகிலும் சின்னத்திரையிலும் பிரகாசிக்கிறார்.

ஈழத்தை எடுத்தால் கொழும்பிலும் வவுனியாவிலும் யாழ்ப்பாணத்திலும் தமிழ்சங்கங்கள் தம்மளவிலாயினும் முன்னின்று செயற்படுகின்ற மையை காணலாம். ஆனால் திருகோணமலையில் பல பெயர்களில் பலரது தலைமையிலும் இலக்கியம் சார் சங்கங்கள் இருக்கின்றன. எழுத்தாளர்களிடம் ஐக்கியம் இன்மையால் செயற்பாடுகள் எதுவும் வீறுடன் அமையவில்லை. இவர்களால் தமிழுக்கும் எழுத்தாளர்களுக்கும் பெரும் சேவையாற்ற முடியவில்லை.

என்.செல்வராஜா அவர்கள் தனி ஒருவராக தமிழ் நூல்களையும் எழுத்தாளர்களையும் ஆவணப்படுத்தும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

திருக்கோணமலை எழுத்தாளர்களை நோக்கினால் அவர்களது படைப்புக்கள் மக்களை சென்றடையாமல் இருப்பது பெரும் தாக்கமாக உள்ளது. அதனையிட்டு எழுத்தாளர்களை மட்டும் குறைசொல்லவும் இயலாது. பிரதானமாக திருக்கோணமலை மக்கள் கடந்த மூன்று தசாப்தங்களாக நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் பாதிப்புக்குள்ளா னவர்களாக இருப்பதால் வாசிப்பு பழக்கம் மிகவும் அரிதாகிவிட்டது. ஒரு தேசிய பத்திரிக்கையிலோ உள்ளூர் பத்திரிக்கையிலோ பிரசுரமாகும் சிறுகதைகள், கவிதைகள், ஆய்வுக்கட்டுரைகள் , ஆசிரியர்கட்டுரைகள் அரசியல் கட்டுரைகள் உட்பட எந்த ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கத்தையும் எழுத்தையும் வாசிப்பவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். கல்விமான்கள் என்று குறிப்பிடக்கூடிய சிலரைத்தவிர நாலு எழுத்தைத்தெரிந்துகொண்டு தமது அறிவை வாசிப்பின் வாயிலாக மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணுபவர்கள் மிகவும் சிலராகவே காணப்படுகிறார்கள்.

திருக்கோணமலையில் ஒரு எழுத்தாளன் தனது சிறுகதையோ வேறு ஆக்கங்களோ பத்திரிக்கையில் பிரசுரமாவதையிட்டு பெருமைப்படவே முடியாத ஒரு நிலைதான் அங்கு நீடிக்கின்றது. அதனால் தொடர்ந்து எழுதவேண்டும் என்ற ஊக்கமும் அவனுக்கு இல்லாமல் போய் விடுகின்றது.

வாசிப்பு பழக்கம் இல்லாமையால் மக்கள் ஒரு சமூகத்தினதும் நாட்டினதும் முதுகெலும்பான எழுத்தாளர்களை சந்திக்கும் போது அவர்களது எழுத்துக்கள் பற்றி கலந்துரையாடாமல் சாதாரண பொதுமகனுடன் கதைப்பது போலவே உரையாடுகின்றார்கள்.

அடுத்து எழுத்தாளர்களை கௌரவித்து விருதுகள் வழங்கவேண்டிய அமைப்புக்கள் சிறந்த எழுத்தாளர்களை தாமாகவே தெரிவு செய்வதில்லை. எவருடையதாவது நிர்ப்பந்தத்தில்தான் எழுத்தாளர் கள் கௌரவிக்கப்படுகின்றார்கள். அதிக சந்தர்ப்பங்களில் அதே காரணத்திற்காக கௌரவிக்கப்படாமலும் இருக்கின்றார்கள்.

மற்றும் இலக்கிய விழாக்கள், இலக்கிய கூட்டங்களில் பிரதம, கௌரவ, சிறப்பு விருந்தினர்களாக அரச அலுவலர்களையே முன்னி றுத்துகிறார்கள். அல்லது நிதி உதவி செய்பவர்களுக்கு முக்கியத் துவம் கொடுக்கிறார்கள். உண்மையில் இலக்கிய விழாக்களில் கௌரவிக்கப்படவேண்டியவர்கள் மூத்த எழுத்தாளர்களே. பிற மாவட்டங்களிலிருந்தாயினும் நல்ல எழுத்தாளர்களை வரவழைக்க வேண்டும். மறு வளமாக எமது எழுத்தாளர்களும் பிறமாவட்ட இலக்கிய விழாக்களுக்கு அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட சந்தர்ப்பம் ஏற்படும். உடனடியாக அரச அலுவலர்களை புறக்கணிக்க சாத்தியப்படாவிட்டாலும் கூட அவர்களுடன் சேர்த்து மூத்த எழுத்தாளர்களுக்கும் சந்தர்ப்பங் கொடுக்க முன்வரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து திருக்கோணமலையில் உள்ள எழுத்தாளர்கள் பெரும்பாலும் கல்விமான்களாக இல்லை. இலக்கிய முயற்சிக்கு அது ஒரு குற்றமில்லாவிட்டாலும் கூட பெரும்பான்மையான எழுத்தாளர்கள் ஏழ்மை நிலையில் இருக்கின்றார்கள். அதனால் அவர்கள் வசம் இருக்கும் ஆக்கங்களை வெளியீடு செய்ய இயலாதவர்களாக இருக்கிறார்கள்.

பண்பாட்டு திணைக்களம் ஏழ்மை நிலையில் உள்ள எழுத்தாளர்களின் ஆக்கங்களை கண்டறிந்து வெளியீடு செய்யலாம். அதிலும் தலையீடுகள் இருப்பதால் வசதியான எழுத்தாளர்களின் நூல்கள் பிரசுரமாவதற்கும் கடந்த காலத்தில் சந்தர்ப்பம் அமைந்துள்ளது.

அதே சமயம் திருக்கோணமலையில் அச்சு இயந்திரம் ஒன்று இல்லாமல் இருந்துள்ளது. அண்மைய நாட்களில்தான் மலைமுரசு ஆசிரியர் எழுத்தாளர்களினதும் வெளியீட்டாளர்களினதும் நலன் கருதி வர்ண அச்சுயந்திரம் ஒன்றை கொணர்ந்துள்ளார்.

திருக்கோணமலையில் பல சிறந்த மூத்த எழுத்தாளர்களும் இளம் எழுத்தாளர்களும் உள்ளனர். அவர்களில் சிலர் நோய்வாய்பட்ட நிலையிலும் தமது தேவைகளுக்காக வைத்தியசாலை தபால் அலுவலகம் வங்கி கச்சேரி என்று செல்லவேண்டியவர்களாக இருக்கின்றார்கள். அவ்வவ் அலுவலகங்களில் கடமையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களும் ஊழியர்களும் அவர்களை அடையாளம் காணாமல் அவமதிப்புக்கு உள்ளாக்குவது உண்மையில் கவலைக்குரிய விடயமாகும்.

குறைந்த பட்சம் மக்கள் திருக்கோணமலையில் இன்று வீரியத்துடன் எழுதிக்கொண்டிருக்கும் எழுத்தாளர்களை பற்றி தெரிந்திருக்க வேண்டாமா?

இன்று இலங்கை பல்கலைகழகங்களிலும் தஞ்சைப் பல்கலைக்கழ கத்திலும் கூட மாணவர்கள் எமது எழுத்தாளர்களின் படைப்புக்களை தமது பட்டப்படிப்பின் நிமித்தமான ஆய்வுகளுக்காக தேர்ந்தெடுக் கிறார்கள். எமது எழுத்தாளர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கூட பல கௌரவங்களும் விருதுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியான பெருமைகளை கொண்ட எமது திருக்கோணமலை மண்ணில் மக்கள் எழுத்தாளர்களின் படைப்புக்களை தேடியும் விலைகொடுத்து வாங்கியும் படிப்பதொன்றே எமது எழுத்தாளர் களுக்கான நன்மதிப்புக்கு வித்திடும்.

மலைமுரசு - 13.12.2014 - 19.12.2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08 எதிரியும் எதிரியின் நண்பனும்.

நல்ல வேளையாக நாம் இன்னமும் காட்டுவாசிகளாக இல்லை! இருந்தாலும் என்ன?......... எம்மைச்சுற்றி எதிரிகள் என்ற பெயரில் காட்டு மிருகங்கள் எம்மை ஒழித்துவிட கங்கணம் கட்டிக்கொண்டே தான் இருக்கின்றன! யாராவது ஒருவர் தனக்கு எதிரிகள் எவரும் இல்லை என்று அடித்துக் கூறவும் நிருபிக்கவும் முன்வருவாரா? இல்லை. ஒரு பாடசாலைச் சிறுவனுக்கு அவனது வகுப்பில் எதிரிகள் உண்டு. எந்த நாட்டினதும் ஜனாதிபதிக்கோ பிரதம மந்திரிக்கோ எதிரிகள் இல்லை என்று கூற முடியுமா?

சமூகத்தில் கீழ் நிலையில் இருக்கும் ஒருவருக்குக்கூட 'உன்னை நான் ஒழிக்கிறேனா இல்லையா பார்' என்று சவால் விடும் எதிரிகள் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

அரசியல் வாதிகளுக்கும் பொருளாதார நிலையில் மிக மிக உயர் நிலையில் இருப்பவர்களுக்கும் ஏன் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்? எதிரிகள் இருப்பதனால்தான்.

வாழ்க்கையில் ஒவ்வொருவருக்குமே எதிரிகள் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

எனவே நாமும் எமது எதிரிகள் பற்றி விழிப்பாக இருப்பது அவசியம். எதிரிகளை எப்படி இனம் காணுவது?

எமது எதிரிகள் தூர தேசத்தில் இருக்கமாட்டார்கள். எமக்கு அருகில் எம்மைச் சுற்றியே இருப்பார்கள்.......

எமக்கு நேரும் கஷ்ட நஷ்டங்களையிட்டு உள்ளூர மனம் மகிழ்வர்.

எமக்கு உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்களில் மெதுவே நழுவி விடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மைப்பற்றி எவராவது குற்றம் கூறி விமர்சிக்கும் சந்தர்ப்பத்தில் மௌனமாக இருந்து அவதானிப்பர்.

எமக்கு எதிராக செயல்படுபவர்களை இனம் கண்டு அவர்களுடன் அதிகளவில் நட்பு பாராட்டுவர்.

வாழ்கையில் எமக்கு கஷ்டங்கள் நேரும் போதும் அல்லது நாம் எதற்காகவாவது தண்டிக்கப்படும் போதும் 'அவருக்கு அது வேண்டும்' என்று கூறி நியாயப்படுத்துவர்.

அனைத்துக்கும் உச்சக்கட்டமாக எவரையாவது தூண்டி அல்லது தானே நேரே முன் வந்து கெடுதல் உண்டு பண்ணுவர்.

எமக்கு எதிரிகள் உருவாகக் காரணம் என்ன என்பதை எம்மால் புரிந்து கொள்ளக் கூடுமாயின் பலர் எமது எதிரிகளாக மாறுவதை தவிர்க்க முடியும். அது பற்றி ஆராய்வோம்.

உண்மையைச் சொல்லப்போனால் 'இவன் ஏன் நல்லவனாக இருக்கிறான்' என்ற அசூயை வயப்பட்டே சிலர் எமது எதிரிகளாகி விடுகிறார்கள்.

உங்கள் அழகு, கம்பீரம், வகிக்கும் உயர் பதவி, செல்வாக்கு, பணபலம், ஆள்பலம் இவை பலருக்கு பகைமையை உண்டு பண்ணும்.

நீங்கள் ஒருவரிடம் உதவி பெறும் நிலையில் இருந்திருப்பீர்கள். இப்போ உங்கள் சுய காலில் நிற்கும் அளவுக்கு முன்னேறி விட்டிருப்பீர்கள். அது போதுமே!

ஒருவருக்கு உங்களிடமிருந்து பெரும் தொகை பண உதவி தேவைப்படுகிறது. உங்களால் அவரது கோரிக்கையை நிறைவேற்ற இயலவில்லை. உறவு முறிவதற்கு வேறு காரணம் வேண்டா!

நீங்கள் நியாயத்திற்கு புறம்பாக நடப்பவரல்ல. ஆனால் ஒருவர் சட்டத்திற்கு புறம்பாக உங்களிடம் ஒரு உதவியை நாடுகின்றார். நீங்கள் மறுப்பதை உங்கள் தவறாகவே அவர் கருதுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவமான உங்கள் குடும்பத்துடன் விவாக பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள ஒருவருக்கு விருப்பம். உங்களுக்கு அவர் விருப்பத்தை நிறைவேற்றும் படியான சந்தர்ப்ப சூழ்நிலை இல்லை. உறவே அறுந்து விடுமளவுக்கு பகை உண்டாகும்.

சரி, இனி உங்கள் எதிரிகளை நீங்கள் வெற்றி கொள்ள கடைப்பிடிக்கக் கூடிய உத்திகள் பற்றி ஆராய்வோம்.

'துஷ்டனைக்கண்டால் தூர விலகு' என்று எம் மத்தியில் ஒரு பழ மொழி உண்டு.

எதிரியை வெல்வதற்கு மிக மிக சிறந்த வழி இதுவேயாகும்!

எதிரி இயன்றவரை மறைந்திருந்தே செயல்பட முனைவான். அவனை நாம் இனம் கண்டு விட்டதை எவர் வாயிலாகவாவது அவனுக்கு தெரிவிக்க வேண்டும்.

எம்மைப்பற்றிய எந்த செய்தியும் அவனுக்குப் போகாதபடி தடுத்து விட வேண்டும்.

எம்மிலும் எமது முன்னேற்றத்திலும் ஆர்வமுள்ளவர்களுக்கு எமது எதிரிகள் யார் யார், என்ன காரணத்திற்காக அவர்கள் எமக்கு எதிராக திரும்பினர் என்பதை முற் கூட்டியே தெளிவு படுத்தி விட வேண்டும்.

எதிரிகள் அடாவடித்தனம் புரியுமளவுக்கு வளர்ந்து விட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக எச்சரிக்கலாம்.

அதற்கும் பணியாவிட்டால் சட்ட நடவடிக்கையை முன்னெடுத்தல் எந்த வகையிலும் தவறாகாது!

இவை யாவற்றுக்கும் மேலாக நீங்கள் பயனடையக் கூடிய ஒரு முக்கிய தகவலை தருகின்றேன். உங்கள் எதிரிக்கு பல நண்பர்கள் இருக்கலாம். அவர்களிலெவராவது உங்களுடனும் பழகிக் கொண்டிருக்கிறாரென்றால் அவர் பற்றி மிக மிக அவதானத்துடன் இருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரிக்கு எதிரி உங்கள் நண்பனாக இருக்கக்கூடும். ஆனால் எதிரிக்கு நண்பன் உங்கள் நண்பனாக இருக்கமுடியாதல்லவா?

நான் பண்டாரவளை பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் பணிமனையில் கடமைபுரிந்து கொண்டிருந்த போது பாலசுந்தரம் என்பவர் நிர்வாக உத்தியோகத்தராக இருந்தார். அவரது வயதிற்கேற்ப அனைவரையும் தனது பிள்ளைகளாக கருதி அன்பு செலுத்தும் இயல்பினர்.

சுசாந்திக்கா என்ற இளம் யுவதி அவர் மேல் அன்பு பாராட்டி நடந்து கொண்டிருந்தாள். அவளது விருப்ப பிரகாரம் அவளது ஊருக்கு இடமாற்றம் பெற அவர் உதவி செய்தார். இடமாற்ற கட்டளையும் வந்த விட்டது. அவளது விடுதியில் புதிதாக இரு இளைஞர்கள் வருகை தந்திருந்தார்கள். அவர்களை தனது அண்ணன்மார் என அறிமுகம் செய்தாள்.

அன்றைய தினம் நிர்வாக உத்தியோகத்தர் தனது மதிய உணவுக்காக 'ஹோட்டல்' ஒன்றை நோக்கி நடந்து சென்று கொண்டிருந்த போது சுசாந்திக்கா அவர் பின்னால் ஓடி வந்து அவரது கையில் ஒரு பண நோட்டை திணித்து விட்டாள்.

அவளை தொடர்ந்து வந்த இளைஞர்களில் ஒருவன் அவரது கையை கெட்டியாகப் பிடித்து பண நோட்டை வாங்கிக்கொண்டான். அந்த தாளில் இருந்த இலக்கம் அவர்களிடமிருந்த இலக்கத்துடன் ஒத்துப்போவதை அவருக்கு உறுதி செய்த பின் அவருக்கு விலங்கு மாட்டி கைது செய்தார்கள். அவர்கள் இலஞ்ச ஊழல் அதிகாரிகள் என்று பின்னர் தெரிய வந்தது!

எமது எதிரிகள் எந்த உருவிலும் இருப்பார்கள். நாம் தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்! ( வளரும் )

மலைமுரசு வாரமலர் - 12.07.2014 - 18.07.2014

ஒளி அரசி ஐப்பசி 2018 இதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 09 எமது முன்னேற்றமும் பொருத்தமான துறையும்.

ஒரு சினிமா படத்தில் ' பொலீஸ்' அதிகாரி ஒருவர் சந்தானத்தை பொலீஸ் நிலையத்திற்கு இழுத்து வந்து இரண்டு தட்டும் தட்டி ' நீ எப்போ பிறந்தாய் ?' என்று கேட்கிறார். அதற்கு சந்தானம் இறுத்த பதில் ' நான் சின்ன குழந்தையாக இருந்தபோது !' என்பதாக இருந்தது. இது வெறும் சிரிப்புக்காக கூறப்பட்டிருந்தாலும் இங்கு ஒரு உண்மை வெளிப்படுகின்றது.

நாம் எமது வாழ்கையில் விடும் தவறுகளுக்கெல்லாம் காரணம், முதிர்ச்சியடையாத ஒரு பராயத்தில்.... எந்த புரிதலோ விளக்கமோ எதிர்பார்ப்போ இன்றி வாழ்கை கடலில் பயணத்தை ஆரம்பிப்பதுதான்! அதுவே பின்னர் பழக்கப்பட்டு விடுகிறது. நிரந்தரமாகியும் விடுகிறது. ஏதோ எமக்கு நேர்கின்ற சம்பவங்களுக்கு ஈடுகொடுத்து வாழ்கையை ஓட்டுவதில் திருப்தி அடைகின்றோம். இந்த நிலைகட்டாயமாக மாற வேண்டும்.

அதற்கு வாழ்கையை முன்னேற்ற பாதையில் அமைத்துக்கொள்ள அவசியமான பிரதான குணாம்சங்கள் பற்றி முதலில் நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

எமது வாழ்வின் உயிர்ப்புக்கு காரணமாக இருப்பதே ' அன்பு' தான். அன்புதான் எம்மை மற்றவர்களோடு பிணைத்து வெற்றிக்கு வழிவகுக்கிறது. ' அறத்தை ' கடைப்பிடித்தால் அது 'சிறப்பீனும் செல்வமும் ஈனும்' என்று வள்ளுவரும் கூறியுள்ளார். ' நன்றி' எவராலும் கடைப்பிடிக்கப்படவேண்டிய உயரிய குணம். அதே போன்று ' நடுவு நிலைமை ' உள்ளவனை உலகம் உயர்வாக மதிக்கும். Integrity என்று ஆங்கிலத்தில் குறிப்பிடுவார்கள் நேர்மை , மேன்மை , பொறுப்புக் கூறும் தன்மை ஆகியவற்றை அது குறிக்கும். சொன்ன வார்த்தையை அவன் காப்பாற்றுவான் என மற்றவர்களால் கணிக்கப்படவேண்டும். 'அமரருள் உய்விப்பது ' அடக்கம்', 'விழுப்பம் தருவது ஒழுக்கம்.' 'ஈகை போன்ற தர்மம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவுமில்லை. வாய்மை ஒருவனின் உளத்தூய்மையை விளம்பும் இவை யாவும் ஒரு மனிதனுக்கு அவசியமான மனோநிலை ( Attitude ) ஆகும். இந்த மனோ நிலை இருக்கும் பட்சத்தில்தான் மற்றவர்கள் உங்களுடன் மீண்டும் மீண்டும் பேசவும் பழகவும் முன்வருவார்கள்.

இனி எமது முன்னேற்றத்திற்கு மிக மிக அவசியமான மற்றுமொரு பிரதான அம்சம் பற்றி பார்ப்போம். ஆங்கிலத்தில் Awareness என்று கூறுவார்கள். ' அறிவுடை நிலை' அல்லது ' விஷயம் தெரிந்த நிலை' என்று பொருள். நாம் ஒரு காரியத்தில் இறங்குவதாயினும் சரி ... ஒரு நாட்டுக்கு புறப்படுவதாயினும் சரி.... விண்வெளி பயணத்தினை மேற்கொள்வதாயினும் சரி அவ்வத்துறைகள் பற்றி தெளிவு இருந்தால் எமது பய உணர்ச்சி பறந்துவிடும்.

சரி, அடுத்த கட்டம் என்ன ? அதுவே மிக மிக முக்கியமான ஒரு அம்சமாகும் ஆங்கிலத்தில் ' Action ' என்று குறிப்பிடுவார்கள். சுறு சுறுப்பாய் இருத்தல் , செயல் , செய்கை , நடவடிக்கை, இயக்கம், அசைவு என்று எப்படி வேண்டுமானாலும் பொருள் கொள்ளலாம். அது மட்டும் இல்லை என்றால் வாழ்கையில் முன்னேற்றமே இல்லை என்று ஆகிவிடும்!

முன்னேறும் குணங்களை வாழ்கையாக்கியதால் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பல ஆண்டுகாலமாக அபிவிருத்தியடைந்த நாடுகளின் வரிசையில் நிற்கின்றன.

எம்மிடம் அந்த குணங்கள் இல்லாததால்தான் நாம் இன்னமும் பின்தங்கிய நாடுகளின் வரிசையில் நிற்கின்றோம். பாதை போடுவதை பெரும் அபிவிருத்தியாக கருதுகின்றோம். உலகில் உள்ள பாலங்களில் மிக பெரிய பாலங்கள் என்று பார்த்தால் அரைவாசிக்கு மேல் சீனாவில்தான் இருக்கின்றது. ஜப்பான் போன்ற பெரும் அபிவிருத்தி அடைந்த நாடுகளை விடுங்கள் . இரண்டாம் உலக போருக்கு பின் அபிவிருத்தியடைந்த தென்கொரியாவின் சாதனை எப்பேற்பட்டது.!

எம்மால் தான் முடியவில்லை ! தமிழர்களாகிய எம்மால்தான் முடியவில்லை!! எங்கெங்கு தமிழர்கள் இருக்கின்றார்கள் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிப்பாருங்கள். எங்கேனும் முன்னேற்றம் என்று குறிப்பிட்டு சொல்லத்தக்கதாக எதையாவது சாதித்துள்ளார்களா? இந்தியாவை எடுங்கள், செவ்வாய் கிரகத்தை சுற்றி ஆய்வு மேற்கொள்ளும் அளவிற்கு முன்னேறியுள்ளார்கள். தமிழ் நாடு மிக பெரிய பிரதேசம். எதைச் சாதித்தார்கள் ? ஸ்ரீலங்கா எதையாவது சாதித்தளவுக்காயினும் யாழ்பாணம் அபிவிருத்தியாகவில்லை. ஏனென்றால் அது தமிழர்கள் வசிக்கும் பிரதேசம்.

எமக்கு பிரச்சனைகள் அதிகம்தான். அப்படியாயின் இஸ்ரேலை எடுங்கள். அவர்களுக்கு இல்லாத பிரச்சனைகளா?

ஒரு வல்லரசு என்ற நிலைக்கு அவர்களால் எப்படி உயர முடிந்தது?

எம்மாலும் முடியும் ! முதலில் எமது பயத்தையும் தயக்கத்தையும் நீக்க நாம் முயற்சிக்க வேண்டும். எந்தெந்த துறைகளில் எம்மால் பிரகாசிக்க முடியும், சாதிக்க முடியும் என்பதை நாம் ஒவ்வொருவரும் அடையாளம் காணவேண்டும். பாடசாலைகளில் ஆசிரியர்கள் எமது தவறுகளை கண்டுபிடிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றார்கள். ஒரு மாணவன் எந்த துறையில் அதிகம் பிரகாசிப்பான் என்பதை முடிவு செய்யவேண்டியவர்கள் அவர்களே! பரீட்சைகளை எதற்காக நடாத்துகின்றார்கள் என்ற அடிப்படையையே மறந்துவிட்டார்கள்.

ஒருவன் மரவேலையில் திறமை காட்டுகிறானா? அவனை மருத்துவ துறைக்கு அனுப்பு ! ஒருவன் கணிதத்தில் திறமை காட்டுகிறானா? அவனை கலைத்துறைக்கு அனுப்பு ! ஒருவன் விஞ்ஞானத்தில் சாதிக்கின்றானா? அவனுக்கு ஓவியத்தில் பயிற்சி கொடு!

இப்படித்தான் நாம் அன்று தொடக்கம் இன்று வரை அழிந்து கொண்டிருக்கின்றோம்!

திருட்டுத்தொழிலில் வல்லவன் அரசியலில் இருக்கிறான். சோம்பேறி அரச தொழிலில் இருக்கிறான். ஏமாற்றுக்காரன் வைரவியாபாரியாக இருக்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் யாரை நம்பி இருந்தும் பிரயோஜனம் இல்லை. நாம் பிராகாசிக்கக் கூடிய துறையை நாமே தெரிவுசெய்ய வேண்டும். அதனை சுயநலமின்றி சமூக நலனுக்காக நாட்டின் நன்மைக்காக முயன்று செய்வோமானால் எமது முயற்சிக்கான ஆதரவு எமக்கு தொடர்ந்து கிட்டும். அந்த உலகமே எம்மை உயர்வு நோக்கி தள்ளும்.

ஒவ்வொரு மனிதனும் தான் சமுதாயத்தின் பிரதானமான அம்சம் என்று ஏனையோரால் கணிக்கப்படுவதை விரும்புகின்றான். அவனது திறமைகள் மற்றவர்களால் பாராட்டுக்குள்ளாக்கப்படும் போது அவன் தனது முயற்சிகளில் முழுமூச்சுடன் இறங்கி இந்த சமூகத்துக்காகவும் நாட்டுக்காகவும் உழைப்பான். அன்றுதான் எமது வாழ்வில் வெற்றி கிட்டும்!

மலைமுரசு வாரமலர் - 12.07.204 - 18.07.2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 நமது உடலை பராமரிப்பது எப்படி?

எமது சரீரம் இயற்கையிலிருந்து தோன்றியது. இயற்கையின் சூழலில் இயற்கையை ஒட்டி வாழ்வதற்கு ஏற்ற முறையில்தான் அது அமைந்துள்ளது.

இன்று நாம் தலைகால் புரியாமல் இயற்கை தந்த உடல் என்னும் இந்த வரப்பிரசாதத்தை துஷ்பிரயோகம் செய்து கொண்டிருக் கின்றோம்.

பலவகை மதுபானங்கள்..... நாசகார போதைவஸ்துக்கள்....... வெண்சுருட்டு, வெற்றிலை ஆகியவற்றின் பாவனை நாமே எமக்கு செய்யும் துரோகமான செயல்களாகும். இன்றைய இந்த நிலையிலிருந்து நாம் எமது உடலை எப்படி பராமரிப்பது பாதுகாப்பது என்று பார்ப்போமானால் அது தொடரூந்தை புறப்படவிட்டுவிட்டு மாட்டுவண்டியில் துரத்துவது போன்ற செயலுக்கு ஒப்பானதாகிவிடும். இந்த தொடரூந்து என்ற உவமை சீரழிந்துவிட்ட உடலையும் மாட்டுவண்டி என்ற உவமை உறுதியற்ற மருத்துவத்தையும் குறிக்கின்றது.

மருத்துவத்தில் இரண்டு பிரிவுகளை காண்கின்றோம். ஒன்று நோயை அடையாளம் காணுதல் (Diagnosis) மற்றையது பரிகாரம் (Treatment) காணுதல். விஞ்ஞானம் எவ்வளவுதான் முன்னேறிவிட்டாலும் நடைமுறையில் இந்த இரண்டு பிரிவுகளும் நூறு வீதம் வெற்றியளிக்கும் வகையில் இல்லை. புற்றுநோய் ஒரு உயிர்கொல்லி நோயாக இருந்தும் அதனை ஆரம்பகட்டத்திலே அடையாளம் காண்பதும் உரிய பரிகாரம் செய்வதும் இன்றும் இயலாத காரியமாகவே உள்ளது.

இன்று 'எபோலா' என்ற உயிர்கொல்லி தொற்றுநோய் ஒன்று சைபீரியா உள்ளிட்ட ஆபிரிக்க நாடுகளில் அடையாளம் காணப்பட்டுள்ளது. இது மனித குலத்திற்கே அச்சுறுத்தலாக உள்ளது. ஆனால் இதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிகாரம் கண்டுபிடிக்கப்படவில்லை என உலக சுகாதார ஸ்தாபனமே அறிவித்துள்ளது. இப்படி எத்தனையோ நோய்கள் அடையாளம் காணப்படாமலும் பரிகாரம் கண்டுபிடிக்கப்படாமலும் உள்ளன.

பாருங்கள்...... எமது உடல் சுத்தமான காற்றிலும் தெளிந்த நீரிலும் சத்துள்ள உணவிலும் தான் உயிர்ப்பினை பெறுகின்றது. இன்றைய நிலையில் நாம் இவற்றை பணம் செலுத்தி பெற்றுவிடலாம் என நீங்கள் கருதினால் அங்குதான் நீங்கள் தவறு இழைப்பவர் களாகிறீர்கள்.

உண்மையில் எமது உடல் தூய காற்றையும், நீரையும் உணவு வகைகளையும் கஷ்டப்பட்டுத் தேடி கண்டுபிடித்து பயன்படுத்தகூடிய விதத்தில் அதற்கான பலத்துடன் படைக்கப்பட்டுள்ளது.

எமது முன்னோர் நீர் நிலைகளை தேடி அலைந்தார்கள். உணவுக்காக நாள் முழுவதும் காட்டில் அலைந்து திரிந்து மிருகங்களை துரத்தி வேட்டையாடினர். நிலத்தை அகழ்ந்து கிழங்கு வகைகளை சேகரித்தார்கள்.

சற்று யோசியுங்கள்..... அவர்களது உடலும், உள்ளுறுப்புக்களும் எப்படி உரம் பெற்றிருக்கும்? அவர்கள் உண்ட உணவில் ஏதாவது இரசாயனப்பொருட்கள் சேர்ந்திருந்தனவா? விஸ்கி, பிரண்டி, ஜின் போன்ற உடலை எரிக்கும் மதுசாரங்களை அவர்கள் அறிந்திருந்தார்களா? வெண்சுருட்டு மூலம் உடலுக்கு புகை அடித்தார்களா? இல்லை!

அதனால் தான் அவர்கள் நீரிழிவு..... உயர் இரத்த அழுத்தம்..... மாரடைப்பு ஆகிய நோய்கள் எதுவுமின்றி நீண்டகாலம் உயிர் வாழக்கூடியதாக இருந்தது. நோய் எதிர்ப்பு சக்தி அவர்களிடம் நிறையவே இருந்தது.

மிருகங்களையும் பறவைகளையும் நீர்வாழ் உயரினங்களையும் எடுத்துக்கொள்ளுங்கள். அவற்றுக்கெல்லாம் இயற்கையை தவிர யார் மருத்துவர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நாகரீக உலகில் ஆதி மனிதனின் வாழ்க்கை முறையால் அவன் பெற்றுக்கொண்ட சக்திக்கும் ஆரோக்கியத்துக்கும் மாற்றீடு என்ன என நீங்கள் வினவலாம்……

உண்மைதான்….. அந்த மாற்றீடு பற்றி ஆராயாவிட்டால் இந்த கட்டுரை அர்த்தமற்றதாகிவிடும்.

சிறுவர் முதல் முதியோர் வரை சரியான உணவுப்பழக்கத்தை கைக்கொள்ள வேண்டும். நன்கு நீரருந்த வேண்டும். கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும் அல்லது பயிற்சிகளில் ஈடுபடவேண்டும். எட்டு மணி நேரம் தூங்க வேண்டும். தினமும் காலைக் கடன்களை (பல்துலக்கல், குளித்தல், மலம் கழித்தல்) நிறைவேற்ற வேண்டும். தினமும் காலையில் மலம் கழிப்பதன் மூலம் வயிற்றை துப்பரவு செய்து கொள்ளும் எவரையும் இலகுவில் நோய்கள் அண்டாது!

சிறுவர்களும், இளைஞர்களும், நடுத்தரவயதினரும் நன்கு களைக்கும் படியான விளையாட்டுக்களில் ஈடுபடவேண்டும். உதைப்பந்தாட்டம், துடுப்பாட்டம், கரப்பந்தாட்டம், கூடைப்பந்து, ரகர், போன்ற விளையாட்டுக்கள் நன்கு களையை உண்டுபண்ணி உள்ளுறுப்புக் களின் வளர்ச்சிக்கும் சக்திக்கும் துணைபுரியும். நீச்சல், துவிச்சக்கர வண்டி சவாரி, மலையேறுதல் போன்றவையும் ஒத்த பலனை தரும்.

இளமையில் செய்யும் பயிற்சிகள் எமது முதுமை காலம் வரை கைகொடுக்கும். வருத்தம் வந்த பின்னர் பயிற்சிகளை ஆரம்பிக்கலாம் என்று இருத்தலைப்போல ஒரு மூடத்தனம் இருக்கவே முடியாது.

எமது உடலுக்கு சில வகை உணவுகள், தூசு, குளிர், தேனி, வேறும் ஜந்துக்களின் விஷம் ஒவ்வாமையை (Alergic) உண்டு பண்ணும். உடல் அடங்கலும் தடித்து சிவப்பதுடன் கடியும் அகோர மாக இருக்கும். நாள் செல்லச்செல்ல இருதயத்தை செயல்படவிடாத படி இறுக்கும். டாக்டரிடம் போனால் நீங்கள் தான் உடலுக்கு ஒவ்வாமையை உண்டுபண்ணுவது எது என்பதை கண்டுபிடிக்க வேண்டும் என்று கூறி கையை விரித்து விடுவார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நண்பர் ஒருவர் இருக்கின்றார். அவருக்கு கோழி இறைச்சி ஒன்றைத்தவிர மற்றைய இறைச்சி வகைகள் அனைத்தும் ஒவ்வாமையை உண்டு பண்ணி உயிராபத்தை ஏற்படுத்தக்கூடியவை.

23.08.2014ல் சுபமங்களாவில் ஒரு பூப்புனித நீராட்டு விழா நடந்தது. சுயபரிமாறல் முறையில் நண்பர் தனக்கான உணவை கோழி இறைச்சிக்கறி, சிக்கன் டெவல், உட்பட அளவாக பரிமாறி எடுத்துக்கொண்டார். அவரது மனைவி, மகன், மகள், அவர்களது குடும்பம் பேரப்பிள்ளைகள் நால்வர் உட்பட ஒரே மேசையில் சாப்பிட்டனர். நண்பர் சாப்பிட்டு முடித்து ஐஸ்கிறீமும் பருகி ஆறுதலாக மூச்சு விடும் போது மனைவி அவரை கேட்டாள்….. 'நீங்கள் ஆட்டிறைச்சி சாப்பிடவில்லை தானே?' என்று. அவர் அதிர்ந்து விட்டார்! "ஏன் ஆட்டிறைச்சி இருந்ததா?" என அவசர அவசரமாக கேட்டார். 'ஏன் அங்கே Board வைத்திருக்கின்றார்கள். நீங்கள் பார்க்கவில்லையா?" மனைவி கேட்டாள். 'Board'ம் இருந்தது! அப்ப 'நீர் என் எனக்கு கூறவில்லை' என்று கேட்டார். 'நீங்கள் சாப்பிடமாட்டீர்கள் என்று தான் கூறவில்லை' என்று அவள் ஆறுதலாக பதில் கூறினாள். நண்பருக்கு தலை சுற்றி வியர்க்க தொடங்கிவிட்டது. ஒவ்வாமை எப்படியான தாக்கத்தை கொடுக்கும் என்று அவருக்கு தெரியும்.

மருமகன் நண்பரின் நிலையை புரிந்து கொண்டார். அவர் நண்பருக்கு அடுத்தபடியாக வரிசையில் நின்றவர். 'நீங்கள் பயப்பட ஒன்றுமில்லை. நீங்கள் உங்களுக்கான உணவை பரிமாறி சென்ற பின்னர்தான் ஆட்டிறைச்சி பாத்திரமும் Boardம் மேசைக்கு வந்தன' என்று தெளிவுபடுத்தினார். நண்பருக்கு அப்போதுதான் போன உயிர் திரும்பி வந்தது!

மலைமுரசு வாரமலர் - 20.09.2014 - 26.09.2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 'ஏதேச்சையாக பிறர்க்குத் தீங்கிழைத்தல்'

எமது வாழ்க்கையினூடாக நாம் பல அனுபவங்களைப் பெற்று எம்மை மேம்படுத்திக்கொண்டாலும் எமது சுபாவம் காரணமாக நாம் பிறர்க்கு பல தீங்குகளை நாளாந்தம் செய்து கொண்டே இருக்கின்றோம். சுபாவம் என்பது எமது பிறப்போடு இணைந்தது. ஏறத்தாழ பழக்கதோஷம் என்று கூறலாம். எமது புத்தி நடுவாண்மையுடன் நியாயத்தை கூறவல்லது. ஆனால் மனம் அப்படியல்ல. அது அறிவுக்கன்றி உணர்ச்சிகளுக்கே முக்கியத்துவம் கொடுப்பது. அது போலவே சுபாவம் இரத்தத்துடன் சேர்ந்தது. புதிதாக மணமுடித்த தம்பதியர் மத்தியில் முரண்பாடு ஏற்படுவதற்கு காரணம் அவர்களது சுபாவம் வேறுபட்டிருப்பதே. அவர்கள் இருவர்க்கும் ஒத்த கல்வி அறிவு இருக்கலாம். அனுபவம் இருக்கலாம் ஆனால் சுபாவ வேறுபாடு இருந்தால் அவர்களால் ஒத்து குடும்பம் நடாத்தமுடியாது.

எமக்கு நல்ல முதிர்ச்சி இருக்கும். சரி எது? பிழை எது? என்ற ஞானம் இருக்கும். ஆனால் நாம் ஏதேச்சையாக பிறர்க்கு தீங்கிழைப்பதை எமது சுபாவமாக கொண்டிருப்போம். இக்கட்டுரையின் நோக்கம் அப்படியான சிறு சிறு தவறுகளை வாசகர்களுக்கு சுட்டிக்காட்டுவதே.

எமது சிறு தவறுகளில் முன்னணியில் நிற்பது எமக்கு மட்டுமே தெரிந்த மற்றவர்களது ' இரகசியத்தை கசிய விடுதல்' நாம் பலருடன் பழகுகின்றோம். பலர் எம்மில் நம்பிக்கை வைத்தும் தமது மன ஆறுதலுக்காகவும் எமது ஆலோசனையை பெற்றுக்கொள்ளும் நோக்கிலும் தமது குடும்ப இரகசியத்தை எமக்கு கூறுகிறார்கள். நாம் அதனை அவர்களது நன்மையில் அக்கறை இல்லாதவர்களுக்கு கசிய விடுவதால் எம்மில் நம்பிக்கை வைத்தவர்களுக்கு அது பெரும் தீங்காக அமைந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அடுத்த நல்ல பழக்கம்'புறங்கூறல்' ஆகும். திருவள்ளுவர் புறங்கூறாமைக்கென்றே தனது நூலில் ஒரு அதிகாரத்தை ஒதுக்கியுள்ளார். புறங்கூறுபவர்கள் மேல் தனக்கு இருக்கும் கோபத்தின் உச்சக்கட்டமாக அவர், 'புறங்கூறி பொய்த்து வாழ்தலைக் காட்டிலும் சாவது அறம் கூறும் ஆக்கம் தரும்' என்று சாடுகின்றார். எமது பிள்ளைகள் இந்த அதிகாரத்தின் பத்து குறள்களையும் கட்டாயமாக கற்க வேண்டும். எமது உறவினர்களும் நண்பர்களும் எம்முடன் அளவளாவிக் கொண்டிருக்கின்றார்கள். எமது மனமோ அவர்களுடைய கருத்துக்களுக்கு உடன்பாடாக இல்லை. அவர்களுடைய முகத்துக்கு நேரே கருத்துரைப்பதுதான் உண்மையில் பிரச்சனைகளுக்கு தீர்வாகும். ஆனால் அப்படிச் செய்யாது அவர்கள் விடைபெற்று சென்றபின் அவர்களை தூற்றுவது என்ன முறை? இந்த தவறை நாம் ஒவ்வொருவரும் உடன் நிறுத்திக்கொள்ளவேண்டும்.

அடுத்து , ' மற்றவர்களுக்கு வரவிருக்கும் நன்மையை அசூயை காரணமாக தடுத்தல்.' ' எனக்கு மூக்கு போனாலும் பரவாயில்லை எதிரிக்கு சகுனம் பிழையாக இருக்கவேண்டும்' என்றொரு பழமொழி வழக்கிலுண்டு. எமக்கு தீங்கு நேர்ந்தாலும் பரவாயில்லை மற்றவர்களுக்கு நன்மை கிட்டக்கூடாது என்கின்ற கெட்ட சிந்தனை. எண்ணிப்பார்த்தால் எமது தவறு எத்துணை தீங்கானது என்பது புரியும். நாம் யாருக்கு நன்மை கிட்டக்கூடாது என்று எண்ணுகின்றோம்? நாம் அறிந்தவர்களான எமது சொந்த பந்தங்களுக்கும் நண்பர்களுக்கும் தான்!. நாம் அறியாதவர்களுக்கு அதிர்ஷ்ட லாபச் சீட்டில் கோடிக்கணக்கில் கிடைக்கின்றது. ஆனால் எமது உறவுகளுக்கு ஒரு இலட்சம் கிடைத்துவிட்டால் எமது மனம் கொதிக்கின்றது. ஆயிரக் கணக்கானவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைக்கிறது. பக்கத்து வீட்டுக்காரனின் பிள்ளைக்கு அனுமதி கிடைப்பதை மனம் பொறுத்துக்கொள்ளாது. ' பார்த்து எழுதித்தான் பாஸ் பண்ணியிருப்பான்' என்றொரு பழிச்சொல்லும் கூட. எமக்கு உதவி செய்பவர்கள் எமது சொந்த பந்தங்களும் நண்பர்களும்தான் என்பதை நாம் உணர்ந்து அவர்களை வாழ்த்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மற்றொரு தவறு ,அவசியமான நேரத்தில் உதவி செய்ய தவறல்' ஆகும். நாம் மற்றவர்களுடன் உறவும் நட்பும் பாராட்டி நேசமாக இருப்போம். ஆனால் அவர்களுக்கு ஒரு உதவி தேவைப்படும் இடத்தில் மெதுவாக சறுக்கிவிடுவோம். அதற்கு காரணம் நாம் இதுவரையில் எமது சுயநலம் காரணமாகவே அவர்களுடன் உறவு பாராட்டினோம். அவர்கள் மீது எமக்கு உண்மையான அன்பு இல்லை. இப்போ அவர்கள் கேட்கும் உதவியை செய்தால் எம்மை விட மேம்பட்டுவிடுவார்கள் என்கின்ற குறுகிய மனப்பான்மை.! எமது எதிர்வீட்டுக்காரனுக்கு இரண்டு பெண் பிள்ளைகள். ' இவர் எப்படி அப் பெண்களை கரை சேர்க்கின்றார் என்று பார்ப்போம்' என எண்ணி மனம் குதூகலிக்கின்றது. திடீரென ஒரு பிள்ளைக்கு விவாகம் முற்றாகிறது. யாராவது சிறிய பண உதவி செய்தால் அப்பிள்ளை கரைசோந்துவிடும். அப்பிள்ளை கரைசேர்வதை எமது மனம் பொறுக்காது'. எனவே முட்டுக்கட்டை போடுகின்றோம். ' பணத்தை யாரிடமாவது மாறலாம்தான். ஆனால் பொறுப்புக்கொடுக்கவேண்டும். உயர் வட்டி கொடுக்கவேண்டும். என்று நிபந்தனைகள் போடுகின்றோம். சற்று சிந்தியுங்கள். நாம் நடந்துகொள்ள வேண்டிய முறை இது தானா? ' உடுக்கை இழந்தவன் கை போல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு' என்ற குறளை நாம் அறியோமா?

எமது அடுத்த பெருந்தவறு 'பக்கச்சார்பாக நடத்தல்' எமது அறிவும் அனுபவமும் எமக்கு பல பாடங்களை கற்றுத்தந்துள்ளன. எமக்கு நீதி நியாயம் நன்கு புரியும். சமூக மட்டத்தில் ஏழை - பணக்காரன், கல்வி கற்றவன் - கல்லாதவன், எமது ஊர்க்காரன் - பிறஊர்க்காரன், உறவினன்- 'உறவினனல்லாதவன் என்று பல பாகுபாடுகளுக்கு மத்தியில் நாம் வாழுகின்றோம். ஆனால் நீதி நியாயம் என்று வரும் போது நாம் எந்த ஒரு பாகுபாட்டுக்கும் இடமளிக்காமல் பக்கச் சார்பின்றி கருத்துரைக்கவேண்டும். உதாரணத்துக்கு ஒரு பின்தங்கிய கிராமத்தின் 'ஊர்ப் பஞ்சாயத்தின்' தீர்ப்பை பார்ப்போம். ஒரு பணக்கார வீட்டுப்பையன் பதினாறு வயதே நிரம்பிய ஏழைச்சிறுமியை கடத்திச்சென்று கெடுத்துவிட்டான். விவாகம் செய்யவும் மறுத்துவிட்டான். அந் நிலையில் பெண்ணின் பெற்றோர் பஞ்சாயத்தில் முறைப்பாடு செய்கின்றார்கள். பஞ்சாயத்து, நிலைமைகளை தீர விசாரித்து தீர்ப்பளிக்கின்றது. ' பணக்கார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுப் பையனை சகலரும் அறிவர். ஏழைப்பெண்ணும் அறிந்தே வைத்திருப்பாள். அப் பையனின் குடும்பத்தினரின் நற்பெயருக்கு குந்தகம் விளைவிப்பதென்பது பெரும் தவறு. எனவே அப்பெண்ணையும் குடும்பத்தினரையும் இப் பஞ்சாயத்து இக் கிராமத்திலிருந்து தள்ளி வைக்கின்றது.' பக்கச் சார்பாக நடக்கும் ஒவ்வொருவரும் இந்த தீர்ப்பை முன்னிறுத்தி திருந்த வேண்டும்.

சமூகத்தில் அவர் அவர் தமது கடமைகளை செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றார்கள். அலுவலகங்களில் தான் கடமைகள் இருக்கின்றன என்று எண்ணக்கூடாது. ஒரு பெற்றோராக , சகோதராக, பிள்ளைகளாக, உறவினராக , நண்பனாக நம் எல்லோருக்கும் கடமைகள் வகுக்கப்பட்டுள்ளன. பிரதானமாக பெற்றோர் என்ற ரீதியல் நாம் பிள்ளைகளை நல்லவர்களாகவும் இச் சமுதாயத்துக்கு பயன்படக்கூடியவர்களாகவும் வளர்க்க வேண்டும். 'தந்தை மகனுக்காற்றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச்செயல்' என்று வள்ளுவர் கூட சொல்லி இருக்கின்றார். அதே போன்று பிள்ளைகளும் நல்லொழுக்கமுடையவர்களாக நடந்துகொள்வதன் மூலம் பெற்றோரை கௌரவிப்பதுடன் சமூத்திற்கும் பணியாற்ற வேண்டும். கணவன் மனைவியை கண்மணி போல் காக்க வேண்டும். அவளுக்கு பிறரால் ஒரு தீங்கு நேர அனுமதிக்ககூடாது. மறுவளமாக மனைவி கணவன் மேல் அன்பு பூண்டு பணிவிடைகள் செய்ய வேண்டும். இன்னும் சொல்லப்போனால் சகோதர பாசம் என்பது. அனைத்து உறவுகளை காட்டிலும் உயர்ந்தது. உண்மையான சகோதர பாசத்தை எவராலும் பிரிக்க முடியாது. அதே போன்று நாம் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் செய்ய வேண்டிய கடமைகளை அறவழி நின்று செய்ய வேண்டும்.

அடுத்து 'கோள் சொல்லுதல்' பெரும் தவறாக கணிக்கப்படவேண்டியதாகும். அதனால் பெரும் சாம்ராஜ்ஜியங்களே சரிந்துள்ளன. ஒரு அனுபவ பகிர்வு மூலம் இதனை நோக்குவோம்.

நான் அரச சேவையில் இருந்ததால் நாட்டிலேயே தங்கிவிட்டேன். எனது தம்பி தங்கை இருவரும் வெளிநாடு சென்று நல்ல நிலையில் இருக்கின்றார்கள். தங்கையும் மச்சானும் என்மேல் அன்பு பூண்டிருந்தார்கள். தங்கை சிறிது பின்நின்றாலும். மச்சான் அவளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டி எனக்கும் எனது பிள்ளைகளுக்கும் உதவி செய்ய வைப்பார். எனது மைத்துனி மறுவளம். எனது தங்கையின் மகளுக்கு ஒரு வருடங்களுக்கு முன்னர் விவாக பேச்சு முற்றுப்பெற்றது. நானும் சமூக வழக்கப்படி தம்பியுடன் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி மகிழ்ச்சியை பகிர்ந்துகொண்டேன். மைத்துனியும் உரையாடல்களுக்கு செவிமடுத்தாள். அவா எனது தங்கை பற்றி பலபுறணிகளை கூறியிருந்தும் நான் தங்கைக்கு கோள் சொல்லவில்லை. காரணம் இருவரதும் ஒற்றுமையை குலைக்க கூடாது எனபதே! ஆனால் மைதுனி நடந்து கொண்ட விதமோ மாறானது. என்னையும் தங்கையையும் பிரிப்பதற்கு நன்கு தூபம் போட்டுள்ளாள் என்பது மட்டும் புரிந்தது. எனது தங்கை தொலைபேசி எடுத்தால். அழுகிறாள். என்னை குற்றம் சாட்டி ஒரு கடிதத்தையும் வரைந்துள்ளாள். அதில் அவளது அண்ணி வஞ்சகமில்லாமல்தான் சொன்னவா. அவாவில் பிழை இல்லை. என்று வக்காளத்தும் வாங்கியுள்ளாள். என்ன சொன்னா என்பதை நானோ அறியேன்! நான் தூக்கி வளர்த்த தங்கை என்மேல் கோபிக்கும் அளவிற்கு மைத்துனி போட்ட தூபம் வேலை செய்திருக்கின்றது.!

பாருங்கள்.... கோள் சொல்லுவது எப்படி உறவுகளுக்குள் பகைமையை தூண்டிவிடுகின்றது. என்பதை !

மொத்தத்தில் எதேச்சையாக நாம் பிறருக்கு செய்யும் தீங்குகளை உடன் நிறுத்துவதே எமது பிரதான கடமை என கொள்வோம்!

மலைமுரசு வாரமலர் - 04.07.2015 - 10.09.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 காலம் பொன்னானது.

இயற்கை எமக்கு சில வரப்பிரசாதங்களை வழங்கியுள்ளது. நாம் சம்பாதிக்கும் பணம் பொருள் பொன் ஆகியவற்றை எம்மால் சேமித்து வைக்கவும் அவசியமான நேரத்தில் மட்டும் செலவிடவும் முடியும். ஆனால் காலத்தை மட்டும் எம்மால் சேமிக்கவோ அதை வேண்டிய வேண்டிய நேரத்தில் செலவிடவோ முடியாது. எமது காலம் பற்றிய அசட்டை ஒரு பேருந்தை தவறவிடுவதிலிருந்து வாழ்கையின் அதி முக்கிய வாய்ப்புக்களை இழப்பது வரை எமக்கு பல நஷ்டங்களை உண்டுபண்ண வல்லது.

காலம் எம்மை ஏமாற்றுவதில்லை. எமது அசட்டைதான் பொன்னான காலத்தை வீணடிக்கின்றது. அதிகாலையில் விழிக்க வேண்டும் என்றால் இந் நாட்களில் யார் கேட்கின்றார்கள். ஒரு மணி நேரம் காலதாமதமாக எழும்பினால் நேரத்திற்கு பாடசாலை போவது தடைப்படும். காரியாலயத்திற்கு குறுகிய லீவு போடவேண்டி வரும். இனி தயாராவதற்கு தேவையான பொருட்களை தேடினால் கிடைக்காது. அதில் பெருமளவான நேரம் போய்விடுகின்றது. நாம் தான் வீடுகளில் அந்தந்த பொருட்களை அதற்காக குறிப்பிட்ட இடங்களில் வைப்பதில்லையே!. அதனால் கால விரயத்துடன் சேர்ந்து ஆத்திரம் கோபம் பிறரை பழிவாங்கும் உணர்வு எல்லாம் உண்டாகின்றது.

எந்த பொருளை எங்கு வைக்கவேண்டும். என்பது தெரியாமல் இருப்பது போல எந்த நேரத்தில் எந்த வேலையை செய்யவேண்டும் என்கிற திட்டமும் எம்மிடம் இல்லாதிருக்கின்றது. "காலை எழுந்தவுடன் படிப்பு... பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு... மாலை முழுதும் விளையாட்டு... என்று வழக்கப்படுத்திக்கொள்ளு பாப்பா" என்று பாரதி அன்றே காலத்தை ஒவ்வொரு செயலுக்கும் நிர்ணயித்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுப்பாடமோ கந்தோர் வேலையோ அதை இரவு சாப்பாட்டுக்கு முன்னர் பூர்த்தி செய்தால் விட்டது கவலை!

எமக்கான இருப்பத்திநான்கு மணித்தியாலத்தில் எட்டு மணித்தியாலம் தூக்கத்தில் போய்விடுகின்றது. எட்டு மணித்தியாலம் காரியாலயம் அல்லது பாடசாலை என்று கழிகின்றது. மிகுதி எட்டு மணித்தியாலமே நாம் சுதந்திரமாக எமது வாழ்கையின் கருமங்களை நிறைவேற்ற எஞ்சியுள்ளது. அந்த பொன்னான நேரத்தை நாம் பயனுள்ள வழியில் கழிக்க வேண்டும். எமது காரியாலயத்திற்கு போய் வர நான்கு மணிநேரம் தொடருந்திற்கு செலவாகின்றது என்றால் எமக்கான பல கருமங்கள் அதனால் தடைப்படும்.

இந்த விடயத்தில் வெளிநாடுகளில் சிலர் விழிப்பாக இருக்கின்றார்கள். தொடருந்தில் பிரயாணிக்கும் போதே ‘சேவ்’ செய்தல் ஸ்நானம் செய்தல் போன்ற கருமங்களை நிறைவேற்றிக்கொள்கின்றார்கள். இன்னும் படிக்கவேண்டிய குறிப்பெடுக்கவேண்டிய நூல்களை வாசிக்க அது பொன்னான நேரம். பெண்கள் கைவேலை செய்யலாம். மாணவர்கள் மனப்பாடம் செய்யலாம். எம்மில் பலர் செய்ய வேண்டிய கருமங்களை ஒத்திப்போட்டுக்கொண்டே இருப்பார்கள். ‘பில்’ கொடுப்பனவா? அதை உடனே செலுத்தவேண்டும். அந்த நேரத்தை பயன்படுத்தி ‘ கிரடிற் காட்டுக்கு’ செலுத்தவேண்டிய பணத்தையும் கட்டிவிடலாம். எமக்கு வரும் கடிதங்களுக்கு உடனேயே பதில் தரலாம். கடித உறை தபால் தலை, பசை என்பன எம்முடன் இருந்தால் சரி. நண்பரை வருத்தம் பார்க்க வேண்டுமா? மதிய உணவு இடைவேளையை பயன்படுத்திக்கொள்ளலாம்.

எமக்கு பல பொறுப்புக்கள் இருக்கும். அவற்றை நிறைவேற்றுவதில் நாம் விரைந்து செயற்பட்டால் காலம் மிச்சமாகும். அதற்கு வேண்டியது நாம் முடிவெடுப்பதில் காட்டும் அதீத வேகம் ஆகும். ஒரு விஷயத்தை வைத்து மண்டையை குடைந்துகொண்டிருந்தால் இன்னும் பல பொறுப்புக்கள் வந்து எமது நேரத்தை விழுங்கிவிடும்.

எமது நேரத்தை விரயம் செய்வதில் அதிக பங்களிப்பு வழங்குபவர்கள் அரட்டை அடிப்பவர்கள் தான். அவர்கள் பற்றி எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். அவர்கள் கூறுவார்கள் உங்களை விட்டால் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயத்தையிட்டு கருத்து கூறுவதற்கு யாருமில்லை! நீங்கள் அதை நம்பிவிட்டால் போதும். உங்கள் நேரத்தை நீங்கள் அறியாமலே வீணடித்து விடுவார்கள். அவர்கள் விடயத்தில் முகத்தை முறிக்கலாமா என்றெல்லாம் நீங்கள் தயங்க கூடாது. சிலர் தங்களது கருமங்களுக்கு உதவியாக உங்களை அழைப்பார்கள். அதனால் உங்களுக்கு பயன் ஏதும் இருக்காது. ஆனால் உங்கள் வேலைகள் பல தடைப்படுவதோடு நேரமும் விரயமாகும். அதே போன்று அநாவசிய தொலைபேசி அழைப்புகளுக்கு நீங்கள் காது கொடுத்தால் அந் நேரத்தில் நீங்கள் நிறைவேற்ற வேண்டிய பல கருமங்கள் தடைப்படும்.

ஒரு நூலின் அட்டைப்படத்தில் மயங்கி அதனை வாசிக்க முடிவெடுத்தீர்களா? முதலில் 'அறிமுக உரை' 'நூல் நயவுரை', இரண்டையும் வாசியுங்கள் அந்த நூல் உங்களுக்கு எவ்வளவு பயன்படும் என்பதை தெரிந்து கொண்ட பின்னர் அவசியம் என்றால் வாசிக்கலாம். இல்லாவிட்டால் அந்த நூலை வாசிப்பதை தவிர்த்து நேரத்தை மிச்சப்படுத்த முடியும். உங்களுக்கு தொலைக்காட்சி பார்ப்பதில் ஆர்வம் இருக்கலாம். நீங்கள் உற்சாகமாக பெரும் பொறுப்பொன்றை நிறைவேற்றக் கூடிய நிலையில் இருக்கும் போது ' செட்டியில்' உட்கார்ந்து ' ரீ.வி' பார்ப்பது போன்ற முட்டாள்தனம் எதுவும் இல்லை. உடல் தளர்ந்த நிலையில் எதனைச்செய்வதற்கும் இலாயக்கில்லாத நேரத்தல் 'ரீ.வி' பார்க்கலாமல்லவா? சிலரது அடுத்த தவறு சில 'புரோகிராம்' பிடித்து விட்டது என்பதற்காக திரும்ப திரும்ப பார்ப்பது.

வாழ்கையிலும் கூட எம்மில் பலர் ஒரு வேலையை ஒரு தடவையில் செய்து முடிக்க மாட்டார்கள். ஒரு கட்டுரையோ சிறுகதையோ எழுத வேண்டியிருக்கும். . எழுத தொடங்குவதற்கு முன்னரே அது பற்றி சரியாக சிந்தித்து அது எந்த கோணத்தில் அமைய வேண்டும். எத்தனை சொற்களுக்குள் அடங்க வேண்டும் என்றெல்லாம் தீர்மானித்து விட வேண்டும. பின்னர் நல்ல கடதாசியில் உறுப்பெழுத்தில் எந்த வெட்டுக் கொத்தும் இல்லாமல் எழுத வேண்டும். வேணடுமென்றால் நிழற்பட பிரதி எடுக்கலாம். மூலப்பிரதியை தாமதம் இன்றி பிரசுரத்திற்கு அனுப்ப அது வசதியாக இருக்கும். திரும்ப எழுதுவதில் உள்ள நேர விரயம் தவிர்க்கப்படுகிறது. நாம் ஆற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த விடயத்திலும் அவதானமாக இருப்பதன் மூலம் நேர விரயத்தை தடுக்க முடியும்.

பலர் விடும் இன்னுமொரு தவறு வாழ்க்கையை நல்ல முறையில திட்டமிடாமை. எவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதை நாம் முற்கூட்டியே தீர்மானித்து விட்டிருந்தால் சம்மந்தப்படாத விடயங்களை ஒதுக்கி விடலாம். எமக்கு பல நிறுவனங்களிடம் இருந்தும் அமைப்புக்களிடமிருந்தும். அழைப்புக்கள் வரலாம். அதையெல்லாம் ஏற்க வேண்டிய அவசியம் எமக்கு உண்டா இல்லையா என்பதை நாம் தான் தீர்மானிக்க வேண்டும். மற்றவர்களின் உயர்ச்சிக்காக நமது நேரத்தை விரயம் செய்ய முற்படக்கூடாது. சரியான திட்டம் எமக்கு இருந்தால் ஒரே நேரத்தில் நிறைவேற்றக் கூடிய கருமங்களை இனங்கண்டு பூர்த்திசெய்து விட வசதியாக இருக்கும்.

குடும்பத்தில் ஒரு அங்கத்தவருக்கு அன்றைய தினம் 'மெடிக்கல் கிளினிக்' ஆக இருக்கும். மற்றொருவருக்கு பெருவிரல் காயம் காரணமாக உபாதை. இரண்டையும் சேர்த்தே செய்துவிடலாம்.

மாதத்திற்கு தேவையான மளிகைச் சாமான்களை ஒரே தடவையில் கொள்வனவு செய்வதால் பணம் சேமிக்கப்படுவதுடன் நேரமும் மிச்சம். குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் மாறுபட்ட தேவைகள் இருக்கும். அவற்றை கேட்டறிந்து ' லிஸ்டில்' சேர்த்துவிட்டால் அவர்களது நேர விரயத்தை தவிர்க்கலாம். ஒரு குடும்ப அங்கத்தவர் ஒரு நாளில் நிறைவேற்ற வேண்டிய பணிகள் பல இருந்தால் அவற்றை ஒரே தடவையில் காலையிலேயே கூறிவிடவேண்டும். அவர் தனது சொந்த கருமங்கள் மத்தியில் அவற்றை இலகுவாக பூர்த்திசெய்ய அது உதவும். அதே நடைமுறையை அலுவலகங்களிலும் கடைப்பிடிக்க வேண்டும். அலுவலர்கள் தேவையற்ற 'ரென்ஷனுக்கு' உட்படாமல் சுமூகமாக தமது நாளாந்த கடமையை நிறைவேற்ற அது உதவும்.

காலம் எவ்வளவு பெறுமதியானதென்பதை உணர்வதில்தான் எமது வெற்றி தங்கி உள்ளது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு எழுத்தாளருக்கு நேரம் மிக முக்கியம். சிறுகதை கட்டுரை, தொடர் நவீனம் கவிதை என்று எழுதிக் கொண்டே இருக்க வேண்டும். யோசித்துக 'கொண்டிருந்தால் நேரம் தான் விரயமாகும். எழுதுவதற்காக அமர்ந்து விட வேண்டும். எழுத்தாளர்களுக்கு பிரபஞ்ச சக்தியுடன் தொடர்பு உண்டு. எழுத தொடங்கிவிட்டால் புது புது கருத்துகளுக்கு பஞ்சம் இருக்காது. எழுத்து வேகம் அதிகரிப்பதால் நேரமும் மீதியாகும்!

எழுத்தாளர்களுக்கு மட்டுமல்ல. விஞ்ஞானிகள் , சிற்பகலைஞர்கள், ஓவியர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் போன்ற பிரிவுகளில் அடங்கும் நம் எல்லோருக்குமே ஒரு உந்து சக்தி உண்டு. நாம் நேர விரயமின்றி முயற்சித்தால் தானாகவே எல்லாமும் கைகூடும்!

மலைமுரசு வாரமலர் - 17.10.2015 - 23.10.2015

ஒளி அரசி - சஞ்சிகை புரட்டாதி 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 குடியை கெடுக்கும் குடி

ஆதிகாலம் தொட்டே குடிக்கென்று ஒரு வரலாறு உண்டு. அந்த அளவுக்கு குடி மனிதனை ஆட்டிப் படைத்துக் கொண்டே இருக்கின்றது. சோமபானம் முதல் 'விஸ்கி', 'பிறண்டி', 'ஜின்', 'பியர்', 'ஸ்ரௌட்' என்று நானாவித பானங்கள் உயர்குடி மக்களை கவர்வதாக உள்ளன.

நீங்கள் ஒரு மதுபான விற்பனை நிலையத்திற்கு போனீரகளேயானால் வகைவகையான பெட்டிகளில் மதுபான போத்தல்கள் கண்ணாடி 'ஷோக்கேஸ்களில்' அழகழகாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். இப்போ குளிர்பானங்கள் போன்று 'பியர்', 'ஸ்ரௌட்', ஆகியனவும் 'ரின்'களில் அடைக்கப்பட்டு இலகுவில் எடுத்துச்செல்லும் வகையில் விற்பனைக்கு வந்துள்ளது. கையடக்கமானதும் சட்டைப்பையில் மறைத்துவைத்து பயன்படுத்த கூடியதுமான விதத்தில் உயர்ரக மதுபானங்களும் கிடைக்ககூடியதாக உள்ளன.

இனி 'ரெஸ்ரோரண்ட்' மற்றும் 'ஹோட்டல்கள்' மதுபானங்களால் நிரம்பியிருக்கின்றன. உயர்குடிமக்கள் விரும்பிய விரும்பியபடி விதம்விதமான மதுபானங்களை அங்கு கொள்வனவு செய்ய முடிவதுடன் அவற்றை வட்ட வட்ட மேசைகளில் பரப்பி நண்பர்களுடன் கூட அமர்ந்து வேண்டிய நேரம் எடுத்து இரசித்து பருகமுடியும். 'மாட்டிறைச்சிடெவல்', 'சிக்கின்டெவல்', 'கிழங்குசிப்ஸ்', 'இறால்பொரியல்', 'முட்டை ஆம்லட்' என்று விதம்விதமான 'ரேஸ்ட்' வகைகள் மதுபானத்திற்கு மேலும் அனுசரணையாக இருக்கும்.

தவிர, இப்படிப்பட்ட வசதிகள் கொண்ட 'ஹோட்டல்கள்', 'ரெஸ்ரோரண்டுகள்', அமைந்திருக்கும் இடங்கள் பற்றி தொலைக்காட்சிகளிலும், பத்திரிகைகளிலும் வெளியிடப்படும் விளம்பரங்களை பார்த்து அறிந்து கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் 'பியர்', 'ஸ்ரௌட்' ஆகியவற்றை தவிர, உயர் ரக குடிவகைகள் இப்போ பல்லாயிரக்கணக்கான ரூபாய்களால் விலை அதிகரித்துள்ளன.

அவற்றை பணம் கொடுத்து பருகிவிட்டு 'சிக்கன்' பிரியாணியையும் சாப்பிட்டுவிட்டு ஒரு அறை போட்டு தங்க 'ஏசி' வசதி உட்பட வெறுமனே 12000 ரூபா அளவில் தான் செலவாகும்.

குளிர்நாடுகளில் வாழும் வெள்ளையர்களுக்கும், எமது நாட்டிற்கு வரும் சுற்றுலா பிரயாணிகளுக்கும் கோடிக்கணக்கான 'டொலர்களை' மாதாந்தம் வருமானமாக பெறும் வெளிநாட்டவருக்கும் வைரவியாபாரிகளுக்கும் எவை அவசியமோ அவை பற்றியே மேலே விஸ்தரிக்கப்பட்டது. அப்படிப்பட்டவர்கள் வாழ்க்கையை குடும்பத்துடன் இணைந்தே அனுபவிப்பவர்கள். வெளிநாடுகளில் அவர்களது ஆரோக்கியம் காப்புறுதி மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

ஆனால் எமது நாட்டில் நிலைமை வேறு. இது உஷ்ண பிரதேசம். எமது வருமானமும் மிகவும் அற்பமானது. எமது சமூகம், குடும்பம் பொறுப்பு என்று வாழ்வது. மனைவி, பிள்ளைகள் எங்களில் தங்கி இருப்பர். எமது அற்ப வருமானத்தில் அவர்களது உணவு, உடை, படிப்பு, தங்குமிடவசதிகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டிய கடமைப்பாடு எங்களுக்கு உண்டு. நோய்நொடி என்று வந்து விட்டால் அதற்கான செலவு வேறு. சாமத்தியவீடு, திருமணம், புதுமனை அமைத்தல், விழாக்கள் என்று எமது மனைவி, பிள்ளைகள் எம்மிடமிருந்து பல சேவைகளை எதிர்பார்திருப்பர். இனி பேரக்குழந்தைகள் பிறந்தால் அரவணைத்து பாதுகாக்க வேண்டும். பிள்ளைகளையும், மருமக்களையும் பேணவேண்டும். அவர்களுக்கு பக்கதுணையாக இருக்க வேண்டும். இப்போதெல்லாம் ஆண், பெண் இருபாலாரும் தொழில் பார்க்கிறார்கள். அவர்கள் கடமைக்கு செல்லும் நேரங்களில் நாம் பேரக்குழந்தைகளை பாடசாலைகளுக்கும், தனியார் வகுப்புக்களுக்கும் அழைத்துச்செல்லல் போன்ற கடமைகளை நிவர்த்தி செய்ய வேண்டும்.

இவற்றையெல்லாம் புறக்கணித்து விட்டு எம்மவர் பலர் குடிக்கு அடிமையாக இருப்பதனால் ஏற்படும் பாதகமான விளைவுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைகளில் அடக்கமுடியாது. Addiction என்று ஆங்கிலத்தில் ஒரு சொல் உண்டு. அது துர்பழக்கத்தைக் குறிக்கும். Addicted to liquor என்று சொன்னால் மதுவுக்கு அடிமையானமையை குறிக்கும். அந்த நிலைமைக்கு வந்து விட்டால் அவரை அந்த பழக்கத்தில் இருந்து மீட்பது மிகவும் கஸ்டம்.

எம் நாட்டில் அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் செய்த நல்ல காரியம் பொது இடங்களில், வீதி ஓரங்களில் குடிப்பதை (சிகரட் உட்பட) தடைசெய்ததுடன் யாராவது குடித்துவிட்டு அவ்வாறான இடங்களில் நடமாடினால் அவரை கைது செய்து சிறையில் அடைப்பது. குடி குடியைக்கெடுப்பது மட்டுமன்றி ஏனைய பொதுமக்களுக்கும் இடையூறாக இருப்பதை உணர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

எனினும் நாட்டில் அரசாங்கத்தின் அனுமதியுடன் சாராய தவறணைகள் அனைத்து இடங்களிலும் நடாத்தப்படுகின்றது. அதற்கு காரணம் குடிகாரர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கம் அல்ல. சாராய தவறணைகளால் அரசாங்கத்திற்கு பெரும் தொகை வருமானம் கிடைக்கின்றது.

அடுத்து கிராமங்கள் தோறும் வரி செலுத்தும் கள்ளுக்கொட்டில்கள் அமைந்துள்ளன. பனங்கள்ளு, தென்னங்கள்ளு இரண்டும் இங்கு குறைந்த விலையில் கிடைக்கக் கூடியதாக உள்ளது. இப்போ தேங்காயின் விலையேற்றத்தால் தென்னங்கள்ளு கிடைப்பது அரிதாக உள்ளது. பணங்கள்ளு ஒரு சீசனுக்கே கிடைக்கின்றது.

தவிர, சட்ட விரோத வடிசாராயம் தயாரிக்கப்படுகின்றது. அது குறைந்த விலைக்கு கிடைக்கின்றது. எங்கேயும், எப்போதும் பெற்றுக்கொள்ளலாம்.

இனி குடிகாரர்கள் யார்யாருக்கு கெடுதல் செய்கிறார்கள் என்று பார்ப்போம். குடிகாரர் முதலில் கெடுதல் செய்வது தமக்கே. பிரதானமாக குடி அவர்களுடைய சட்டைப்பையை காலி செய்கின்றது. அவர்களுடைய ஆரோக்கியத்திற்கு குந்தகம் ஏற்படுத்துகின்றது. நோய்களை உண்டு பண்ணுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமாக 'அல்சர்' ஏற்பட வழிவகுக்கின்றது. ஈரல், இதயம், நுரையீரல் போன்ற உள்ளுறுப்புகளில் ஏற்படும் பாதிப்புக்களுக்கு சிகிச்சையை பயனற்றதாக்குகின்றது. இரத்த அழுத்தம் சலரோகம் உள்ளவர்களுக்கு குடிப்பழக்கம் இருந்தால் அவற்றை எவ்வகை மருந்தாலும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியாது.

மேலும் தெருவோரம் வீழ்தல், விபத்துக்களுக்கு முகம் கொடுத்தல், சண்டை சச்சரவுகளுக்கு உட்படுதல், சமூகத்தில் அவமானப்படல் போன்றவற்றை குடிப்பவர்கள் சந்தித்தேயாகவேண்டும். மரணம் விரைவில் சம்பவிக்கும்.

அடுத்ததாக பாதிப்புக்குள்ளாபவர் மனைவி! ஒரு குடிகாரனின் மனைவிபற்றி எண்ணும் போது கண்ணீர் விட்டு அழவும் தோன்றும்! மனைவியை சந்தேகப்படல், அடித்தல், காயப்படுத்தல், சிகரட்டால் சுடுதல், கொதிநீர் ஊற்றுதல், பிள்ளைகளுக்கு முன்னால் சித்திரைவதைப்படுத்தல், அவளது நகைகளையும் ஏனைய வளங்களையும் குடிக்காக பறித்தல், சமூகத்தில் தலை காட்ட முடியாதபடி செய்தல், பிள்ளைகள் மேலும் பேரப்பிள்ளைகள் மேலும் பாசம் காட்டுவதை தடுத்தல், வீட்டை விட்டு துரத்துதல், பலவகை நிர்ப்பந்தங்களுக்கும் உள்ளாக்கல், கொலை செய்யுமளவுக்கு செல்லுதல்.

இன்னும் கூறப்போனால் ஒரு குடிகார தந்தைக்கு பிள்ளைகளாக பிறந்தவர்கள் மிகவும் பரிதாபத்துக்குரியவர்களாவர். முதலில் குடும்பத்தில் அவர்களது நிம்மதி கெடும். தந்தைமேல் வெறுப்பும் தாய்மேல் பரிதாபமும் ஏற்படும். நித்திரை குலையும். படிப்பு பாதிக்கப்படும். சீருடை உட்பட பாடசாலை நூல்கள், காகிதாதி ஆகியனவற்றை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்படும். உதவிக்காக அன்னியர்களிடம் கையேந்த வேண்டிய கட்டத்திற்கு உட்படுவர். சரியான உணவும் மருத்துவ வசதியும் கிட்டாமல் அல்லலுறுவர்.

அடுத்து அயலவர்! குடிகாரன் தினசரி குடித்துவிட்டு வருவதும் குடும்பத்தினருடன் சத்தம் போட்டு சண்டையிடுவதும் அயலவர்களின் நிம்மதிக்கு விரோதமாக அமையும். ஏதாவது பிரச்சனைகள் ஏற்பட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசி தீர்க்க முடியாதாகையால் அடிபாட்டுக்கும் உள்ளாக நிர்ப்பந்திக்கப்படுவர்.

இன்று இணைய தளத்தை திறந்தால் வல்லுறவு, கொலை, வீதி விபத்துக்கள் எல்லாவற்றுக்குமே காரணமாய் இருப்பவர்கள் குடிகாரரே!

குடிக்கு அடிமையானவர்களால் நிச்சயம் குடியை விட முடியாதுதான். ஆனால் வைராக்கியத்தால் எதனையும் சாதிக்க முடியும். 'நான் இனிமேல் எனது மனைவியுடன் சேர்ந்துதான் குடிப்பேன்; இல்லாவிட்டால் குடிக்கமாட்டேன்' என்று முடிவெடுங்கள். எல்லாமே சரியாகிவிடும்!

மலைமுரசு வாரமலர் - 20.12.2014 - 26.12.2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 மனமுறிவுகள்.

மனிதன் ஒரு சமூக பிராணியாவான். மனிதனை வேற்றுக்கிரகம் ஒன்றில் குடியேற்றினால் அவன் அங்கு எதிர்கொள்ள நேரிடக்கூடிய பிரச்சனைகளான காற்று , நீர், உணவு என்பவற்றுடன் சமாந்தரமாக அவனை தாங்கிக்கொள்ள ஒரு சமூகமும் அவசியம் என சேர்த்துக்கொள்ளல் வேண்டும். அந்த அளவிற்கு மனிதனின் வாழ்வு சரியாகவோ தவறாகவோ சமூகத்துடன் பின்னிப்பிணைந்துள்ளது. நாம் எமது உறவினருடனும் நண்பர்களுடனும் மனத்தால் இணைந்து வாழும்போது எமது வாழ்க்கை மகிழ்ச்சியின் உச்சத்தினை தொடுகின்றது. இந்த உறவில் விரிசல் ஏற்படும் போது நாம் சோர்ந்து விடுகின்றோம். அப்படியான சந்தர்ப்பங்கள் எமது வாழ்நாள் பூராகவும் தவிர்க்க முடியாதபடி நீடிக்கின்றது. அதைத்தான் 'மனமுறிவு' என்று சொல்கின்றோம்.

எமது வாழ்க்கை எம்முடன் பழகுபவர்கள் மீது நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் கொண்டதாகும். எமது உறவினர்கள் எமது நண்பர்கள் எமக்கு நேரிடக்கூடிய ஆபத்திலிருந்து எம்மை காப்பாற்றிக் கரைசேர்ப்பார்கள்...என்று நம்பியிருக்கும் எமக்கு அவர்கள் ஏமாற்றம் தரும்படி நடந்தால் அங்கு மன முறிவு தவிர்க்க முடியாததாக போய்விடும். அதே போன்று குடும்பங்களுக்கும் குடும்பங்களுக்குமிடையே பல நம்பிக்கைகள் மீது கட்டியெழுப்பப்பட்ட உறவுகள் இருக்கும். ஒரு குடும்பத்திற்கு ஒரு பணக்கஷ்டம் என்றால் மற்றொரு குடும்பம் முன்வந்து உதவி செய்யும். ஒரு குடும்பத்தின் சமையலை மற்றொரு குடும்பத்துடன் பகிர்ந்து கொள்ளல்.... ஒரு வைபவத்திற்கு போவதற்கு அவசியமான நகை இல்லையா? இதோ எமது நகையை பெற்றுக்கொள்ளுங்கள். ஆனால் அப்படிப்பட்ட குடும்பங்களுக்கிடையே கூட 'மனமுறிவு' புகுந்து விளையாடும். 'எனது மகளுக்கு உனது பையனை கட்டிவைப்பதாக வாக்குறுதி தந்திருந்தாயே ... அவனுக்கு உயர் தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்துவிட்டது என்பதற்காக இப்போ மறுக்கிறாயே... இது முறையா...? பிறகென்ன ? 'மனமுறிவுதான்...!

இந்த மனமுறிவு என்கின்ற சமாச்சாரம் அதிகம் புகுந்து விளையாடுவது காதலர்கள் மத்தியிலேதான்! ஆணும் பெண்ணும் தாம் ஒருவரை ஒருவர் காதலிப்பதற்கு எந்த காரணத்தையும் ஆராய்வதில்லை. ஆனால் மிகவும் சின்ன சின்ன காரணங்களே அவர்களின் மனமுறிவிற்கு காரணமாகிவிடும்! காதலர்களை நன்கு அவதானித்தால் அவர்களுடன் பழகிப்பார்த்தால் எங்களுக்கு பல உண்மைகள் வெளியாகும்... இருவருமே காதலிப்பது என முடிவெடுப்பது முதல் கல்யாணம் செய்வது வரை திட்டங்களை வகுப்பர். கடற்கரைக்கு செல்வதில் இருந்து சினிமா... விடுதி... என்று உறவு நீண்டுகொண்டே போகும். விவாகத்திற்கு பின் என்று எந்த திட்டமும் இருக்காது. விடுதியில் அறை போட்டு இருக்கும் போதே ஒருவருக்கு மற்றவர் மேல் அதிருப்தி இருக்கும். காட்டிக்கொள்ளமாட்டார்கள். ஆனால் தொடரும் சந்தர்ப்பங்களில் ஒருவரின் சிறு தவறை மற்றவர் பெரிதுபடுத்தி பேசுவார். அதுவே மனமுறிவை உண்டுபண்ண போதுமானதாகும். இணைய தளங்களில் இப்போ அதிகம் செய்திகள் இந்த மனமுறிவு சார்ந்தவையாகவே இருக்கின்றன.

கணவன் தனது மகளை தனது சொந்தங்களுக்குள் விவாகம் செய்து வைக்க விரும்புகின்றான். மனைவி மறுவளம். அங்கும் மனமுறிவுதான். ஒரு தலைப்பட்ச முடிவுகள் எப்போதும் மனமுறிவுக்கு காரணமானவை தான். எதையும் எவரும் கலந்து பேசி முடிவெடுக்க வேண்டும். அனேகமாக சொத்துக்களை பங்குபிரிக்க வேண்டிய காலகட்டம் சகோதரர்களுக்கிடையே உண்டாவதுதான். அதில் முரண்பாடு ஏற்படுமாயின் மனமுறிவும் தவிர்க்க முடியாததாக போய்விடும்.

எவரும் நாகரீகத்தை சரியானவாறு பேண வேண்டும். ஒருவருடைய வீடு திறந்திருக்கின்றது என்பதற்காக அழைப்பு மணியை அழுத்தாது உள்ளே நுழையக்கூடாது. அவர்களுடைய அனுமதியின்றி அவர்களது தொலைபேசியை பயன்படுத்த கூடாது. அனேகமான வீடுகளில் குளிர்சாதன பெட்டி குழந்தைகளுக்கு தேவையான 'கன்டோஸ்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர்பானம் ,'கேக்' போன்ற இனிப்பு வகைகளால் நிறைந்திருக்கும். அவற்றை நாம் எமது இஷ்டத்திற்கு உண்ணலாமா?, நாகரீகத்தை கடைப்பிடிக்காமையால் உண்டாகும் மனமுறிவுகள் தான் அவை.

அடுத்து வழங்கிய வாக்குறுதியில் இருந்து மாறக்கூடாது. ஒருவர் தனது பணபலத்திற்கு மேலாக ஒரு புதிய வீட்டை பெரிய அளவில் கட்ட ஆரம்பிப்பார். காரணம் அவரது உறவினர் பண உதவிசெய்வதாக உறுதியளித்ததுதான். வீடு கட்டுதல் இடையில் நின்று விடுகின்றது. பண உதவி செய்வதாக வாக்களித்தவர் ஏதாவது காரணத்தை காட்டி உதவி செய்ய முடியாத நிலையில் இருப்பதாக கூறுகின்றார். வேறு பேச்சுக்கே இடமின்றி மனமுறிவு உண்டாகின்றது.

உரிய இடங்களில் தகுதிவாய்ந்தவர்களை கௌரவிப்பது கட்டாயமாகும். அரசியல் பிரமுகர்கள், மத தலைவர்கள், உயர்பதவிகளில் உள்ளோர், பேராசிரியர்கள், எழுத்தாளர்கள் ஆகியோர்களை வைபவங்களுக்கு அழைத்துவிட்டு அவர்கள் வருகை தரும்போது வரவேற்று உபசரிக்காவிட்டால் மனமுறிவு ஏற்படும். பணக்கொடுக்கல் வாங்கல் எவ்வகையிலும் மனமுறிவை உண்டு பண்ணும். எவரையும் எக்காரணத்தை முன்னிறுத்தியும் ஏமாற்றக்கூடாது. பக்க சார்பாக நடத்தல் பொய்சொல்லி மாட்டிவிடுதல், நயவஞ்சகம் ஆகியவற்றை முற்றாக தவிர்க்கவேண்டும்.

எவரையும் பிறர் முன் அவமதிக்க கூடாது. மற்றவர்களுடன் ஒப்பிட்டு தாழ்த்தி பேசக்கூடாது.

பிறர், குறிப்பாக தமது வீட்டு குடும்ப வைபவங்களுக்கு அழைப்பு விடுத்தால் அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு சபையை சிறப்பிக்கவேண்டும். அது தவறின் அவர்களின் மனம் புண்படுவதுடன் மனமுறிவும் ஏற்படும்.

வெளிநாடு என்றால் அங்கு அள்ளிக்கொள்வதற்கு பணம் கொட்டிக்கிடப்பதில்லை. அங்குள்ளவர்களில் பலர் கஷ்டப்பட்டே வேலை செய்கின்றார்கள். அதிக சம்பளம் கிடைப்பது ஏதோ உண்மைதான். ஆனால் அவர்களுக்கு பிள்ளைகள் இருப்பார்கள். வீட்டுக்கடன் கட்டாயமாக நிலுவையில் இருக்கும். ' 'கிரெடிட் கார்டில்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் கடன் எடுத்துவிட்டிருப்பார்கள இந்த நாட்டில் இருப்பவர்கள் அதை புரிந்து கொள்ள மாட்டார்கள். பிற நாட்டில் உள்ள தமது உறவுகளுக்கு தொடர்ந்து தொந்தரவு கொடுப்பர். ஈற்றில் அது அநாவசிய மனமுறிவுக்குதான் இட்டுச்செல்லும்.

அடுத்து எமது வாழ்கையின் அதிக நேரம் தொழில்பார்க்கும் இடத்தில்தான் செலவாகின்றது. எமக்கு உறவும் இல்லாத நட்பும் இல்லாத பலருடன் நாம் தொடர்ந்து பழகவேண்டியுள்ளது. மன முறிவுகள் உண்டாகும் படியான பல சோதனைகள் இங்கேதான் ஏற்பட சந்தர்ப்பங்கள் அமைகின்றன.

புதிதாக ஒருவர் மேல் நம்பிக்கை வைத்து பழகுகிறீர்கள். உங்கள் தொழில் மீது உங்களுக்கு உள்ள இயலாமை பற்றி கூறுகிறீர்கள் அவருக்கு நீங்கள் புதியவரே. எனவே உங்கள் செய்திகளை அவர் தனது நட்பு வட்டத்திற்குள் பகிர்ந்து விடுவார். அது உங்களுக்கு தெரிய வரும்போது நீங்கள் அதை நம்பிக்கை துரோகம் என்று கருதுவீர்கள்.

நீங்கள் உங்கள் கடமையில் பொறுப்புடன் ஈடுபட்டுக்கொண்டிருக் கின்றீர்கள். ஒருவர் மீது மற்றவர் காதல் வயப்பட்டுள்ள ஒரு சோடி உங்கள் மேசையை சூழ இருந்து அரட்டை அடிக்கின்றார்கள். அந்த நாகரீகமற்ற செயல் உங்களை பிரச்சனையில் மாட்டிவிடும் என்று பயப்படுகிறீர்கள். அதனால் அந்த சோடி மனத்தாங்கல் உற்று உங்களை சிக்கலில் மாட்டிவிடும்.

நீங்கள் ஒரு நாள் ' லீவு' கேட்பதாக அதிகாரிக்கு தகவல் கொடுக்கும் படி சக அலுவலரை வேண்டுகிறீர்கள். அவர் அப்படி செய்யவில்லை. அது உங்கள் வேலைக்கே ஆபத்தை உண்டு பண்ணும் என்று கருதி அவர் மீது உங்களுக்கு மனமுறிவு உண்டாகின்றது.

அலுவலகம் ஒரு பொது இடம். அங்கு சக அலுவலரோ அல்லது மேல் நிலை உத்தியோகத்தரோ பிறர் முன் உங்களுக்கு சரியான கௌரவத்தை வழங்க வேண்டும் என்று எதிர்பார்ப்பீர்கள். அது தவறின் உங்களுக்கு மன முறிவு ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.அலுவலகங்களில் ஒருவரைப்பற்றி புகார் கொடுப்பதென்பது சாதாரணம் தான். ஆனால் சிலர் பக்க சார்பாக நியாயம் சொல்வதை பொறுத்துக்கொள்ள முடியாது. சிலர் திட்டமிட்டு பொய் சொல்லி மாட்டிவிடுவதென்பது மிகவும் கவலையளிப்பதாகும். அவர்களது தப்பான நடவடிக்கை மனமுறிவை ஏற்படுத்துவதாகவே இருக்கும்.

இதற்கு மேலும் சொல்லப்போனால் வெளிநாட்டில் உள்ள பல குடும்பங்கள் தமிழ் கலாச்சாரத்தை மறந்து வாழ்கிறார்கள். அதனால் இந் நாட்டில் உள்ள அவர்களது சொந்தங்களுக்கு தமது வாழ்க்கை முறையையும் நிலைப்பாட்டையும் மறைக்கிறார்கள். ஒவ்வொரு விஷயத்திலும் இரகசிய தன்மையை பேணுகிறார்கள் அதனால் அவர்கள் பற்றி அங்குள்ள மற்ற உறவுகளுடன் ஏதேச்சையாக கதைத்தாலே போதும் . உடனே சந்தேகம் உண்டாகும். பிறகென்ன தொடர்ந்து மனமுறிவுதான் !

நாம் அன்பாக பழகும் உறவுகளுடன் பகைகொள்ள வேண்டி ஏற்படுவதற்கான பிரதான காரணமாக மனமுறிவுகள் இருக்கின்றன. இவற்றை நாம் கட்டாயமாக தவிர்க்க வேண்டும். மற்றவர்களுடன் அன்புடன் பழகுதல், அளவாக பழகுதல், மனம் விட்டு பேசுதல், பிரச்சனைகளை கலந்துரையாடுதல், ஆகிய பண்புகளை வளர்த்துக்கொள்வதன் மூலம் மனமுறிவுகளை தவிர்த்துக் கொள்ளலாம்!

மலைமுரசு வாரமலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 நாம் ஏன் சட்டத்திற்கு பணியவேண்டும் ?

சமூக வழக்கில் ஒழுங்கும் அமைதியும் பேணப்பட வேண்டுமாயின் ஒவ்வொருவரும் சில கட்டுப்பாடுகளை அனுசரிக்க வேண்டும். அவை சம்பிரதாயம் என்றோ சட்டம் என்றோ நடைமுறையில் இருக்கலாம். சம்பிரதாயம் சமூக மட்டத்தில் தீர்மானிக்கப்படுவது. சட்டம் அரச மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு அமுல்படுத்தப்படுவது.

சமூக மட்டத்தில் உள்ள சம்பிரதாயங்கள் அவ்வவ் மக்களின் சமூகமான வாழ்கை ஓட்டத்துடன் இணைந்தது. சம்பிரதாயங்கள் ஒரு போதும் கடுமையாக இருப்பதில்லை. அவை எழுத்திலும் இல்லை. அதே போன்று சம்பிரதாயங்களை மீறுவதென்பது பெரிய தண்டனைக்குரிய குற்றமாகாது. அது சம்மந்தப்பட்டவர்களை அன்றி பரந்த அளவில் எவரையும் பாதிக்காது.

சொல்லப் போனால் பெரியவர்களை பணிந்து நடக்க வேண்டும் என்பது ஒரு சம்பிரதாயம். அதற்காக யாராவது அச் சம்பிரதாயத்தை மீறக்கூடாது என்றோ மீறினால் வழங்கப்படக்கூடிய தண்டனைகள் என்றோ எதுவும் கிடையாது. அதற்காக அந்த சம்பிரதாயத்திற்கு பெறுமானம் இல்லை என்றும் கருதக்கூடாது. பெரியவர்களை பணிந்து நடப்பவர்களை அனைவரும் கௌரவிப்பார்கள். அவர்களுக்கு பெரியவர்களின் ஆசியும் ஆலோசனையும் கிட்டும். சமூகத்தில் நல்ல அந்தஸ்தும் நன்மைகளும் கிட்டும். அவர்கள் தவறான பாதையில் செல்லமாட்டார்கள். அவர்களுக்கு தீங்கோ அன்றி துயரமோ நேருமாயின் அவர்களது கண்ணீரை துடைக்க பலர் முன்வருவார்கள். நல்ல குல வழக்குகள் தான் சம்பிரதாயங்களாக பரிணமித்துள்ளன. அறத்தை பேணுதல். அன்பு செலுத்துதல் , விருந்தோம்புதல், இனியவை கூறல், செய்நன்றி அறிதல், புறம் கூறாமை, தீவினை அச்சம், ஆகியன நல்ல குல வழக்குகளாகும். இவற்றை கடைப்பிடித்தால். சமூகத்தில் ஒற்றுமை நிலவும். அந்த சமூகம் மேம்பாடடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியல்லாமல் சமூகத்தில் சண்டை சச்சரவுகளும் அத்துமீறல்களும் தலைவிரித்தாடும் நிலையில் தான் அவற்றை தடுக்கும் வகையில் அரசாங்கம் சட்டங்களை யாக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. சட்டம் என்பது ஒரு சமூகத்தின் தேவையாக உள்ளது. அவை நிச்சயமாக கடைப்பிடிக்கப்பட வேண்டியவையே. சட்டம் இல்லாவிட்டால் நாட்டில் சண்டையும் சச்சரவும் நீடிக்கும். சட்டத்தைக் கடைப்பிடிக்கவேண்டிய அவசியம் இல்லாவிட்டால் மக்கள் ஒவ்வொருவரும் தத்தம் மனம் போன போக்கில் நடக்க முற்படுவதுடன் மற்றவர்களின் நன்மை பற்றி கிஞ்சித்தும் கவலைப்படமாட்டார்கள். சட்டம் இட்ட வழியில நடக்கவேண்டி இருப்பதாலேயே மக்கள் அன்பு, அறம் , கருணை , ஒழுக்கம், பொறுமை, முதலிய நல்ல குல வழக்குகளை உடையவர்களாக இருக்கின்றார்கள். சுயநலமுள்ளவர்கள் தான் அதிகம் சட்டத்தினை மீறி நடக்கிறார்கள். அவர்களே கொலை , கொள்ளை , போதைவஸ்து, கடத்தல், பாலியல் வல்லுறவு , இலஞ்ச ஊழல் ஆகிய பாரிய குற்ற செயல்களில் ஈடுபடுகின்றார்கள். அவர்களை புத்திமதி கூறி திருத்த முடியாது. எந்த ஒரு மதமும் கூட அவர்களுக்கு சரியான நெறியை புகட்ட முடியாது.

இந் நிலையில் சட்டத்தை மீறி செய்யப்படும் ஓவ்வொரு குற்றச் செயல்களுக்கும் வகை வகையான தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன. பலர் சிறைக்கு செல்ல பயந்து சட்டத்தை அனுசரித்து நடக்கின்றார்கள். இன்னும் சிலர் மரண தண்டனைக்கு பயந்து சட்டத்தை அனுசரித்து நடக்கின்றார்கள்.

'கொலை' என்ற குற்றச்செயலை எடுத்தால் அது திட்டமிடப்பட்டு செய்த கொலை என்றும் கைமோசக் கொலை என்றும் வேறுபடுத்திப் பார்க்கப்படும். இரட்டைக் கொலை , குடும்பமாக கொலை என்று எண்ணிக்கையை பொறுத்தும் தீர்மானிக்கப்படும். பழி தீர்க்கும் வஞ்சத்துடன் குரூரமாக மேற்கொள்ளப்படும் கொலைகளும் உண்டு. இவற்றின் தன்மைக்கு ஏற்ப சிறைவாசத்தின் காலம் நீடிக்கப்பட்டு ஆயுள் தண்டனை மற்றும் மரண தண்டனை என தீர்ப்பளிக்கப்படும்.

'போதைப் பொருள் கடத்தல்' இந் நாட்களில் பாரிய குற்றச் செயலாக கருதப்படுகின்றது. போதைப் பொருள் வர்த்தகத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் அனைத்து நாடுகளிலுமுள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள். சரி எது தவறு எது என்பதை வேறுபடுத்தி பார்க்க அறியாத மாணவர்கள் போதைப் பொருள் பாவனைக்கு உட்படுவதால் அதிலிருந்து மீள முடியாத நிலைக்கு உட்படுகின்றார்கள். பதிலாக தமது கல்வியையும் எதிர்காலத்தையும் தொலைத்துவிட்டு தற்கொலை செய்துகொள்ளும் முடிவுக்கு ஆட்படுகின்றார்கள். அது மட்டுமன்றி பணத்துக்காக பல குற்றசெயல்களில் ஈடுபடுவதால் சிறைவாசம் அனுபவிக்கவும் நேர்கின்றது. சில நாடுகளில் போதைபொருளுடன் பிடிபட்டால் அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்படுகின்றது. அதற்கு மேலாக போதைபொருளின் அதிகரித்த நிறையை கருத்துக்கெடுத்து மரண தண்டனையும் வழங்கப்படுகின்றது! ஏனைய குற்றச் செயல்களால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கும் அதே சமயம் போதை பொருளால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை பல்லாயிரம் மடங்குகளால் அதிகரித்து காணப்படுவதே அதற்கான அதிகரித்த தண்டனைக்கும் காரணமாக இருக்கின்றது.

இந் நாட்களில் 'பாலியல் வல்லுறவு' மிகவும் அதிகரித்து காணப்படுகின்றது. இரவுப் பயணங்களில் பேருந்துகளிலும் தொடருந்துகளிலும் புறம்போக்கான இடங்களிலும் இக் குற்றச் செயல் நிகழ்கிறது. சிறப்பான எதிர்காலத்துக்காக கல்வி ,தொழில் முயற்சி என்று போட்டி போட்டு முன்னேறிக்கொண்டிருக்கும் இளம் பெண்களை சீரழிப்பதென்பது மன்னிக்கமுடியாத குற்றமாகும். அரசாங்கமும் மனித உரிமைகளுக்கான அமைப்புக்களும் இக்குற்ற செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக கிளம்பியும் அந் நிகழ்வுகளை தடுக்க முடியவில்லை. கடுமையான சட்டங்களாலும் அதிகரித்த தண்டனைகளாலும் தான் இந்த அட்டூழியக்காரர்களின் கொட்டத்தை அடக்க முடியும். மகளிர் பொலிஸ் பிரிவினர் இக் குற்றவாளிகளை உடனுக்குடன் கைது செய்வதிலும் அவர்களை 'ரிமாண்டில்' போட்டுவைப்பதிலும் வெற்றி கண்டு வருகின்றார்கள். சட்டம் இப்படி குற்ற செயல்களில் ஈடுபடுபவர்களுக்கான தண்டனையை ஆயுள்கால சிறைத்தண்டனை வரை நீடித்துள்ளது. எந்த ஒரு குற்றத்தை புரிபவர்களுக்கும் மன்னிப்பு வழங்கலாம். ஆனால் பெண்களின் வாழ்கையை சீரழிப்பவர்களுக்கான தண்டனையை மரண தண்டனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை நீடிக்க வேண்டும். அது மட்டுமன்றி சமூகம் பொறுப்புணர்வுடன் நடந்துகொண்டு இப்படியான சம்பவங்கள் நிகழும் இடங்களில் துரோகிகளுக்கு எதிராக திரும்ப வேண்டும் மக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் சட்டம் மட்டும் வெறுமனே குற்றங்கள் நிகழ்வதை தடுக்க முடியாது.

தவிர, தினமும். வீடு உடைத்து 'கொள்ளை' இடம் பெறுகின்றது. 'பொலிஸார்' 24 மணி நேரமும் கடமையிலும் 'றோந்திலும்' ஈடுபட்டிருந்தாலும் எப்படி கொள்ளையர்களால் தம் கை வண்ணத்தை காட்ட முடிகின்றது என்பது ஆச்சரியமாகவே உள்ளது. அதனை விட மேலாக ஆச்சரியமளிப்பது கொள்ளையர்களை பொலிஸார் சட்டத்தின் முன் கொண்டுவரமுடியாமல் இருப்பதாகும்.

இனி இலஞ்ச ஊழல் நாட்டில் பரவலாக உள்ளது. இலஞ்ச ஊழல் திணைக்களம் தன்னாலான அனைத்து முயற்சிகளை எடுத்தாலும் இலஞ்ச ஊழல் ஒழிந்தபாடில்லை. அரசாங்க ஊழியர்கள் இலஞ்சம் பெற்றால் 07 வருட சிறைத் தண்டனையும் அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

சொல்லப்போனால் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளிலிருந்தே சட்டம் உருவாகின்றது. எங்கெல்லாம் சிறுபான்மை இனத்தவர் இருக்கின்றார்களோ அங்கெல்லாம் அவர்களை ஒடுக்கும்படியான சட்டங்கள் இருக்கின்றன. பயங்கரவாத சட்டம், மொழிச்சட்டம், மதச்சட்டம், என்று பல சட்டங்களால் சிறுபான்மையினத்தவர் பாதிப்புக்களுக்கு உள்ளாகிக்கொண்டிருக்கின்றார்கள். சட்டம் ஆட்சியிலுள்ளவர்களுக்கு சௌகரியத்தை வழங்குகின்ற அதே சமயம் பலவீனமானவர்களுக்கு குறைந்த பட்சம் பாதுகாப்பையேனும் வழங்கவேண்டும். அதிகாரத்தில் உள்ளவர்கள் சட்டத்தை புறக்கணிக்க முடிகின்றது. அது பலத்துடன் இருக்கும் வரை மட்டுமே!

சில சட்டங்கள் தவறாக இருக்கக்கூடும். பல முட்டாள்கள் அவற்றை பின் பற்றுகிறார்கள். சில சட்டங்கள் நல்லவை. பலர் அவற்றை கடைப்பிடிப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமூகம் நல்ல முறையில் நீடிக்கவேண்டுமாயின் பெரும்பான்மையோர் சட்டத்துக்கு பணிந்து ஒழுக வேண்டும். சமூகம் நல்லதொரு ஒழுங்கில் அமையுமாறு ஒவ்வொருவரும் சட்டத்துக்கு கீழ்ப்படிய வேண்டும். பொறுப்புள்ள பிரஜைகளாக ஒவ்வொருவரும் வாழவேண்டும். சிலர் சுயநலம் உள்ளவர்களாக சட்டத்துக்கு பணியாது நடக்கிறார்கள் , எதிர்காலத்தில் என்ன தீங்கு ஏற்படும் என்பதை அவர்கள் கணிக்க முடியாதவர்களாக உள்ளார்கள்.

சட்டத்தை கடைப்பிடிக்காத சமூகத்திற்கு முன்னேற்றமில்லை. சட்டமில்லாத இடத்தில் சண்டையும் சச்சரவும் தான் நீடிக்கும். நாம் அனைவரும் முன்வந்து சட்டத்தை அனுசரித்து நடக்காவிட்டால் எமது அடுத்த தலைமுறைக்கு நல்ல எதிர்காலம் இல்லாமல் போய்விடும்!

மலைமுரசு வாரமலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 பதவியும் படாடோபமும்

இந்த வாழ்க்கை என்கின்ற சாகரத்தை கடப்பதற்கு பதவி என்கின்ற தெப்பம் ஒன்று கிடைத்துவிட்டால் போதும் என்பதே அன்றும் இன்றும் அனேகருடைய முடிவான கருத்தாக உள்ளது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளை வற்புறுத்தி கல்வி கற்க வைப்பதெல்லாம் அந்த இலக்கை நோக்கியே. மாணவர்கள் தமது கல்வி நெறியை தெரிவு செய்யும் போது தமது ஆற்றலுக்கு உகந்த துறையை தேர்ந்தெடுக்காது தமக்கு விருப்பமான பதவிக்குரிய கல்வியையே முயன்று கற்கிறார்கள்.

தொழில்சார் கல்விகளாக மருத்துவம், பொறியியற்துறை, மின்சார பொறியியற்துறை, எந்திரவியல், மென்பொருள் நிபுணத்துவம் , கணக்கியல், சட்டம், 'ஹோட்டல்' நிர்வாகம் உள்ளிட்ட பல துறைகள் இன்று இருக்கின்றன.

அவை தவிர போட்டிப்பரீட்சைகள் மூலம் பல பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றது. அவற்றுக்கான கல்வி தகமையாக க.பொ.த (உயர்தரம்) டிப்ளோமா முதல் பட்டப்படிப்புவரை வேண்டப்படுகின்றது. முகாமைத்துவ உதவியாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர், ஆசிரியர்கள் உள்ளிட்ட பல பதவிகள் இவ்வாறே நிரப்பப்படுகின்றன.

இலங்கை நிர்வாக சேவைக்கான போட்டிப்பரீட்சை பட்டப்படிப்பை அடிப்படையாகவும் (Open Competitive Exam) சேவை அடிப்படையிலும் (Limited Competitive Exam) இரு பிரிவுகளாக நடாத்தப்படுகின்றன். அனேகமான அமைச்சுக்கள், திணைக்களங்களின் தலைமைப் பொறுப்பு இலங்கை நிர்வாக சேவை அலுவலர்கள் வசமே உள்ளது. மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர், போன்ற உயர் பதவிகள் அனேகமாக இவ்வலுவலர்களுக்கே வழங்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு மேல் உள்ள பதவிகளை வகிக்கும் உரிமை மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கே உரித்தானதாகும். அமைச்சர்கள், பிரதம மந்திரி, முதலமைச்சர் முதல் ஜனாதிபதி வரை உள்ள பதவிகளுக்கு விசேட அதிகாரங்கள் உண்டு.

பார்க்கப்போனால் மக்களே ஒரு நாட்டின் ஆட்சியையும் ஆட்சியாளரையும் அதிகாரிகளையும் நியமிப்பவர்களாக உள்ளார்கள். மக்களுக்கே எவரும் பொறுப்புக்கூற வேண்டும்!

ஆனால் கவலைக்குரிய விடயம் யாதெனில் எவ்வகையிலேனும் பதவிக்கு வந்துவிட்டால் அதிகாரிகள் பலரும் மக்களை மறந்தே விடுகிறார்கள். பொறுப்புக்களை கையில் எடுத்து மக்களுக்கு சேவை செய்வதை விடுத்து பதவி மோகத்தில் மூழ்கிவிடுகிறார்கள். அலுவலகத்தில் ஒரு 'பியோன்', வைத்தியசாலையில் ஒரு 'அற்ரெண்டன்ற்' கூட மக்களை மற்றும் நோயாளிகளை அதட்டக்கூடியதாக இருப்பதற்கு காரணம் பதவி வெறிதான்!

அப்படியென்றால் மற்ற மற்ற உயர் அதிகாரிகள் பதவி நிமித்தம் எப்படி எப்படி நடந்து கொள்கிறார்கள் என்று பார்த்தால் அது மிகவும் கவலை அளிப்பதாகவே உள்ளது.

பதவிகளுக்கு என்று பொறுப்புக்கள் உண்டு. அவற்றை நிறைவேற்றுவதற்கு சில அதிகாரமும் அவசியம்தான். அதிகாரத்தை மட்டும் கையிலெடுத்துக்கொண்டு பொறுப்புக்களை தட்டிக்கழித்தால் அதனைத்தான் அதிகார துஷ்பிரயோகம் என்று கூறுவர்.

நாம் காணும் அல்லது சந்திக்க நேரும் அதிகாரிகள் முதலில் தமது அதிகார எல்லைக்கப்பால் தமது அந்தஸ்தை தாமே உயர்த்திக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். பணிவின்மையை ஒரு தகுதியாக்கி கொள்கிறார்கள். அகங்காரம் சிரசுக்கு அடித்து விடுகிறது!

அதிகார எல்லைக்குள் அவர்களுக்கான வாகன, விடுதி, பாதுகாப்பு வசதிகள் வழங்கப்படுகின்றன. அதன் மேலான மோகம் அவர்களை ஆட்கொள்கின்றது. அவற்றை சுயமாக ஏற்படுத்திக்கொள்ளும் வெறி உருவாகின்றது. சம்பளத்துடன் மட்டும் சம்பாதித்துக்கொள்ள முடியாத சொத்துக்களை அதிகாரத்தை பயன்படுத்தி சுவீகரித்துக்கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசை உண்டாகின்றது. படாடோப வாழ்க்கையில் பற்று உண்டாகின்றது. நல்ல கொள்கைகள் தவிடு பொடியாகின்றன. பதவியை தக்க வைப்பதற்காக மக்கள் சொத்தை அடைவு வைத்தேனும் மேலதிகாரிகளை கைக்குள் போட்டுக்கொள்ள துணிவு உண்டாகின்றது. இலஞ்சம், ஊழல், பணமோசடி என்று குற்றச்செயல்கள் வளர்ச்சியடைகின்றன.

வருமானத்துக்கு மிஞ்சிய சொத்துக்குவிப்பு என்று இந் நாட்களில் பல புகார்கள் வருகின்றன. ஒரு பதவிக்கு ஒருவரை நியமிக்கும் போது அவரது சொத்து விபரங்களை உரிய படிவங்களில் திரட்டிக்கொள்வதுண்டு. அவர் பத்து வருடகாலம் சேவையாற்றினால் அவர் சம்பாதித்திருக்கக் கூடிய பணத்தையும் செலவையும் கணக்கிட்டு மேலதிகமாக இருக்கக் கூடிய சொத்துக்களுக்கு கணக்கு காட்ட வேண்டும். அவ்வண்ணம் கணக்கு காட்ட தவறினால் அதனை 'வருமானத்துக்கு மிஞ்சிய சொத்துக்குவிப்பு' என அந்த அதிகாரிமேல் குற்றம் சுமத்தி தண்டிக்கப்படும் நிலைமை ஏற்படும்.

சாதாரணமாகவே எமது நாட்டில் பெரும்பாலான அரசியல்வாதிகள் மேல் அப்படியான புகார்கள் உண்டு. அதனை தட்டிக்கேட்கும் அதிகாரம் எவருக்கும் இல்லை. பொதுத்தேர்தல் ஒன்றில் எதிர்த்து வாக்களிப்பதை தவிர மக்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை. அப்படிச் செய்வதற்கு கூட மக்களிடையே நல்ல படிப்பறிவும் மதிநுட்பமும் எதிர்கொண்ட நோக்கும் இல்லை.

நீதித்துறையும் கணக்காய்வாளர் நாயகமும் சுதந்திரமாக இயங்க முடிகின்றதா? அடுத்த தேர்தலுக்காக காத்திருப்பதைத் தவிர எதிர்கட்சிகள் எப் பதவியில் உள்ளவர்களையாவது எந்த வகையிலும் தட்டிக் கேட்கின்றனவா?

பதவிகளில் உள்ளவர்கள் தம்மை பெரும் புள்ளிகளாக காட்டிக்கொள்வதை தவிர்த்தாலே பல கெட்ட காரியங்களுக்கு இடமில்லாமல் போகும். அண்மையில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் ஏற்பட்ட மாற்றம் பல உயர் அமைச்சர்கள் ,செயலாளர்கள், அதிகாரிகள் உட்பட நீதி துறையில் உயர்பதவியில் இருந்த ஒருவரையும் கூட தூக்கி எறிந்தது. அத்தனை பேரும் அதிகார துஸ்பிரயோகம், இலஞ்சம், ஊழல் , பணமோசடி , ஆட்கடத்தல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்முறைகள் என பல குற்றச்சாட்டுக்களுக்கு முகம் கொடுத்தனர். இந்த வகையில் வடக்கில் ஆளுநர், அரசாங்க அதிபர், பிரதம செயலாளர் கிழக்கில் ஆளுநர், அரசாங்க அதிபர், பிரதேச செயலர் ஆகிய பதவிகளை வகித்தவர்களுக்கு வேட்டுவைக்கப்பட்டது. பத்து வருடங்களுக்கு மேலாக ஒரு அலுவலகத்தில் கடமையாற்றிய பின்னரும் இடமாற்றத்தில் செல்ல விரும்பாத அதிகாரிகள் பற்றி என்ன கூறுவது? தொடர்ந்து ஒரே அலுவலகத்தில் வேலை செய்வதால் இயற்கையாகவே ஏற்படக்கூடிய அதிகார மோகம் சக அலுவலர்க ளினதும் பொது மக்களினதும் அதிருப்திக்கே காரணமாகின்றது. அண்மைக்காலத்தில் பல பொதுமக்கள் ஆர்ப்பாட்டங்களுக்கு அது இடம் அளித்தது. அந்த தலைக்குனிவுக்கு பின்னரும் ஒரு அதிகாரி தன்னாலான கைங்கரியங்களை கையாண்டு அதே அலுவலகத்தில் பணிபுரிய எத்தனிப்பது எந்த வகையில் நியாயமானது ? இதில் மேலும் ஆச்சரியப்பட வைக்கும் விடயம் என்னவெனில் வடக்கிலும் கிழக்கிலுமாக இரு அதிகாரிகள் மக்கள் நலனில் அக்கறைகாட்டாது தமது சிரேஷ்ட அதிகாரிகளுக்கு விசுவாசமாக இருந்ததுதான். அரசியல் வாதிகளதும் மக்களதும் அதீத பிரயத்தனம் காரணமாக வடக்கில் பணியாற்றிய அதிகாரி இராஜாங்க அமைச்சு செயலாளராகவும் கிழக்கில் பணியாற்றிய அதிகாரி பிற மாவட்டத்தின் பிரதேச செயலகம் ஒன்றுக்கும் இடமாற்றத்தில் செல்லவேண்டி நேரிட்டது.

அந்த பதவி வெற்றிடங்கள் இப்போ நிரப்பபட்டுள்ளன. ஒரு பதவி என்பது பொருத்தமானவரைத் தேடி வரவேண்டும். பதவியைத் தேடி எவரும் அலையக் கூடாது. பதவியை விட்டுபிரிய மனமின்றி அரசியல் வாதிகளுக்கு பின்னால் பந்தம் பிடித்து திரியும் அதிகாரிகளுக்கும் பதவியை வலிந்து பெறுவதற்காக பின் வாசல்வழியே செல்லும் அதிகாரிகளுக்கும் என்ன வேறுபாடு இருக்ககூடும் ? அவரை போன்றே இவரையும் சக அதிகாரிகளும் ஊழியர்களும் மதிக்கமாட்டார். நாளா வட்டத்தில் அப்படியான அதிகாரிகள் பற்றி மக்களுக்கும் செய்தி போகும். அப்போது மீண்டும் அரசியல்வாதிகளின் குற்றச்சாட்டிற்கும் பொதுமக்களின் எதிர்ப்புகளுக்கும் ஆட்படவேண்டி ஏற்படும்.

மலைமுரசு வாரமலர் 28.03.2015 - 03.04.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

# " பெண்ணியம் போற்றுவோம்"

பெண்ணியம் என்ற எண்ணக்கரு தோற்றம் பெறுவதற்கும் வளர்ச்சியடைவதற்கும் ஒரு போராட்டமாக உருவெடுப்பதற்கும் காரணமாக அமைந்தது ஆண்கள் தமது சுயநலத்திற்காக அவளை ஒரு பகடைக்காயாக கையாண்டதுதான். ஆண்களுக்கு என்று ஒரு தனி உலகம் இருந்து அங்கு யாரோ பெண்களை பலவந்தமாக படைத்துவிடவில்லை. ஆண் என்று தோன்றினானோ அன்றே பெண்ணும் தோன்றினாள். ஆணிடம் வலிமை இருந்தது. பெண்ணிடம் மென்மை இருந்தது. காந்தத்தின் எதிர் துருவங்கள் ஒன்றை ஒன்று ஈர்ப்பது போல வலிமையும் மென்மையும் இணைந்து உருவாக வேண்டியதே வாழ்க்கை!

ஆரம்பம் முதலே பெண்ணை உள ரீதியில் அல்லாமல் உடல் ரீதியில் அணுகும் சுயநல பாங்கே சமூகத்தில் பரவி காணப்பட்டது. பெண் வீட்டில் முடங்கியிருக்க வேண்டியவள்.... மற்றவர்களுக்கு அடி பணிந்து நடக்க வேண்டியவள்.... சேவகம் செய்வதே அவளது பிறப்புரிமை என்றெல்லாம் அவளுக்கு புகட்டப்பட்டது. அவள் யாரையும் எதற்காகவேனும் எதிர்த்துக்கதைப்பதை சமூகம் அங்கீகரிக்கவில்லை. வீட்டுக்கு வரும் விருந்தினர்கள்முன் தலைகாட்டுவதும் கதைப்பதும் கூட பெரும் குற்றம் என்று கணிக்கப்பட்டது. உத்தியோகம் பார்ப்பதும் பணம் சம்பாதிப்பதும் வெளி வேலைகளை கையாள்வதும் எல்லாமே ஆண்களுக்கு உரித்தான கடமைகள் என்றும் பெண்ணானவள் சமையல் செய்வதற்கும் பாத்திரம் தேய்ப்பதற்கும் ஆடைகளை துவைப்பதற்கும் மட்டும் பொறுப்பானவள் என்றும் உணர்த்தப்பட்டாள்.

பெண்களுக்கு செய்யப்பட்ட துரோகங்களில் மிக மிக கவலையளிப்பது கல்வி மறுக்கப்பட்டது. அவளுக்கு எதற்கு கல்வி...? உத்தியோகமா பார்க்க போகிறாள்? அவ்வாறான ஒரு நிலைப்பாடு உறுதியாக இருந்தது. உடை விடயத்திலோ மிகுந்த கெடுபிடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைப்பிடிக்கப்பட்டது. கணுக்கால் தெரிய உடை அணியக்கூடாது. என்று ஒரு கண்டிப்பு இருந்ததென்றால் பாருங்களேன். பெண்ணிற்கான பிரதான அடிமைத்தளையாக தாலி சித்தரிக்கபட்டது. ஒரு ஆண் வேண்டுமென்றால் எத்தனை பெண்களுடனும் விவாக பந்தம் வைக்கலாம். ஆனால் தாலிகட்டிய பெண் பிற ஆடவர்களை நிமிர்ந்து பார்ப்பது கதைப்பது பழகுவது எல்லாமே பாரதூரமான குற்ற செயல்கள் என கணிக்கப்பட்டன.

சீர்திருத்தவாதியான ஈ.வே.ரா. பெரியார் பெண்களுக்கு அறிவுறுத்துகையில் இரண்டு முக்கிய விடயங்களை கூறினார். ஒன்று அவர்களது அடிமைச்சின்னமான தாலியை கழற்றி வீசும்படி வேண்டினார். மற்றது ஒவ்வொரு பெண்ணும் கல்வி கற்று தனது சீவனோபாயத்திற்காகவேனும் பணம் சம்பாதிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். இன்று அவர் எம்மத்தியில் இல்லை. ஆனால் அவருடைய கருத்தின் முக்கியத்துவம் அவதானிக்கப்பட வேண்டியது.

வெள்ளையர்களின் வருகையும் இலவசக்கல்வி முறையும் நன்கு பயன்பட்டது பெண்களுக்கே ! பாதிரிமார்களின் தூண்டுதல் காரணமாகவும் பெண்ணியவாதிகளின் அழுத்தம் காரணமாகவும் பெண்கள் கல்வி கற்பதை பெற்றோர்கள் ஏற்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானார்கள். கல்வி கற்ற பெண்கள் தமக்கு சமூகத்தில் சம அந்தஸ்து உண்டு என்பதை உணரத் தொடங்கினார்கள். அதனால் அவர்கள் இரண்டு விடயத்தை வற்புறுத்தினார்கள். ஒன்று தமக்கு அரச அலுவலகங்களில் தொழில்வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென்பது. அடுத்து சீதனம் வழங்கி தம்மை ஒரு ஆணுக்கு அடிமையாக்க கூடாது என்பது.

எந்த ஒரு பெண்ணிய எழுத்தாளரும் சீதனக்கொடுமை பற்றி பேசாமல்... எழுதாமல் இருந்திருக்க நியாயம் இல்லை! சீதன கொடுமை காரணமாக பல ஏழைப்பெண்கள் மணம் முடிக்க இயலாமல் இருக்கும் நிலை இன்றும் கூட நீடிக்கின்றது. எனவே பெண்ணியம் சார்ந்த முக்கிய பேசு பொருளாக அது ஊடகங்களை நிறைப்பதில் ஆச்சரியமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெண்ணை கல்வி கற்க விடாமலும் தொழில்புரிய தடைசெய்தும் அநியாயம் செய்த ஆண்கள் அவர்களை மணம்புரிந்து குடும்பம் நடாத்துவதற்கு அவளுடைய பெற்றோரிடம் சீதனம் கேட்டு நிர்ப்பந்திப்பது எப்படி சாதாரணமாகும்! பெண் என்ன பிறக்கும்போதே வீடு ,வாசல், நகை நட்டு , பணம் பண்டம், வாகன வசதி ஆகியவற்றை கொண்டா பிறக்கின்றாள்?

இனி விதி வசத்தால் விவாகமாகிவிட்டால் கூட புகுந்த வீட்டில் மாமியார் கொடுமை ! அதைக்கொண்டு வா... இதை கொண்டுவா... என்று கட்டாயப்படுத்தும் நிறைய சந்தர்ப்பங்கள் உண்டு. ஆணின் வருவாயுடன் மாமியார் நாத்தனார் என்று அனைவரது செலவுகளையும் ஈடுகட்டி சமாளிக்க வேண்டும். போதாக்குறைக்கு ஆண் குடிகாரனாக இருந்து தொலைந்தால் கேட்கவேண்டியதில்லை. முதலில் அவள் விவாகமாகி வரும்போது சீதனமாக கொண்டுவந்த பணம் தொலையும். பின்னர் அவளது காப்பு , சங்கிலி முதற்கொண்டு தோடுவரைக்கும் பறிமுதல் செய்யப்படும். அப்போதுதான் அவளது மனம் வருந்த தொடங்கும்....

அம்மா அப்பா எவ்வளவு கஷ்டத்தின் மத்தியில் எனக்கு இவற்றை சீதனமாக கொடுத்தார்கள். எனது நல்வாழ்க்கையை முன்னிட்டு அவர்கள் கொடுத்த சொத்துக்கள் கணவனது குடிக்கும் அவரது உறவினர்களின் செலவிற்கும் போகின்றதே என்று அவள் மனம் புழுங்கத்தொடங்கும் நேரம்... ' செலவுக்கு பணம் இல்லை... போய் வீட்டை விற்றுவா' என்று கணவன் நிர்ப்பந்திக்க தொடங்குவான். ஒரு பெண் புகுந்த வீட்டில் சந்தோசமாக இருக்க வேண்டும் என்பதே பெற்றோரின் அவா. அதை முறியடிக்கும் படியான எந்த நடவடிக்கையிலும் ஒரு பெண் இறங்குவாளா? எனவே அடி ... உதை!

பெண்ணியம் என்ற எண்ணக்கரு இன்று செழித்து வளர்ந்து பெரும் விருட்சமாவதற்குரிய அடிப்படை காரணிகளே இவை.!

இன்று பெண்கள் அரச நிறுவனங்களிலும் தனியார் துறைகளிலும். பெரும் எண்ணிக்கையில் பணி புரிகின்றார்கள். கல்வியில் சாதனைகள் புரிந்துகொண்டிருக்கின்றார்கள். உலக நாடுகள் பலவற்றுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிவுடன் சென்று பணிபுரிவதுடன் தமது உறவுகளுக்கும் கைகொடுக்கின்றார்கள். ஜனநாயக நாடுகளில் பாராளுமன்ற அங்கத்துவம் கேட்டு தேர்தல்களில் போட்டியிடுகிறார்கள்!

அண்மையில் எம் நாட்டிலும் பெண்கள் தேர்தல்களில் பல கட்சிகளில் போட்டியிட்டுள்ளார்கள். சிலர் தெரிவாகியும் உள்ளார்கள். சிலருக்கு அமைச்சு பதவிகள் கூட கிட்டியுள்ளன. கணவன் மனைவி இருவருமே மன ஒற்றுமையுடன் தேர்தல் களத்தில் இறங்கி பாராளுமன்றத்துக்கு சோடியாக சென்றுமுள்ளார்கள்.

பெண்கள் 'பொலிஸ்' சேவையிலும் இணைந்து பணியாற்றுகின்றார்கள். அனேகமான பொலிஸ் நிலையங்களில் மகளிர் பொலிஸ் பிரிவு திறமையுடன் இயங்குகின்றது. அவர்கள் பெண்களின் பாதுகாப்பிற்கு பெரும் உத்தரவாதமாக விளங்குகின்றார்கள். அது மட்டுமன்றி பெண்கள் சட்டத்தரணிகளாகவும், நீதிபதிகளாகவும் கூட முன்னேறியுள்ளார்கள்!

பெண்ணிய கோட்பாடு என்பது சமூகத்தை தலைகீழாக புரட்டிப்போடும் நோக்கிலானதோ... ஆண்களை அவமதிக்கும் நோக்கிலானதோ அல்ல. இறைவனின் படைப்பில் ஆண் பெண் இருபாலாரும் சமமாக நோக்கப்படவேண்டியவர்கள். ஆண்களுக்கு வழங்கப்பட வேண்டிய அனைத்து சந்தர்ப்பங்களும் பெண்களுக்கும் கிட்டுவதாக இருக்க வேண்டும் என்பதே வாதம்!

பெண்ணானவள் நாகரீகத்தின் சின்னமாகவும் கலாச்சாரத்தின் மையமாகவும் திகழ்பவள். ஒரு நல்ல சமூகம் என்று கணிக்கப்படுவதற்கு பிரதானமான காரணியாக விளங்குபவள் பெண்ணே.! ஒரு பெண்ணின் நடத்தை அவளது கல்வி உயர்ச்சி ஆடை அணிகளை பண்புதவறாமல் உடுத்தும் முறை எல்லாமே ஒரு சமூகத்திற்கு பெருமை சேர்க்கின்றன. பெண்கள் தமது சமூகத்துக்கு முன்னின்று சேவை புரிகின்றார்கள். அன்னை தெரேசாவை உதாரணத்துக்கு எடுத்துக்கொள்ள முடியும். பெண்களிடம் தான் பணிவும் கனிவும் அன்பும் பெருகி கிடக்கின்றன. ஒரு குடும்ப தலைவி என்ற ஸ்தானத்திலிருந்து ஒரு பெண் செயற்படும்போது அவள் தனது பிள்ளைகளை பண்புள்ளவர்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்குகின்றாள். அருகிலிருந்து அவர்களது ஒவ்வொரு நடத்தையையும் கண்காணித்து சரி எது? தவறு எது? என்று உடனுக்குடன் உணர்த்துகின்றாள். அவர்களை பிறர் மீது அன்பு செலுத்துபவர்களாக வளர்க்கின்றாள். அடிப்படைக்கல்வியை போதிப்பதன் மூலம் எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளாக அவர்களை ஆளாக்குகின்றாள்.

ஒரு பெண்ணானவள் கணவனுக்கு சிறந்த பக்க துணையாக செயற்படுகின்றாள். அவனை குடும்ப பொறுப்புள்ள ஒருவனாக உருவாக்குகின்றாள். தீய பழக்கங்கள் அவனை அண்டாமலும் தீயோருடன் அவன் சேராமலும் கண்காணிக்கின்றாள். குடும்பத்திற்காக சேமிக்கும் பழக்கத்தை அவனுக்கு சொல்லிக்கொடுக்கின்றாள். அவனது நன் நடத்தை காரணமாக சமூகத்தில் அவனுக்கு உயர்ந்த ஸ்தானம் கிடைப்பதற்கு வழி வகுக்கின்றாள்.

பெண்களிடமே விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை அதிகம் காணப்படுகின்றது. அவளிடம் சிறந்த ஆளுமை இருப்பது இந்நாட்களில் நன்கு வெளிப்படுகின்றது. அவளிடம் மழுங்கடிக்கப்பட்டிருந்த போர்க்குணமும் நினைத்ததை செய்து முடிக்கும் மனோவலிமையும் மேலோங்கிவிட்டது. அவளை தமது சுகபோகத்துக்காக உடல் ரீதியில் அணுகும் ஆண்கள் அனைவரும் அதனை அவசியம் சந்திக்கவேண்டிய காலம் நெருங்கிவிட்டது !

மலைமுரசு வாரமலர் 31.10.2015-06.11.2015

ஒளி அரசி மாத சஞ்சிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 'பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் வகிபாகம்'

பிள்ளைகளின் கல்வி உயர்சிக்கு அதிகளவு பங்களிப்பை வழங்குபவர்கள் பெற்றோர்களா? ஆசிரியர்களா? என்ற தலைப்பில் அண்மையில் ஆய்வரங்கு ஒன்று நடைபெற்றது. உண்மையில் இந்த தலைப்பே விதண்டாவாதமானதுதான். அதில் பங்குபற்றிய ஆசிரியர்களை எந்த வகையிலும் குறை சொல்ல இயலாது. அவர்கள் தத்தம் வாதத்திறமையை வெளிப்படுத்துவதற்கு அந்த ஆய்வரங்கை பயன்படுத்திக்கொண்டனர். மற்றும்படி இரு சாரரது பங்களிப்புமே எந்த ஏற்ற இறக்கமுமின்றி முக்கியமானதுதான்!

ஒரு பிள்ளை பிறந்தது முதல் அதன் வளர்ச்சி, உடலாரோக்கியம், புரிதல், அன்பு செலுத்துதல், ஒத்துப்போதல், நல்லபழக்கவழக்கம், கல்வி அனைத்துக்கும் அத்திவாரமாக அமைபவர்கள் பெற்றோரே.....

ஒரு குழந்தை தைரியசாலியாக விடயங்களை நன்கு கிரகிக்கக்கூடிய மூளை வளர்ச்சியுடன் மற்றவர்களுடன் சுமூகமாக பழகினாலே வாழ்க்கையின் சிகரத்தை தொட்டுவிட அதனால் முடியும்.

நல்ல கல்வி அறிவுள்ள, பரஸ்பரம் நல்ல உறவுள்ள பெற்றோர்களால் மட்டும் தான் தமது பிள்ளைகளுக்கு அதிகளவு பங்களிப்பை செய்ய முடியும். அவர்களால்தான் ஒரு பிள்ளையின் தடங்கலற்ற கல்விக்கு வீட்டில் தகுந்த சூழ்நிலையை ஏற்படுத்திக்கொடுக்க முடியும்.

இந் நாட்களில் வீட்டில் தொலைக்காட்சி, வானொலி போன்ற கருவிகள் வீட்டின் அமைதியை மட்டும் பாதிப்பது மட்டுமன்றி குழந்தைகளின் கல்விக்கு பெரும் பாதிப்பை உண்டு பண்ணுகின்றன. ஒரு குழந்தை மாலையில் சிறிது நேரம் விளையாடியபின் அதன் படிப்புக்கான நேரம் 6.00 மணி முதல் 9.00மணி வரையாக இருக்கின்றது. அந்த நேரத்தில்தான் அதிகமான சின்னத்திரை நாடகங்கள் ஒளிபரப்பப்படுகின்றன. பொறுப்புள்ள பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்விக்காக அவற்றை பார்ப்பதை தவிர்த்து விடுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன் மனைவி இருவருமே காரியாலயத்திலிருந்து களைத்து வீடு திரும்பியிருப்பர். வீட்டிலும் பல வேலைகள் பூர்த்தி செய்யப்படவேண்டி இருக்கும். பொறுப்புள்ள பெற்றோர் தம்மில் ஒருவர் பிள்ளைகளின் கல்விக்கு துணைபுரிய மற்றவர் வீட்டு வேலைகளை கவனிப்பர்.

பாடசாலையில் கட்டாயமாக பிள்ளைகளுக்கு வீட்டு வேலை கொடுத்திருப்பர். அதற்கு காரணம் மாணவன் வீட்டில் சும்மாதானே இருக்கப்போகின்றான் அந் நேரம் பாடங்களை நினைவுகூரட்டும் என்ற நோக்கம் மட்டுமல்ல. உண்மையில் ஆசிரியர்கள் பெற்றோருக்கு வைக்கும் ஒரு 'செக்' தான் அது. மறுநாள் மாணவன் வீட்டுப்பாடத்தை பூர்த்தி செய்து கொண்டு போனால் அவனது பெற்றோருக்கு பிள்ளையில் அக்கறை உண்டு. நாம் ஒரு சின்ன 'புஷ்' (Push) கொடுத்தால் போதும். அவன் முதலாம் தர மாணவனாக சாதனைகள் பல புரிவான் என்பதை புரிந்து கொள்வர்.

ஒரு மாணவன் சரியான நேரத்திற்கு பாடசாலைக்கு சமூகமளித்தல், தூய்மையான சீருடைகளை அணிந்து வருதல், உரிய நேரத்தில் சிகை அலங்காரத்தை செய்திருத்தல் ஆகிய எல்லாவற்றுக்கும் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் பொறுப்புள்ள பெற்றோர்களே. அப்படியான விடயங்களில் ஒரு மாணவனின் பெற்றோர் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதை ஆசிரியர்கள் கவனிக்கிறார்கள்.

பல சந்தர்ப்பங்களில் வகுப்பாசிரியர்கள் மாணவர்களின் பெற்றோரை கலந்துரையாடல்களுக்கு அழைப்பர். ஒவ்வொரு மாணவனினதும் பலம், பலவீனம் பற்றி பெற்றோருக்கு எடுத்துரைப்பர். அப்படியான கலந்துரையாடல்களில் பொறுப்புள்ள பெற்றோர் கட்டாயமாக கலந்து கொள்வதுடன் ஆசிரியரின் அறிவுரைகளுக்கு செவிமடுத்து தமது பிள்ளையை நெறிப்படுத்துவர்.

சில சமயங்களில் நீண்ட நாட்களுக்கு கலந்துரையாடல்களுக்கு அழைப்பு விடுக்கப்படாமல் இருக்கலாம். அதற்கு காரணம் ஆசிரியர்களின் வேலைப்பளு என்று கொள்ளல் வேண்டும். அந் நாட்களில் தமது பிள்ளையின் நிலைபற்றி தாமே முன் சென்று விசாரிக்கும் பெற்றோர் மேல் ஆசிரியருக்கு நன்மதிப்பு உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படிப்பட்ட பெற்றோரின் பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்கு மிடையே நல்ல பிணைப்பு உண்டாகும்.

சில பிள்ளைகளின் கையெழுத்து மிகவும் மோசமாக இருக்கும். அதற்கு காரணம் பெற்றோரின் கையெழுத்தை அப் பிள்ளைகள் பின்பற்றுவதாக இருக்கலாம். பெற்றோர் தமது கையெழுத்தை முதலிலேயே திருத்திக் கொள்ளல் வேண்டும்.

அது தவிர சில ஆசிரியர்களின் கையெழுத்துக்கூட எதிர்பார்க்கும் மட்டத்திற்கு இருக்காது.

அதனால் தான் உறுப்பெழுத்துக் கொப்பி பயன்படுத்தப்படுகின்றது. சரியான முறையில் அதில் பயிற்சி செய்தால் மாணவன் நல்ல கையெழுத்தை உடையவனாக மாறலாம். ஒரு மாணவன் தனது திறமையை வெளிப்படுத்துவதற்கு இரு வித பரீட்சைகள் உண்டு. ஒன்று வாய்மொழிப்பரீட்சை, மற்றையது எழுத்து மூலப்பரீட்சை. எழுத்து மூலப்பரீட்சை மிகவும் முக்கியமானது. பரீட்சைத்தாள்களை திருத்தும் ஆசிரியர்கள் தடங்கலின்றி வாசிக்கக் கூடியதாக கையெழுத்து இருத்தல் வேண்டும்.

வீட்டில் உள்ள ஒவ்வொரு பிள்ளைக்கும் தனி தனி மேசை கதிரை அவர்களது உயரத்துக்கு தகுந்தபடி இருத்தல் கட்டாயம். புத்தகங்கள் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். புத்தகங்கள் எங்கெங்கு அடுக்கி வைக்கப்பட்டுள்ளனவோ அங்கு அவைசார்ந்த அப்பியாசப் புத்தகங்களும் ஒன்று சேர இருக்க வேண்டும்.

அதிக பிள்ளைகள் உள்ள வீட்டில் ஒருவருடன் ஒருவர் சினேக உணர்வுடன் பழகுமாறும் ஒருவரது கல்விக்கு மற்றவர் உதவுமாறும் பெற்றோர் பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

பிள்ளைகள் மேல் வகுப்புக்கு வர வர அவர்களது சந்தேகங்களை தீர்ப்பதென்பது அனேகமான பெற்றோருக்கு இலகுவானதாக இருக்காது.

அதற்காகவே இப்போது திறமைவாய்ந்த ஆசிரியர்கள் தனியார் வகுப்புக்களை (Tuitory) ஆரம்பித்து நடாத்துகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியார் வகுப்புக்கள் பற்றி பாடசாலை ஆசிரியர்களுக்கு நல்ல அபிப்பிராயம் இல்லாவிட்டாலும் கூட பல வகுப்பாசிரியர்கள் தமது வகுப்பு மாணவர்களை தம்மால் நடாத்தப்படும் தனியார் வகுப்புக்கு வருமாறு கேட்டுக்கொள்கிறார்கள். பல கருத்து வேற்றுமைகளுக்கு மத்தியிலும் தனியார் வகுப்புக்கள் பல சாதனைகளை நிலைநாட்டுவதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்! பாடசாலை ஆசிரியர்களது கற்பித்தல் திறமைக்கு அப்பாலும் பெற்றோரின் வழிகாட்டலுக்கு அப்பாலும் தனியார் வகுப்புக்கள், பல்வேறு தராதரங்களிலுமுள்ள மாணவர்களை முதன்மை நிலைக்கு கொண்டு வந்து விடுகிறார்கள்.

எனவே பெற்றோர் தனியார் வகுப்புக்களுக்கு தமது பிள்ளைகளை அனுப்புவதற்கு தகுந்த காரணம் உண்டென்றே கொள்ள வேண்டும். இரண்டு மணிக்கு பாடசாலை முடிந்து ஆறு மணிவரையும், மற்றும் சனி, ஞாயிறு விடுமுறை தினங்களிலும் தமது பிள்ளைகள் அநாவசியமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்து அவர்களை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச்செல்வதற்கு தனியார் வகுப்புக்கள் உதவியாக உள்ளன. அத்துடன் அங்கு பல பயிற்சி வகுப்புக்களும், மீட்டல் வகுப்புக்களும், பரீட்சை வழிகாட்டல்களும் நடைபெறுகின்றன. அவற்றுக்கும் மேலாக பல பாடசாலை மாணவர்களும் அங்கு ஒன்றிணைவதால் பாடங்கள் சார்ந்த கருத்து பரிமாற்றங்களுக்கு அது பெரிதும் உதவியாக உள்ளது.

அத்துடன் பெற்றோர், ஒவ்வொரு பாடத்திலும் நிபுணத்துவம் பெற்ற ஆசிரியர்களை தமக்கு அறிமுகம் செய்து கொண்டு தமது பிள்ளைகள் அப் பாடங்களில் எவ்விதம் உயர்ச்சியடையலாம் என்பதை கலந்தாலோசிக்கவும் விவாதிக்கவும் முடியும்.

வெறுமனே சிறிய அரச தொழில் ஒன்றில் குறைந்த சம்பளத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த ஒருவர் எனக்கு ஓரளவு நண்பராக இருந்தார். அவர் தனது வீட்டு விசேஷங்களுக்கு தனது உறவினர்கள், நண்பர்கள் எவரையும் அழைக்கமாட்டார். ஆனால் அவரது மூன்று பிள்ளைகளின் பாடசாலை ஆசிரியர்களையும் அதிபர்களையும் தனியார் வகுப்பு ஆசிரியர்களையும் தவறாது அழைப்பதுடன் விழாவையும் பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுப்பில் நடாத்துவார். அது போன்று அடுத்த வளமாக அவர்களது வீட்டு வைபவங்களுக்கு குடும்ப சமேதராக சென்று விழாவில் முன்னின்று கலந்து கொள்வார். அவரது மூன்று பிள்ளைகளுமே ஒரே தடவையில் 'கம்பஸ்' அனுமதி பெற்று மருத்துவ கற்கையையும் பொறியியற் கற்கையையும் பூர்த்தி செய்தனர்.

பொறுப்பு வாய்ந்த பெற்றோராக அவர்களின் வகிபாகத்தை பாருங்களேன்!

மலைமுரசு வாரமலர் 17.01.2015-23.01.2015

ஒளி அரசி மாசி-பங்குனி 2018 இதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19 " பழிவாங்கலும் வன்முறையும் "

சமூகத்தில் நடந்தேறும் அதிகமான குற்றச்செயல்களுக்கு அடிப்படையாக அமைவது பழிவாங்கும் மனப்பாங்குதான். களவு, பாலியல் அத்துமீறல்கள் நில எல்லை தாண்டல் போன்ற குற்றங்கள். மனிதனிடம் இயற்கையிலேயே வேரூன்றியுள்ள மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை நிமித்தமானவையே. ஆம் மூவகை ஆசைகளையும் சட்ட திட்டங்களுக்கு அமைவாக அடைந்து கொள்வதில் எந்த தவறும் இல்லை. ஆனால் பெண்ணாசை காரணமாக பாடசாலை செல்லும் மாணவியை கடத்திச்சென்று வன்புணர்வில் ஈடுபடுதல், பிறர் வீட்டை உடைத்து அவர்கள் கஸ்டப்பட்டு உழைத்து சம்பாதித்த பணம் பொருளை கொள்ளையிடுதல். எல்லையை நகர்த்தி அடுத்தவன் காணிக்கு உரிமைகோரல் போன்ற குற்றங்கள் அடிப்படையில் பழிவாங்கலுக்கு உட்படாததாயினும் அவை பிறரது பழிவாங்கும் உணர்வை தூண்டுதலுக்கு போதுமானவையேயாகும்.

இனி பழிவாங்கல் என்பது முற்றுமுழுதாக மனிதனுக்கேயுரிய உணர்வு அல்ல. கல்வி அறிவு குன்றியவர்களையும் கல்வி அறிவு மேம்பாடு உடையவர்களையும் அவதானித்தால் கல்வி அறிவு குறைபாடு உடையவர்களிடையே பழிவாங்கும் உணர்வு மிகுந்து காணப்படுகின்றது. இனி மனிதனின் பரிணாம வளர்ச்சியை நோக்குமிடத்து ஆன்மாக்கள் பல காலம் மிருகங்களாக வாழ்ந்த அனுபவத்தை பெற்றுக்கொண்டே பின்னர் மனித பிறப்பை எடுத்ததாக கருத இடமுண்டு. மிருகங்களின் அடிப்படை வாழ்க்கையே வன்முறை சார்ந்ததுதான். இரைக்காக பிற மிருகங்களை வேட்டையாடி கொன்று உண்ணுதல், போட்டியான மிருகங்களை கொன்றொழித்தல் தனது துணையை அபகரிக்க நினைக்கும் தனது இன எதிரியை பழிவாங்கல், தான் தேடிய இரையை அபகரிக்க எத்தனிக்கும் தனது இன மிருகங்கள் மீது வன்முறையை பிரயோகித்தல் போன்ற அவற்றின் பண்புகள் மனித பிறவியை எடுத்த பின்னரும் சிறிதளவாயினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டிக்கொள்வதில் வியப்பில்லையல்லவா? அந்த உண்மையை புரிந்துகொள்ளும் மனிதர்கள் தமது புத்திசாலிதனத்தாலும் கல்வியறிவாலும் வன்முறை, பழிவாங்கல் ஆகிய இரு இழிசெயல்களிலிருந்தும் தம்மை விலக்கிக்கொள்கின்றார்கள்.

அடுத்து சமுதாயத்தின் விதிமுறைகள் நியதிகள் என்பனவற்றுக்கு அப்பால் அரசாங்கம் சட்டம், நீதி ஆகியவற்றை அமுல்படுத்தி கண்காணித்து வருகின்றது. மக்களில் பலருக்கு கல்வி கற்கும் சந்தர்ப்பம் அமையாமல் போகலாம். ஆனால் அவர்கள் சமூக கட்டுப்பாடுகளையும் சட்டதிட்டங்களையும் தெரிந்துகொண்டு வாழ்ந்தால் வன்முறை, பழிவாங்கல் போன்ற படுபாதக செயல்களை தவிர்த்து நடக்கலாம். தமது வாழ்கையையும் காப்பாற்றிக்கொள்ளலாம்.

சட்டத்தை கையிலெடுக்கும் உரிமை எவருக்கும் கிடையாது. எல்லை மீறிய கோபம் காரணமாக சிலர் சட்ட வரம்புகளை மீறி எதிரியென கருதுபவர்களை தண்டிக்க விழையும் போதுதான் வன்முறையும் பழிவாங்கும் உணர்வும் மேலோங்குகின்றது. சமூகங்களிடையே பிரச்சனைகள் உள்ளதுதான். அவற்றை கலந்துரையாடல்கள் மூலம் தீர்க்க முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் விடயங்கள் தெளிவு பெறும். யார் தவறுக்கு காரணமானவர்கள். என்பதை அறிய முடியும். தனது தவறை உணரும் மனிதன் அதனை திருத்த முன்வரக்கூடும். பிரச்சனையை சுமூகமாக தீர்த்துக் கொள்ளவும் முடியும்.

கலந்துரையாடல் மூலம் தீர்த்துக் கொள்ள முடியாத பிரச்சனைகளுக்கு அடுத்த கட்ட தீர்வாக சட்டமும் நீதிமன்றமும் உள்ளன. பொலிஸாரும் சட்டத்தரணிகளும் மக்களது பிரச்சனைகளை தீர்ப்பதற்கு அனுசரணை வழங்குவர். பிரச்சனைகளை தீர்ப்பதற்கு காலதாமதம் ஏற்படுவது உண்மைதான் .நாமும் சமாதானத்திற்கு விருப்புடையவர்களாக இருந்தால் அநாவசிய இழுத்தடிப்புகளுக்கு இடமிருக்காது. காலம் பொன்னானது. எந்த பிரச்சனையையும் கால ஓட்டத்தில் மறந்து மன்னிக்க இடமிருக்கின்றது.

தனி நபர் பழிவாங்கல் உணர்வு அனேகமாக உற்றார் உறவினர்கள் நண்பர்கள், அயலவர்கள் ஆகியோருக்கு எதிராகவே உண்டாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலை முன்னிட்ட பாதிப்புக்களும் துரோகங்களும் பழி வாங்கலுக்கான பிரதான காரணியாக உள்ளது. பெண்கள் மீதான அதீத மோகம் இளைஞர்களுக்கு வெறியுணர்வையூட்டுகின்றது. அதற்கு தடையாக பெண்ணின் பெற்றோரோ உறவினரோ செயல்பட்டால் அல்லது அந்த பெண்ணே குறிப்பிட்ட இளைஞனை விரும்பாமல் மற்றொரு ஆடவனை விரும்பினால் அல்லது ஒரு பெண் ஒரு ஆடவனுடனான நீண்டகால காதலை துண்டித்தால் அங்கு பழிவாங்கும் உணர்வு மேலோங்குகின்றது.

நண்பர்களுக்கிடையேயான முரண்பாடுகளும் முற்றி பழிவாங்கும் அளவிற்கு வளர்ந்துவிடுவதுண்டு. தவறான நடவடிக்கைகளில் ஈடுபடும் நண்பர் குழாமுக்குள் நல்ல நண்பர்களும் இருந்து அவர்கள் அடாவடித்தனங்களுக்கு ஒத்துழைக்காமல் விட்டால்... சம்மந்தப்பட்ட பெற்றோரின் கவனத்திற்கு கொண்டுவந்தால்... சமூகத்தின் முன் நிறுத்தினால்... பழிவாங்கும் உணர்வு உண்டாகின்றது. பாடசாலை மாணவர்களே போதை பொருள் பழக்கத்திற்கு உள்ளானால் நாட்டின் எதிர்காலம் என்னவாகும்? கைபேசி, மடிக்கணனிகள் ஆகியவற்றின் பயன்பாடு அதிகரித்துள்ளது. சமூக வலைத்தளங்கள் தவறான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன.

சிலரது குற்றச்செயல்கள் காரணமாக பொலிஸாரால் வழக்குதாக்கல் செய்யப்படுகின்றது. அயலவர்கள் எவராவது சாட்சி சொல்ல முன் வந்தால். வழக்கு இறுகிவிடும் என்ற பயம். அவர்களை அச்சுறுத்தி சாட்சி சொல்வதிலிருந்து தடுக்க எடுத்த முயற்சி வெற்றியளிக்க வில்லை என்றால் அங்கு பழிவாங்கும் உணர்வு ஏற்படுவது சாதாரணமே!

இவை சில உதாரணங்களேயாயினும் நாட்டில் மிக மிக அண்மையில் நடந்தேறிக்கொண்டிருக்கும் சம்பவங்களின் அடிப்படையிலேயே தரப்பட்டுள்ளன. பாடசாலை செல்லும் சிறுமியே தனது காதலனுடனும் அவளது நண்பனுடனும் இணைந்து திட்டமிட்டு பெற்றோரை கொலை செய்யவில்லையா? தாம் திருட்டில் ஈடுபட்டதற்கு சாட்சியாக நீதிமன்றம் வந்த ஒரு பெண்ணின் மகளை கடத்திச் சென்று கூட்டு வன்புணர்வில் ஈடுபடவில்லையா? விடுதிச்சொந்த காரரும் கராட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரரும் ஐம்பத்தினான்கு வயது நிரம்பியவருமான ஒருவரை அவருடன் நட்பு பூண்டிருந்த இருபதுக்கு மேற்பட்டோர் தடிகளால் அடித்தும் வாளால் வெட்டியும் கொலை செய்யவில்லையா?

குற்ற செயல்களுக்கு எதிராக நடப்பவர்கள் மீது பழிவாங்குவது என்பது ஒரு நியதியாகவே போய்விட்டது போல உள்ளது. பழிவாங்கும் உணர்விற்கு வன்முறையே வடிகாலாக இருக்கின்றது.

சட்டமும் நீதியும் பழிவாங்கல்களுக்கு எதிராக செயற்படுவதுபோல மதங்களும் அவ்வாறான செயற்பாடுகளை கண்டிக்கின்றன. மதங்கள் அஹிம்சையை போதிப்பதுடன் மன்னிக்கும் சுபாவத்தை வளர்க்க வேண்டுமென அறிவுறுத்துகின்றன. அதனால் தான் பண்பாடடைந்த சமூகங்கள் பழிவாங்கலை தவிர்த்து சட்டத்தையும் நீதியையும் போதிக்கின்றன.

தனி நபர் பழிவாங்கலுக்கு அப்பால் சர்வதேச மட்டத்தில் அதனை ஆராய்ந்தால் இன மத மொழி வேறுபாடுகள் மனிதனை வன்முறையின் உச்சத்திற்கு கொண்டு சென்றுள்ளன. துரதிர்ஷ்டவசமாக இனங்கள படைப்பிலேயே வேறுபட்டுள்ளன. வெள்ளையர்கள், கறுப்பர்கள், என்ற நிறப்பிரிவுகள், மங்கோலியர், செவ்விந்தியர், நீக்ரோக்கள் போன்ற தோற்ற வேறுபாடு கொண்டவர்கள் என்று.... இனங்களுக் கிடையே ஒற்றுமை இல்லை.

மொழியை எடுத்தால் உலகில் ஆயிரக்கணக்கான மொழிகள் பேசப்படுகின்றன. ஒரு மொழி பேசுபவருடன் மற்றொரு மொழி பேசுபவர் அனுசரித்து போவதில் பிரச்சனைகள் ஏற்படுகின்றன. ஆங்கிலம் பொது மொழியாக இருந்தாலும் அதனை பேசும் வல்லமை அனைவர்க்கும் இல்லை. அதனால் பல்வேறு மொழி பேசுபவர்கள் மத்தியில் புரிந்துணர்வு அருகி காணப்படுகின்றது. ஆட்சி மொழி மற்ற மொழிகளை நசுக்க பார்க்கின்றது. அது வன்முறைக்கு இட்டுச்செல்கின்றது.

இறைவனின் பெயரால் மதங்களும் ஏராளமாக உள்ளன. கிறிஸ்தவம் இஸ்லாம் இந்துமதம் ஆகியன அதிகம் பேரால் பின்பற்றப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதங்கள் ஒவ்வொன்றும் தமது மதத்தை தவிர ஏனையவற்றை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் கிடையாது.

இனி மக்கள் நாடுகளால் வரையறுக்கப்பட்டுள்ளார்கள். அனேகமாக மக்கள் எங்கு பிறந்தார்களோ அந்த நாட்டின் மீது அன்பு பூண்டு அங்கேயே வசிக்கின்றார்கள். தாய் நாட்டின் மீது பிரியமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். இந்நாட்களில் பல காரணங்களை முன்னிட்டு மக்கள் தாய் நாட்டை விட்டு பிரிந்து வேறு நாடுகளிலும் வாழ்கின்றார்கள். நாடுகளுக்கும் நாடுகளுக்குமிடையே எல்லை சண்டை ஆக்கிரமிப்பு பொருளாதார போட்டி என்ற பல காரணங்களை முன்னிட்டு மோதல் நிலை உள்ளது.

இன மத மொழி வேறுபாடு நாடுகளுக்கும் நாடுகளுக்குமிடையே ஆயுத போட்டியை வளர்த்துள்ளது. பேசித்தீர்க்கும் அளவுக்கு மேலால் பிரச்சனைகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. பல காரணங்களை முன்னிட்டு தீவிரவாத இயக்கங்கள் தோன்றியுள்ளன. அவற்றின் கையில் பணம் மற்றும் ஆயுத பலம் அதிகரித்துள்ளது. பழிவாங்கும் உணர்வும் வன்முறையும் மனித குலத்தை அழிவுப்பாதை நோக்கியே அழைத்து செல்கின்றது.

வேற்றுகிரகங்களில் உயிர்வாசிகள் இருக்கின்றார்களா என்று விஞ்ஞானிகள் பணத்தையும் நேரத்தையும் கொட்டி முயற்சிக்கின்றார்கள். எமது தாய் பூமியிலேயே ஒற்றுமையை காக்க முடியாத மனித இனம் வேற்றுக்கிரக வாசிகளுடன் எத்தகைய உறவை பேணப்போகின்றது?

மலைமுரசு வாரமலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 "சொல்லொன்று செயலொன்று"

உண்மையை சொல்லப்போனால் நல்ல கொள்கைகளில் நம் அனைவருக்குமே பற்றுதலும் நம்பிக்கையுமுண்டு. ஆனால் அதைக் கடைப்பிடிப்பதிலேயே நாம் உறுதி பூண்டவர்களாக இல்லாமல் வாழ்க்கையை வீணடிக்கிறோம்.

நல்ல கொள்கைகள் என்று நாம் அறிந்தவற்றில் 'பொதுநலம் பேணல்', 'அஹிம்சையை கடைப்பிடித்தல்', 'பெண்ணியம் போற்றல்', 'சேவை மனப்பாங்கு' ஆகியன சிறுவர் முதல் முதியோர் வரை அனைவராலும் கடைப்பிடிக்க வேண்டிய மிக மிகச் சிறந்த குறிக்கோள்களாகும்.

'சுயநலமானது' பொது நலத்தில் அடங்கும் என்று மஹாத்மாகாந்தி கூறிவைத்தார். அதே போன்று ஜப்பான் போன்ற நாடுகள் கூட்டாக கட்டுப்பாட்டுடன் சமூக நோக்கில் எதையும் செய்கின்ற உயர் இலட்சியத்தை உருவாக்கி இருக்கின்றன. சமுதாய உணர்வு (Community feeling), கூட்டாக வேலை செய்தல் (Team work) இரண்டுமே அந்த நாடுகளை நாகரீகத்திலும் விஞ்ஞானத்திலும் உற்பத்தி திறனிலும் மேலோங்க வைத்துள்ளன. அதனால் நாட்டின் பொருளாதார வளம் குறிப்பிட்டு கூறும் அளவுக்கு உயர்ந்துள்ளதுடன் தனி நபர்களது கல்வி மற்றும் வாழ்க்கை வசதிகள் மேலோங்கிவிட்டன!

அடுத்து மஹாத்மா, 'ஹிம்சையை' எதிர்த்துப் போராடினார். உயிர்களை உணவுக்காக கொல்வதை, ஹிம்சை செய்வதை தடுப்பதற்காக மக்கள் மத்தியில் பாரிய பிரச்சார நடவடிக்கையை மேற்கொண்டார். எமது இந்து மதமும் பசுவதை உட்பட அனைத்து உயிர்வதைகளையும் கண்டிக்கின்றது. அதை வலியுறுத்த பசுவை தெய்வம் என போற்றவும் செய்கின்றது. இந்தியாவில் பெரும்பான்மையான இந்துக்கள் சைவ உணவினையே ஏற்றுள்ளனர். மஹாத்மாகாந்தியின் பிரச்சாரத்தால் கவரப்பட்ட இலட்சக்கணக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டவர்கள் சைவ உணவையே உண்கின்றார்கள். விஞ்ஞானம் கூட மனிதனுக்கு சைவ உணவே சிறந்தது என சிபார்சு செய்கின்றது. பெரும்பாலான இதய நோய்களுக்கு அசைவ உணவே காரணமாக உள்ளது. மஹாத்மாகாந்தி இந்தியாவின் சுதந்திர போராட்டத்தையே அஹிம்சை வழியில் நடாத்தி வெற்றியீட்டியவர். சத்தியாகிரக போராட்டம் வெள்ளையனையே நடுங்க வைத்தது. திருவள்ளுவரும் புலால் மறுத்தலை சிறப்பித்து கூறியுள்ளார். 'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்'. இன்று என்ன நடக்கின்றது பறவைகளையும், கால்நடைகளையும் இறைச்சிக்காகவே உற்பத்தி செய்கிறார்கள். குறுகிய காலத்தில் அதிக தசையை கொடுக்கக்கூடிய கோழி, மாடு, பன்றி போன்றவை வாழத்தொடங்கு முன்னரே மனிதனுக்கு உணவாக சமித்து விடுகின்றன. அது மட்டுமன்றி மேலதிக உற்பத்தி குளிர் சாதனப்பெட்டியில் இடப்பட்டு சேமிக்கப்படுகின்றன. இன்னும் ஏன்? மனிதனை மனிதன், இனத்தை இனம், ஒரு மதத்தினரை மற்றொரு மதத்தினர் இம்சை செய்து படுபாதகமாக கொலை செய்யும் காலமாக இது மாறிவிட்டது. ஐ.எஸ். போராளிகள் (Islamic State Militants) பணயக்கைதிகளையும் ஊடகவியலாளர்களையும் பெண்களையும் ஈவிரக்கமின்றி படுபாதகமான முறைகளில் கொல்வதைக்கண்டு அகில உலகமே அதிர்ந்து நிற்கின்றது. மனித சமுதாயத்திற்கு எமது முன்னோர் அஹிம்சை பற்றி போதித்ததுடன் அவ் வழியில் தாமும் நடந்து காட்டினர். தொடர்ந்து வந்த சமுதாயமும் அந்த வழியை பின்பற்றியிருந்தால் இன்று மனிதன் தேவனாகியிருப்பான்!

அடுத்து 'பெண்ணியம்' பற்றி சிந்திப்போம். பெண்ணியக்கருத்துக்கள் இன்று நேற்றுத்தான் தோற்றம் பெற்றன என்று எம்மில் பலர் எண்ணுகிறார்கள். அது மிகப் பெருந்தவறு. எமது புராணங்களிலும் இதிகாசங்களிலும் பெண்ணியம் பெருமையாக பேசப்படுகின்றமையை நாம் காண முடியும். இராமாயணமும், மகாபாரதமும் பெண்ணை பெருமைப்படுத்தும் வகையில் இரு பெரும் யுத்தங்களையே நடாத்தின. இராமாயணம் சீதையின் கற்பையும் மனவுறுதியையும் போற்றுவதுடன் அவளை துஷ்டனான இராவணனிடமிருந்து மீட்பதற்காக கடல் தாண்டி சென்று யுத்தம் புரிவதாகவும் காட்டுகின்றது. மகாபாரதத்தில் திரௌபதிக்கு இழைத்த அவமானமே குருஷேத்திர யுத்தத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையானது. ஒரு கட்டத்தில் திரௌபதி உறவினர்களுக்கு ஏற்படப்போகும் உயிரிழப்புக்கள் குறித்து கவலையடைகிறாள். அதனால் தன்னிமித்தம், தனக்கு நேர்ந்த அவமானம் நிமித்தம், இந்த போரை நடாத்த வேண்டாம் என்று கண்ணனை வேண்டிக்கேட்கின்றாள். அப்போ கண்ணன் கூறிய பதில் அவளை வாய் அடைக்கச் செய்கின்றது. 'இந்த யுத்தம் உன்னை மட்டும் கருத்தில் கொண்டு நிகழ்வதல்ல.... இந்த உலகத்தில் உள்ள எந்த ஒரு பெண்ணுக்கும் இப்படி ஒரு அவமானம் ஏற்பட்டால் எவ்வாறான ஒரு தண்டனை நியமிக்கப்படும் என்பதை வெளிக்காட்டவே இந்த யுத்தம் தீர்மானிக்கப்பட்டது'.

பாருங்கள், பெண்ணியம் பற்றி அதிகம் பேசப்படும் இந் நாட்களில் என்ன நடக்கின்றது? புதினப் பத்திரிகைகளையும் இணையத்தையும் திறந்தால் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளே செய்திகளாக வந்து எமது நெஞ்சை அதிர வைக்கின்றது. பெண் எனப்படுபவள் தாய். ஆண்களுக்கு கிடைக்கக்கூடிய அனைத்து உரிமைகளும் சுதந்திரமும் வாய்ப்புக்களும் அவளுக்கும் எட்ட வேண்டும். அவள் பலவீனமானவள் அல்ல. ஆண்கள் குழுக்களாக தனி ஒருத்தியை இரவு நேரத்தில், பேருந்தில் கொடுமைபடுத்துகின்றார்கள். பெண்கள் குழுக்களாக தனி ஒருவனை தண்டிக்க புறப்பட்டால் இந்த உலகமே தாங்காது என்பதை சகோதரர்களே நீங்கள் உணர வேண்டும். இயற்கையிலேயே பெண்ணிடம் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய சிறந்த பண்புகள் உண்டு. அதே போல் அன்புக்கும் பாசத்துக்கும் கருணைக்கும் அவளே தலைவி! அவளது அந்த பண்புகள் பாராட்டப்பட வேண்டும். அநீதிகள் இனம் காணப்பட்டு அழித்தொழிக்கப்பட வேண்டும். அதுவே சமுதாய மேன்மைக்கு வழி காட்டும் என்பதுடன் நன்மார்க்கத்திலும் இட்டுச் செல்லும்!

அடுத்து 'சேவை மனப்பாங்கு' ஒருவனிடத்தில் இருக்குமேயானால் அவன் தெய்வத்துக்கு சமானமாவான். அன்னை தெரேசா தனது சேவையால் நோபல் பரிசினை பெற்றார். 'புளோரன்ஸ் நைட்டிங்கேல்' தனது சேவையால் நோயாளிகளுக்கு பரிகாரமும் ஆறுதலும் அளித்தார். இன்றும் அவரது சேவையை நினைவு கூரும் வகையில் எமது வைத்திய சாலைகளில் வெள்ளை நிற சீருடை அணிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாதிமார் கடமையில் ஈடுபட்டிருப்பதையும் நோயாலும் வயோதிபத்தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளப்பரிய கடமைகளை செய்வதையும் நாம் எம் கண்ணால் காண்கின்றோம். அசுத்தம், நாற்றம் என்றெல்லாம் பாராமல் இப்படியான பணியில் ஈடுபடுவது வெறும் சம்பளத்துக்காக மட்டும் என்று இருக்க முடியாது. அவர்களது ஆழ்மனதில் அவர்களுக்கு இருந்திருக்கக்கூடிய பரிவு, பாசம், சேவை மனப்பான்மை ஆகியனவே அவர்களை தாதிமார் சேவைக்கு உந்தி தள்ளியிருக்கும்!

நிச்சயமாக நீங்கள் கூட 'பொதுநலத்தையும்', 'அஹிம்சையையும்', 'பெண்ணியத்தையும்', 'சேவை மனப்பான்மையையும்', விரும்புபவர்தான். ஆனால் அவற்றை எவ்வளவு தூரம் உங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்கின்றீர்கள் என்பதுதான் கேள்வி!

ஊரில் எனக்கு உறவினரான அடாத்துக்கார பேர்வழி ஒருவர், எப்பேற்பட்ட கஷ்டமான விரதத்தையும் முயன்று அனுஷ்டிப்பார். பாறணை முடிந்து மறு நாளே ஆடு அடித்தல், கோழி வெட்டுதல் முதல் அனைத்து அட்டூழியங்களையும் கூச்சமின்றி செய்ய தொடங்கிவிடுவார். எப்பேற்பட்ட உலகம் என்று பாருங்கள்!

மலைமுரசு வாரமலர் 08.11.2014 - 14.11.2014

ஒளி அரசி கார்த்திகை இதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 சொந்தக் காலில் நிற்றல்

ஒரு பசுக்கன்றானது தான் இம் மண்ணில் வாழ்வதற்காய் பிரசவிக்கப்பட்டிருப்பதை அறிவு பூர்வமாக உணரும் முதற்கணமே அது செய்யும் முதற் காரியம் எழுந்து தனது சொந்தக்காலில் நிற்பதுதான்! அடுத்து...எந்தவித முன் அனுபவமோ அறிவோ இன்றியும் எவரது தூண்டுதலின்றியும் தாய் மடியை தேடி அறிந்து கொண்டு தனது பசியை போக்குகின்றது! அது ஐந்தறிவு படைத்த ஜீவனாகும். ஆறறிவு படைத்த ஜீவனுக்கு தாய் தனது மடியில் வைத்து பால் புகட்ட வேண்டியுள்ளது. எடுத்தடி வைக்க எட்டு மாதங்கள் ஆகின்றன.!

பசுக்கன்று இங்கு உதாரணத்துக்காகவே எடுத்துக்கொள்ளப்பட்டது. காட்டில் பிரசவிக்கப்படும் ஜீவன்கள் ஒவ்வொன்றுமே சிறிது கால அவகாசத்திலேயே எழுந்து நிற்பது மட்டுமன்றி தனது பசியை போக்கிக்கொண்டு தனது தாயையும் கூட்டத்தையும் தொடர்ந்து செல்ல வேண்டும். இல்லாவிட்டால் பகை பிராணிகளிடமிருந்து தாயும் சேயும் தப்ப முடியாது, இரையாக வேண்டியதே.

இறைவன் இயற்கையின் வாயிலாக மனிதனுக்கு பல செய்திகளை பகிர்ந்துள்ளான்(Share). அதை சரியாக புரிந்து கொள்வதில் தான் வாழ்க்கையின் வெற்றி தங்கியுள்ளது. மேற்கூறப்பட்ட உதாரணம் இரண்டு தகவல்களை எமக்கு தெரிவிக்கின்றது. ஒன்று எமது பாதுகாப்பு நாம் சொந்த காலில் நிற்பதிலேயே தங்கியுள்ளது. இரண்டாவது எமது வாழ்க்கைக்கான ஜீவனோபாயத்தை நாமே தெரிந்து கொண்டு அடியெடுத்து வைக்கவேண்டும்.

எமது நாட்டில் சில வருடங்களுக்கு முன்புவரை யுத்தம் நிமித்தமான அசாதாரண நிலைமை ஒன்று மூன்று தசாப்தங்களாக நீடித்தது. எமது மக்கள் தமது வாழ்வாதாரங்களை இழந்ததுடன், இடம் பெயரவும் நேரிட்டது. உயிரிழப்புக்கள் ஏற்பட்டது. பலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவயவங்களை இழந்தார்கள். பலர் பெற்றோர், சகோதரங்கள், கணவன், மனைவி என்ற உறவுகளை இழக்க நேரிட்டது. குழந்தைகளையும் பெண்களையும் பாதுகாத்துக்கொண்டிருந்த உயிர்கள் பறிக்கப்பட்டன. அல்லது சிறையில் அடைக்கப்பட்டன. வன்னியில் சொந்த நிலப்பரப்பில் விவசாயம், பயிர்செய்கை, கால்நடைவளர்ப்பு ஆகிய முயற்சிகளின் மூலம் சொந்த காலில் நின்ற மக்கள் என்ன செய்வதென்று அறியாது திகைத்தார்கள்.

அப்போதுதான் வெளிநாடுகளிலிருந்து எம் மக்களை நோக்கி உதவிக்கரம் நீண்டது. அவையே அரச சார்பற்ற நிறுவனங்களாகும். உண்மையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் மக்களுக்கு இலவசமாக பணத்தை வாரி இறைக்கவில்லை. அவை மக்கள் சொந்தகாலில் நிற்பதற்கும் தமது எதிர்காலத்தை நல்ல முறையில் அமைப்பதற்குமே உதவி செய்தன. அவர்களது பிரதான நோக்கம் மக்களை வலுவூட்டி அவர்களது வாழ்வாதாரத்தை கிடைக்கும் வளங்களை கொண்டும் சுய ஆற்றலுடனும் அபிவிருத்தி செய்தலாகும்.

அந்த நடைமுறை உண்மையை மக்கள் ஒவ்வொருவரும் தமது மனத்தில் இருத்தல் கட்டாயமானதாகும். நாம் மற்றவர்களின் உதவியில் தங்கியிருப்பவர்களாக இருந்தால் அவர்களது உதவி கிட்டாமல் போகும் சந்தர்ப்பத்தில் எங்கள் நிலை என்ன?

அதனால் தான் கல்வி அமைச்சு கூட ஒரு செயற்திட்டத்தை முன்னெடுக்க உத்தேசித்துள்ளது. அதன்பிரகாரம் க.பொ.த உயர்தரத்தை பூர்த்தி செய்து பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப்பெற்ற ஒவ்வொரு மாணவனும் ஆறுமாதகால தொழில் கல்வி ஒன்றை கட்டாயமாக பெறவேண்டும். ஒரு மாணவன் பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு வெளியேறும் போது உத்தியோகத்தை மட்டும் நம்பியிருப்பதால் அவன் அரசாங்கத்துடனும் ஏன் பெற்றோருடனும் கூட முரண்படுகின்றான். ஆனால் அவன் தொழில்கல்வியை கற்றிருப்பானேயானால் தனது கற்கை முடிவுற்று வெளியேறியதுமே ஒரு வருவாயை ஏற்படுத்திக்கொண்டு சொந்தக்காலில் நிற்கக்கூடியதாக இருக்குமல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவே நம் ஒவ்வொருவருக்கும் வேண்டுவதாகும். எமது திறமையை நாமே புரிந்து கொள்ள வேண்டும். விஞ்ஞானம், கைத்தொழில், பொறியியல், சட்டம், விளையாட்டு, எழுத்தாற்றல் ஓவியம், ஹோட்டல் முகாமைத்துவம், மருத்துவம் என்று பல துறைகள் இருந்தாலும் நாம் அவற்றில் பிரகாசிக்க கூடிய தொழில்கள் சிலவாகவே இருக்கும். நாம் தெரிவு செய்யும் துறைகளில் எமது திறனை வேகமாக வளர்த்துக்கொள்ள வேண்டும். அது அத் துறையில் மற்றவர்களுக்கு இருக்கும் திறனை விட குறைந்ததாக இருக்கக் கூடாது. அதே சமயம் நாம் நிபுணத்துவம் பெற்ற துறையில் காலதாமதம் செய்தலாகாது. அது எமது சந்தர்ப்பத்தை மற்றவர்களுக்கு வழங்குவதாக முடிந்துவிடும்.

அதே சமயம் மற்றவர்கள் அவரவர் துறையில் வேகமாக முன்னேறி இருப்பர். புகழின் உச்சிக்கும் சென்றிருப்பர். தமது சொந்தகாலில் நிற்பதிலும் வெற்றி பெற்றிருப்பர். அதை பார்த்து சோர்வுறக்கூடாது. பெரும் பெரும் தலைவர்களினதும், மகான்களினதும் அவதார புருஷர்களினதும் வெற்றிக்கான காரணங்களை புரிந்து கொண்டு நாமும் அவ் வழியில் வேகமாக முன்னேற முயற்சிக்க வேண்டும்.

அதைவிடுத்து மற்றவர்களை பார்த்து பொறாமை வெறுப்பு பகை உணர்வு கொண்டு எமது திறமையை மழுங்கடிக்கக் கூடாது. அது அனாவசிய நேர விரயத்திற்கும், வீழ்ச்சிக்கும் வழிவகுக்கும்.

சோம்பல் உங்களை அண்டவிடாது அகற்றுங்கள். மனச்சோர்வுதான் சோம்பலுக்கு ஆதாரம். எமது தாழ்வு மனப்பான்மைதான் மனச்சோர்வுக்கான காரணமாகும். சிலர் வீட்டின் ஒரு மூலையில் அமர்ந்திருந்து சிந்தித்துக் கொண்டிருப்பர். அதனால் எந்த இலாபமும் ஏற்படப்போவதில்லை.

முயற்சி செய்யாமல் முன்னேற முடியாது. எம் மீதான எம் நம்பிக்கைதான் வெற்றி தரும். சிந்தியுங்கள். அதை விரைந்து செயற்படுத்துங்கள்.

மற்றவர்கள் உதவியில் தங்கியிருப்பதை அவமானம் என உணருங்கள். அந்த ஒரு உணர்வே வெற்றிக்கான உந்து சக்தியாக அமைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடும். உங்களுக்கு உதவுபவர்கள் உங்கள் பெற்றோராக கூட இருக்கலாம். அவர்களை தூக்கி எறியுங்கள். உங்களுக்கான ஜீவனோபாயத்தை நீங்களே அமைத்துக்கொள்ளுங்கள். அது எந்த தொழிலாகவும் இருக்கலாம். செய்யும் தொழிலே தெய்வம் என்பார்கள். அனாவசிய கௌரவத்திற்கு இடம் கொடுக்காதீர்கள். சிறிது சிந்தித்து பாருங்கள். எத்தனை பெற்றோர் கூலி வேலை செய்தும் கூட தமது பிள்ளைகளை பொறியியல் பீடத்திற்கும் மருத்துவ பீடத்திற்கும் அனுப்பி கல்வி கற்க வைத்திருப்பார்கள். அவர்கள் தமது தொழிலில் கௌரவத்தை பார்த்திருந்தால் உங்களை நல்ல நிலைக்கு ஆளாக்க முடியுமா? நீங்கள் மட்டும் எந்த வகையில் விதிவிலக்காவீர்கள். உங்களுக்கு உதவி செய்தவர்களை தாங்க வேண்டும் என்ற நல்லெண்ணம் உங்களிடம் இருக்கின்றதா? அப்படியாயின் உடனே உங்களை சொந்த காலில் ஸ்திரப்படுத்திக்கொண்டு அவர்களை ஆராதியுங்கள். இன்று என்பதே உண்மை. நாளை என்பதும் பின்னர் என்பதும் உங்களுக்கு எட்டாமலே போகலாம். உங்களுக்கு உதவி புரிந்தவர்களின் இறப்பில் நீங்கள் சிகரத்தை தொட்டால் கூட பிரயோசனம் இல்லை.அவர்கள் முன்பாகவே சிறப்புற வாழ்ந்து காட்டுங்கள்.

இன்னும் சொல்லப்போனல் பிறர் உதவியில் தமது இளமை காலத்தை கழித்தவர்கள் முதிர்சியில் முயற்சியில் ஈடுபட முடியாது.

மறுவளமாக நாம் மற்றொரு விடயத்தையும் கருத்துக்கு எடுக்க வேண்டும். அது நாம் பிறருக்கு உதவிசெய்தல் ஆகும்.

எம்மை சார்ந்தவர்களுக்கு நாம் செய்யக்கூடிய பெரும் உதவி அவர்களை விரைந்து அவர்களது சொந்த காலில் நிற்க கூடியதாக உருவாக்குவதே. அவர்கள் முழுமை பெற்றவர்களாக உருவாகினால் தான் சமுதாயத்திற்கு உதவு முடியும். சமுதாயம் நம் கண்முன்னால் அவர்களை போற்றும் நாமும் மகிழ்ச்சியடைவோம். பலர் சுயநலமி களாக வளர்ந்துவிடுகிறார்கள். அவர்களால் நாட்டுக்கும் சமுதாயத் திற்கும் எந்த விமோசனமும் ஏற்படாது. எம்மை சார்ந்தவர்கள் பொது நல சிந்தனையுடன் வளர்வதை நாம் உறுதி செய்து கொள்ளல் வேண்டும். அதுவே நமக்கு பெருமையை குவிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பாத்திரம் அறிந்து பிச்சை போடு' என்று ஒரு பழமொழி உண்டு. ஒருவனது தகுதியையும் தேவையையும் அறிந்தே உதவி செய்ய வேண்டும். 'ஒருவனை கெடுக்க திட்டமிட்டால் அவன் கையில் பணத்தை கொடு' என்று சொல்லுவார்கள். எமது பிள்ளைகளுக் காயினும் பணத்தையும், செல்லத்தையும் தொடர்ந்து கொடுத்தால் அது உருப்படாமல் பொய்விடுமல்லவா? எனவே உதவி செய்யும் விடயத்தில் விழிப்பாக இருக்க வேண்டும்.

பதினெட்டு வயதின் மேல் குழந்தைகள் பருவ வயதை அடைகின் றார்கள். பிள்ளைகள் சிறு வயது முதலே பெற்றோரின் வழிகாட்டலில் வளர்பவர்கள். அவர்களது வளர்சிக்கேற்ப அவர்களை சுயமாக சிந்திக்கவும் சுயமாக தமது கடமைகளை நிறைவேற்றவும் தகுந்தவர்களாக உருவாக்க வேண்டும். அவர்களை சுயசம்பாத்தி யத்தில் வாழ வழிகாட்டவேண்டியது பெற்றோரின் கடமையாகும். தவறின் அவர்கள் பொற்றோரில் தங்கியிருப்பதில் சுகம் காண்பதுடன் வரட்டுக்கெளரவம் பேசிக்கொண்டு எந்த தொழிலும் தமக்கு, தமது தகுதிக்கு ஏற்றதல்ல என்று பெருமை பேசித்திரிவர்.

ஒரு சமயம் அவரது பெற்றோர் இறந்து விட்டால் செய்வதறியாது மலைத்து நிற்பர். அல்லது சகோரர்களின் உதவிக்காக கையேந்துவர்.

சரி... இனி எமக்கென்று பொதுவாக ஒரு பணி இருக்குமாக இருந்தால் அது பிறர் உதவியில் தொடர்ந்து வாழ்பவர்களை அடையாளம் கண்டு ஒதுக்குவதே ஆகும்.!

மலைமுரசு வாரமலர் 19.12.2015-25.12.2015

ஒளி அரசி - சித்திரை 2018 இதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22 பசி!... பசி!!... பசி!!!..

உலகத்திலேயே மிக மிக கொடுமையான அனுபவம் எது என்று கேட்டால் அது பசியேதான்! சிறுவர் முதல் பெண்கள் வரை இந்த கொடுமைக்கு இலக்காகியிருப்பதானது எமது கண்ணீரையே வரவைப்பதாக இருக்கின்றது! ஒரு பெண் கர்ப்பந்தரிக்கும் போது அவளுக்கு வேண்டிய சத்துணவு கிடைக்காவிட்டால் அவளது எடையும் ஆரோக்கியமும் குறைவடைகின்றது. அதன் விளைவாக அவளுக்கு பிறக்கும் குழந்தையும் எடை குறைந்தும் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டுமே காணப்படுகின்றது. கருவிலேயே ஆரோக்கியக் குறைவுடன் உருவாகும் ஒரு பிள்ளை தனது வாழ்நாள் பூராகவுமே புலன்கள் பாதிக்கப்பட்டோ அங்கவீனமுற்றோ காலத்தை ஓட்ட வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக வேண்டி உள்ளது.

எமது நாட்டின் கிராமப்புறங்களில் அரைவாசிக்கு மேற்பட்ட குடும்பங்கள் பட்டினியால் வாடுகின்றன. தமது பிள்ளைகளுக்கு கால் வயிறு, அரை வயிறு உணவு கூட கொடுக்க முடியாத பெற்றோர் கண்ணீருடன் காலத்தை ஓட்டுகின்றார்கள். அதற்கான பிரதான காரணம் வறுமை என்றே சொல்ல வேண்டும். அந்த வறுமையை ஓட்டுவதற்காக ஆண் பெண் பேதமின்றி குடும்பமே ஒன்றிணைந்து சிறு தோட்டம், விவசாயம், விறகு வெட்டல், கூலி வேலைக்கு செல்லல் ஆகிய பல முயற்சிகளிலும் ஈடுபடுகிறார்கள். இருந்தாலும் அவர்களது முயற்சி பல காரணங்களை முன்னிட்டு பூரண பலன் அளிப்பதில்லை. சிறு தோட்டம் மற்றும் விவசாயம் செய்ய அவசியமான உபகரணங்கள் மற்றும் பசளை வகைகளை பெற்றுக் கொள்வதற்கான பணவசதி அவர்களிடம் இல்லாததால் உற்பத்தி வீழ்ச்சியடைகின்றது. பசி காரணமாக அறுவடைக்குரிய காலத்துக்கு முன்பே விளை பொருட்களை விற்று பணம் சேகரித்தல் மற்றும் உணவுக்கு பயன்படுத்தல். அடுத்த போகத்துக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதைகளை மீதப்படுத்த முடியாமல் போவதால் கடன்பட நேர்தல். போன்றன சம்பவிக்கின்றன.

அடுத்து கிராமங்களில் வசிக்கும் இளைஞர்கள் பலர் காட்டில். பட்ட மரங்களை தறித்து விறகாக்கி அவற்றை துவிச்சக்கர வண்டிகளில் கட்டி எடுத்து நகர்ப்புறங்களுக்கு கொண்டு சென்று விற்று பணம் சம்பாதிக்கிறார்கள். துவிச்சக்கர வண்டியில் தமது தலைக்கும் மேலாக விறகுக் கட்டுக்களை அடுக்கடுக்காக கட்டி தம்மை விட அதிக பாரத்தை அந்த இளைஞர்கள் நெஞ்சால் இழுத்துச் செல்வதை அவர்களது தாய்மார் பார்த்தால் அவர்களது வயிறு பற்றி எரியும்! அப்படி அவர்கள் சுமந்து செல்லும் விறகுகளை சேகரிப்பதற்காக அவர்கள் படுகின்றபாட்டை சொல்ல வார்த்தைகளே இல்லை. விடிய முன்னராக காட்டுக்கு செல்ல வேண்டும். முடிந்தால் மனைவி, பிள்ளைகள் கூட ஒத்தாசைக்கு செல்லல் வேண்டும். காட்டில் பாம்பு உட்பட விஷ ஜந்துக்களின் அபாயங்களிலிருந்து தப்ப வேண்டும். மரத்தை பிளந்து ஒரே அளவில் விறகுகளை கட்டுகளாக்க வேண்டும். பின்னர் சரியாக 'பலன்ஸ்' ஆகும்படி துவிச்சக்கர வண்டியில் 'லோட்' செய்ய வேண்டும்.

அத்தனையையும் செய்த பின்னர் கூட காலை உணவு இருக்காது. சிறுவர்கள் உணவின்றி பாடசாலை செல்வர்.

விறகுக்கட்டை சுமந்து செல்லும் இளைஞன் வெறும் குடிநீரை அருந்திவிட்டு புறப்படவேண்டும். இத்துடன் சோதனைகள் முடிந்து விடாது. காலை 9.00 மணி தாண்டிவிட்டால் பொலிசார் வீதிக்கு வந்து விடுவார்கள். விறகு வெட்ட, கொண்டு செல்ல 'பாஸ்' இருக்கின்றதா என நூறு கேள்விகளுக்கு விடை சொல்லி அவர்களை அனுசரித்து செல்ல வேண்டும். விறகு வெட்டி விற்பது என்பது ஒரு பாரம்பரியமான தொழில். அது ஏழை மக்களின் ஒரு ஜீவனோபாயம். பசி ஆதிகாலம் தொட்டே இருக்கின்றது. சட்டம் இப்போ வந்தது.

ஒரு சமயம் துவிச்சக்கர வண்டியில் விறகேற்றிச்சென்று விற்கும் பலரை பொலிசார் அடுத்தடுத்து நீதி மன்றில் முன்னிலைப் படுத்தினார்கள். அச் சமயம் இருந்த நீதிவான் மனிதாபிமானம் மிக்கவர். அவர் 'பொலிசாரை' நோக்கி கூறினார்.... உலகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ குற்றச்செயல்கள் நடைபெறுகின்றன. அவை எதுவும் உங்கள் கண்களுக்கு தெரியவில்லையா? இந்த ஏழை மக்கள் தமது மெய்யை வருத்தி தமது மனைவி, பிள்ளைகளின் ஜீவனோபாயத்துக்காக செய்யும் இந்த அற்ப வருமானம் தரும் தொழில்தான் உங்களுக்கு தவறாக பட்டதா? இந்த ஏழைகள் மீது குற்றம் சுமத்துவதையும் தண்டிக்க விழைவதையும் உடன் நிறுத்துங்கள். பொலிசார் அதிரந்து விட்டனர். தமது தவறை நிறுத்திக்கொண்டனர்.

மற்றொரு பகுதியினர் விவசாயம் செய்ய முதலீடு இல்லாமையாலும் வெள்ளம் புயல் வரட்சி காரணமாகவும் விவசாய செய்கையை விட்டு கூலித் தொழிலுக்கு செல்கின்றார்கள். கூலித்தொழில் தினமும் கிடைப்பதில்லை. தவிர மிகவும் 'Risk' எடுக்க வேண்டும். போதிய சம்பளம் கிடைப்பதில்லை. சம்பளம் கிடைக்கும் நாள் தவிர்ந்த ஏனைய நாட்களில் குடும்ப அங்கத்தவர்கள் இரவு பட்டினியுடனேயே தூங்க நேரிடுகின்றது.

உலகளாவிய ரீதியில் பார்த்தாலும் ஆசியாவில் மட்டும் மூன்றில் இரண்டு பங்கினர் பசியால் வாடுகிறார்கள். உலக ஜனத்தொகையின் ஒன்பதில் ஒருவர் பசியால் வாடுகின்றார்கள். அது 805 மில்லியன் மக்கள் தொகையை குறிக்கும்.

இன்னும் கூறப்போனால் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கூட 13.5 வீதத்தினர் பசியாலும் சத்துணவின்றியும் வாடுகின்றார்கள். 100 மில்லியன் குழந்தைகள் நிறை குறைவாக உள்ளனர். இவையெல்லாம் அக் குழந்தைகளின் ஆரோக்கியம், வளர்ச்சி, கல்வி, எதிர்காலம் ஆகிய அனைத்தையும் பாதிப்புக்குள்ளாக்கும் விடயங்களாக உள்ளன.

இனி ஆபிரிக்காவை எடுத்தால் 23 மில்லியன் குழந்தைகள் பசியுடன் பாடசாலை செல்கின்றார்கள். அவர்கள் எப்படி கல்வியில் கவனம் செலுத்த இயலும்? சத்துணவின்றி நோய்வாய்ப்படும் பட்சத்தில் அவர்களால் எப்படி தொடர்ந்து கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்துணவு கிடைக்க பெறாமையால் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் பாதிப்பேர் ஒவ்வொரு வருடமும் இறக்கிறார்கள். அது எண்ணிக்கையில் 3.1 மில்லியன் ஆகும். எப்பேற்பட்ட பரிதாபம் என்பதை பாருங்கள்!

உலகின் மிகக் கொடிய நோய்களான 'எயிட்ஸ்' 'மலேரியா' 'கான்சர்' போன்றவற்றால் இறப்பவர்களைக் காட்டிலும் பசியால் இறப்பவர்களின் எண்ணிக்கையே அதிகமாக உள்ளது. இது பெரும் அதிர்ச்சி அளிக்கும் விடயமே அல்லவா?

ஆபிரிக்க நாடுகள் அதிக அளவில் பசியால் வாடுகின்றன. எத்தியோப்பியா, சோமாலியா, கென்யா ஆகிய நாடுகளில் வறட்சி காரணமாக பயிர்கள் மட்டுமன்றி கால்நடைகளும் பெருமளவில் இழக்கப்படுகின்றன. 2013ல் இந் நிலைமை மிகவும் கடுமையாக இருந்தது.

உலகளாவிய ரீதியில் அரசாங்கங்கள் பசிக்கெதிராக பெரிதாக எதையும் சாதிக்கவில்லை. சீரற்ற சந்தை நிலைவரம் காரணமாக விலையேற்றத்தை தவிர்க்க முடியாதிருப்பதால் மக்கள் பெரும் பணம் கொடுத்து சத்துணவு வாங்குவதை தவிர்த்து மலிவான சத்தில்லாத உணவை உட்கொள்கிறார்கள்.

அதுமட்டுமன்றி உணவுப் பொருட்கள் கப்பலிலும் உள்ளூரிலும் பெருமளவில் பழுதடையும் நிலையையும் தவிர்க்க முடியாதுள்ளது. அண்மையில் தம்புள்ளை சந்தை நிர்வாகிகள் பல்லாயிரம் கிலோ புத்தம் புதிய பாவனைக்குகந்த மரக்கறிகளை காட்டு யானைகளுக்கு தீனியாக கொடுக்க வேண்டி ஏற்பட்டதாகவும் அதற்கு காரணம் புதுவருடத்தை முன்னிட்டு தொடர்ச்சியாக வந்த விடுமுறைகளே என்றும் குற்றம் சுமத்தினர். அதே சமயம் புதுவருட நாட்களில் சந்தையில் மரக்கறிகளின் விலை 100ரூபா முதல் 120 ரூபாவுக்கு குறையாமல் இருந்தது.

யுத்தம் நடைபெறும் நாடுகளில் இராணுவம் ஒரு பிரதேசத்தை சுற்றிவளைத்து அங்கு வாழும் மக்களுக்கு உணவும் நீரும் கிடைக் காமல் பட்டினி போடுவதன் மூலம் பாரம்பரிய நிலப்பிரதேசங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து அவர்களை விரட்டியடிப்பதை ஒரு யுத்த தந்திரமாக செய்கின்றனர்.

யுத்தம் நிமித்தமே எமது தமிழ் சமூகம் அநாதரவான நிலைக்கு உட்பட்டு பசி என்ற கொடுமையை அனுபவித்துக் கொண்டிருக் கின்றது. தமது வயிற்றை கழுவுவதற்காக அவர்கள் விறகு வெட்டியும் சிறுதோட்டம் செய்தும் கூலிவேலைக்கு சென்றும் கஷ்டப்படுகிறார்கள். அதை விட பரிதாபமான விடயம் யாதெனில் அநாதரவான பெண்கள் தம்மையும் தமது குழந்தைகளையும் பசி என்ற அரக்கனிடம் இருந்து. காப்பாற்றுவதற்காக தமது மானத்தையும் விற்க முன்வருவதுதான்.

எமது நாட்டின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்த முன்வந்த பெண் களுக்கு இந்த கொடுமைநடக்கும் அதே சமயம் வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்த எம்மவர் ஆடம்பரத்தின் உச்சத்தில் வாழ்கை நடாத்துவதுதான் பொறுக்கமுடியாததாக உள்ளது!

மலைமுரசு வாரமலர் 25.04.2015 - 01.05.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23 'தாயும் தாரமும்.'

தெய்வங்கள் பல இருப்பினும் நாம் அவற்றை கண்களால் கண்டதில்லை.. அந்த தெய்வங்கள் அனைத்தையும் காட்டிலும் எம்மேல் அன்பும் பரிவும் பாசமும் பொழியும் ஒரே ஒரு தெய்வம் எம் கண்களால் நாம் நித்தம் தரிசித்துக்கொண்டிருக்கும் அன்னையே! 'அன்னையை போல் ஒரு தெய்வம் இல்லை என்றும்' 'ஆசைப்பட்ட எல்லாத்தையும் காசிருந்தால் வாங்கலாம் அம்மாவை வாங்கமுடியுமா? என்றும் பாடினாலும் சரி அம்மாவை பற்றி கவிதைகள் கட்டுரைகள் எழுதினாலும் சரி அவை எம்மை ஈர்த்து எமது நெஞ்சில் அழியா இடத்தை பிடித்துவிடுவதுண்டு.

'சினிமாவில்' கூட அம்மா 'சென்றிமென்ற்' (Sentiment) திரைப்படங்கள் நிறைய வெற்றியை ஈட்டித்தந்துள்ளன. எம்.ஜி.ஆர் சினிமாவில் நாயகனாக கொடிகட்டி பறந்துகொண்டிருந்த காலம் (1968). ஸ்ரீதர் என்ற பிரபல்யமான இயக்குனர் ரவிச்சந்திரன் என்ற இளைஞரை 'காதலிக்க நேரமில்லை' என்ற படத்தில் அறிமுகம் செய்தார். ரவிச்சந்திரனின் இளமை ரசிகர்களுக்கு அவர்மேல் பெரும் கவர்ச்சியை ஏற்படுத்தியது. ரவிச்சந்திரன் நடிப்பில் வெளியான 'குமரிப்பெண்' என்ற படம் பாட்டிலும் சரி சண்டைக்காட்சியிலும் சரி நடிப்பிலும் சரி பெரும் சாதனை புரிந்தது. எம்.ஜி.ஆர் தொலைந்தார் என்ற நிலை!.

அப் படத்திற்கு போட்டியாக எம்.ஜி.ஆர் நடிப்பில் வெளியான பிரமாண்டமான தயாரிப்பு தான் 'குடியிருந்த கோயில்'. இந்த படம் எம்.ஜி.ஆரின் புகழை மீண்டும் ஆணித்தரமாக நிலைநாட்டியது. ரவிச்சந்திரனுக்கு இளமை இருக்கலாம். ஆனால் எம்.ஜி.ஆரின் அம்மா 'சென்றிமென்றும்' நடிப்பும் பாடல் காட்சிகளும் , சண்டைக்காட்சிகளும் குடியிருந்த கோயில் படத்திற்கு பெரும் வெற்றியை அளித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் கூட இந்த இருபடங்களையும் இறுவட்டில் பதிந்து வீடியோவில் பார்த்தால் சொக்கிப்போவீர்கள்.

எந்த ஜீவராசிகளுக்கும் உயிர்கொடுப்பவள் அம்மா அல்லவா? அவள் எம்மை பாலூட்டி சீராட்டி வளர்ப்பதுடன். எம்மேல் அன்பும் பாசமும் பரிவும் பொழிகின்றாள். எம்மை வளர்த்து ஆளாக்குகின்றாள். எமது கல்வியில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றாள். எமது முன்னேற்றத்தில் ஆர்வமாக இருக்கின்றாள். எமது நன்மையிலும் தீமையிலும் எம்முடன் இருந்து எமக்கு ஆதரவு தருகின்றாள். நாம் பிணியால் வாடினால் அவள் உணவருந்தாமலும் கண் துயிலாமலும் இருந்து எம்மை பராமரிக்கின்றாள்.

சிறுவயது முதல் இருந்தே நாம் அவளின் அரவணைப்பிலும் தாலாட்டிலும் வளர்வதால் அந்த சூழலுக்கு நன்கு பழக்கப்பட்டு போகிறோம். அவளது மொழி எம்மை ஆக்கிரமிக்கின்றது. அவளது சமையலுக்கு நாம் விருப்புடையவராகின்றோம். எக்காலத்திலும் அம்மாவின் கையால் சாப்பிட்ட சாதத்தை மறக்கமுடியாதல்லவா?

அம்மா கூறிய அறிவுரைகள் எமது மனதில் ஆழபதிந்திருக்கும். அந்த கண்ணோட்டத்திலேயே நாம் உலகை நோக்குகின்றோம். 'திருடாதே..., பொய்சொல்தே..., பிச்சை எடுக்காதே...' என்று அவள் எமது விழிப்பிலும் தூக்கத்திலும் உச்சரித்த மந்திர சொற்கள் தான் எம்மை சபையில் முந்தியிருக்க வைக்கின்றது.

நாம் வளர்ந்து பெரியவர்களாகி பணம் சம்பாதிக்கும் நிலைக்கு வந்துவிட்ட பின்பும் எம்மேல் அவளுக்கு இருக்கும் அன்பில் சிறிது கூட மாற்றமேற்படாது. எமது வாழ்கையில் ஏற்பட கூடிய துன்ப துயரங்களுக்கும் நன்மைகளுக்கும் பொறுப்புடன் ஆலோசனை வழங்க கூடிய ஒரே ஒரு ஜீவன் இந்த உலகில் அம்மாதான்.

அடுத்த கட்டமாக நாம் திருமண வாழ்கையில் இணைந்து கொள்கையில் தாய் எம்மேல் காட்டிய அன்பு பாசம் பரிவிற்கு இணையான காதல் என்ற தெய்வீக உணர்வுடன் எம்மை வந்து சேர்கின்றாள் மனைவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயானவள் எமக்கு உயிர்கொடுத்தாள். எமது தாரமோ எங்களுக்கு ஒரு குழந்தையை பெற்றுத்தர முன்வந்திருக்கின்றாள். அந்த நினைப்பே அவளுக்கு குடும்பம் நடத்துவதில் பெரும் ஆர்வத்தை உண்டு பண்ணுகின்றது. தனது கணவனை மதிக்கின்றாள். அவனுக்கு வேண்டிய உதவிகளை செய்கின்றாள். அவன் விரும்பும் உணவுகளை சமைத்து பரிமாறுகின்றாள். அவனது விருப்பு வெறுப்புக்களை துருவி துருவி ஆராய்கின்றாள். அவனுக்கு வேண்டிய ஆடைகளை ஆயத்தம் செய்கின்றாள். சொல்லப்போனால் தாயின் அரவணைப்பில் வாழ்ந்த தனது கணவனுக்கு தன்னால் ஒரு குறையும் ஏற்படகூடாது என்று கண்ணும் கருத்துமாக இருக்கின்றாள்.

கணவனது உயர்ந்த குணம் அவளுக்கு இன்பம் ஊட்டுகின்றது. தற்செயலாக தவறான நண்பர்களுடன் தவறான வழியில் போனால் அவனது தாயின் ஸ்தானத்திற்கு அவள் மாறுகின்றாள். அவனை அன்பாலும் அரவணைப்பாலும் கண்டிப்பாலும் திருத்துகின்றாள்.

கணவனுடன் இணைந்து குடும்பத்தின் எதிர்காலத்திற்காக திட்டமிடுகின்றாள். கணவனுக்கு நோய் நொடி என்று வந்துவிட்டால், தவித்துவிடுகின்றாள்.

இப்போதெல்லாம் பல பெண்கள் கணவனுக்கு நிகராக தொழில்புரிகின்றார்கள். அப்படி தொழில் வாய்ப்பு பெறாத பெண்களும் கணவன் களைத்து வீடு திரும்புகையில் அவனுடைய களையை அகற்றி அவனுக்கு தென்பாக இருக்கின்றார்கள். வீட்டுபணிகளை முழுமையாக பொறுப்பெடுத்து செய்கின்றாகள். தமது பிள்ளைகளை சீராட்டி தாலாட்டி வளர்ப்பதுடன் அவர்களை கண்ணும் கருத்துமாக பாதுகாத்து ஆளாக்குகின்றார்கள்.

இனி அடுத்த கட்டத்திற்கு நகர்வோம்...

'தாரமும் குருவும் தலைவிதிப்படி' என்ற ஒரு முதுமொழி உண்டு. எமக்கு ஏதாவது ஒரு துன்பம் நேர்ந்தால்தானே நாம் அது எமது தலைவிதி என்று கூறி தலையில் அடித்துக்கொள்கின்றோம். அப்படியாயின் தாரத்தை ஏன் தலைவிதி என்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம்.... நாம் சிறுவயது முதலே அன்னையின் அரவணைப்பிலும் சூழலிலும் வளர்ந்தவர்கள். ஆனால் மனைவியானவள் வேறு சூழலிலும் வாழ்கை முறையிலும் வாழ்ந்து பின்னர் எம்முடன் வந்து இணைந்தவள். எனவே அவள் எம்முடன் முரண்படும் பல சந்தர்ப்பங்கள் உண்டு.

சாதாரணமாக ஒரு மனைவியானவள் புகுந்தவீட்டில் உள்ளவர்களை அனுசரித்து நடக்கவேண்டும். கணவனுடன் ஒத்துப்போக வேண்டும். அவனுக்கு கோபம் வரும் சந்தர்ப்பங்களில் பணிந்து செல்லவேண்டும். கணவனின் பெற்றோரை மதித்து நடக்கவேண்டும். இப்படியெல்லாம் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் இந்நாட்களில் இந்த நல்ல குணங்கள் சந்தேக கண்ணுடன் நோக்கப்பட்டு எதிர்மறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. படிப்படியாக மனைவி கணவனை மதியாத நிலை ஏற்படுகின்றது.

இப்போதெல்லாம் பெண்களும் கணவனுக்கு நிகராக தொழில் புரிகின்றார்கள். முன்னர் அவள் பணத்திற்காக கணவன் கையை எதிர்பார்க்கவேண்டியிருந்தது. இப்போ அவளுக்கென்று தனி வருமானம் வருவதால் தான் நினைத்ததை நினைத்தபடி வாங்கவும் காரியங்களை நிறைவேற்றவும் வல்லமை படைத்தவளாகிவிட்டாள். அது அவளுக்கு திமிரை கொடுக்கின்றது. தொழில் இல்லாத பெண் களும் அவர்களை தாமும் பின்பற்றுகின்றார்கள். நீண்டகாலமாகவே எமது சமூகம் ஆண்கள் தலைமை தாங்கும் குடும்பமாக பழக்கப்பட்டிருந்தது. அவனுக்கு மனைவிமேல் ஒரு கட்டுப்பாடு இருந்தது.

முன்னர் என்றால் கணவர் குழந்தைகள் என்றுவிட்டால் மனைவிக்கு வேறு உலகம் இல்லை. இப்போ அப்படியல்ல. பெண்களின் உலகம் விரிந்துவிட்டது. 'உனக்கு பிடிக்கவில்லையா? விவாகரத்து கோரு. நான் கொடுக்கிறேன்' என்று கூறுமளவிற்கு நாகரீகம் வளர்ந்து விட்டது.

என்னதான் பெண்ணியம் பேசினாலும் மனைவி என்ற அந்த உன்னத ஸ்தானத்திற்கு உருக்கொடுக்கவேண்டியவள் பெண்தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பெண்கள் பிற நாடுகளில் தமது கணவன்மாரிடம் இருந்து எடுத்துக்கொள்ளும் சுதந்திரம் பற்றி கூற நாவு கூசுகின்றது. அவை பற்றி எண்ணுகையில் அன்னை என்ற உயர்ந்த ஸ்தானத்தில் போற்றப்படும் பெண் மதிப்புக்கும் காதலுக்குமுரிய மனைவி என்ற ஸ்தானத்திலிருந்து தூரவிலகிசெல்கின்றாளோ என்ற ஐயமும் கவலையும் தான் மனதில் எஞ்சி நிற்கின்றது!

மலைமுரசு வாரமலர் 28.02.2015 - 06.03.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24 'திட்டமிடப்பட்ட வாழ்க்கை அமையாமை'

இளமைப் பருவத்தை எய்தும் அனேகம் பேருக்கு தமது வாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டும் என்ற ஒரு திட்டம் கட்டாயமாகவே இருக்க செய்யும். அவர்களுடைய நோக்கத்திற்கு முன்னுதாரணமாக பல சரித்திர புருஷர்கள் அவர்களது மனதை கவர்ந்து இருப்பர். சமயத்திற்கு தொண்டாற்றியவர்களில் ஆதிசங்கரர் , இராமகிருஷ்ணர், விவேகானந்தர் போன்றோர் சிறந்த முன்னோடிகளாக குறிப்பிடக் கூடியவர்கள். அதே போன்று மக்கள் அனைவரையும் சமம் என்று கருதி அரசியல் செய்தவர்களில் ஆபிரகாம் லிங்கன், ஜோன் எவ்.கென்னடி போன்றோர் முன்னணியில் நிற்கின்றனர். மக்கள் தொண்டில், மகாத்மாகாந்தி மற்றும் நோபல் பரிசையே தட்டிக்கொண்ட அன்னை தெரேசா போன்றோர் அனைவரது இதயத்தையும் கவர்ந்து நிற்கின்றனர். விஞ்ஞானம் உட்பட எந்த துறையை எடுத்தாலும் அவ்வத் துறைகளில் சாதனை புரிந்த பல சரித்திர புருஷர்களை நாம் சந்தித்திருக்கின்றோம்.

அண்மையில் காலமான இந்தியாவின் முன்னாள் குடியரசுத்தலைவர் அப்துல்கலாம் பாரத மக்கள் மத்தியில் மட்டுமன்றி உலக மக்கள் அனைவர் மத்தியிலும் பெரும் மதிப்பை பெற்றிருந்தார். கனவு காணுங்கள் அது நனவாகும் என்று முழங்கி வாழ்வை திட்டமிட்டு அமைத்து அதி உயர் நிலைக்கு வந்தார்.

''கஷ்டம் வரும்போது... கண்ணை மூடாதே அது உன்னை... கொன்றுவிடும்... கண்ணை திறந்து பார்.... நீ அதை கொன்று விடுவாய்'' என்று கூறி சாதனை படைத்த நாயகன் அவர்.

நாம் என்னதான் பெரும் கனவுகளைக் கண்டு அவற்றை நனவாக்க விழைந்தாலும் எம்மில் சிலரே வெற்றி என்ற இலக்கை அடைகின்றார்கள். வாழ்க்கையில் நாம் வெற்றியை சுவீகரித்துக் கொள்ள வேண்டுமாயின் நாம் உண்மை, நேர்மை, சத்தியம் ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்புகளுக்கு சொந்தகாரர்களாக இருக்க வேண்டும். நாம் நிர்வாகம் உட்பட எந்த துறையில் ஈடுபடுபவர்களாக இருந்தாலும் சரி மத்தியட்சம் மிக மிக முக்கியமான ஒரு அம்சமாகும். நாம் நடுவு நிலமையுடன் செயற்படுபவர்களாக இருந்தால்தான் மக்கள் எம்மை நாடி வருவார்கள். விருப்பு வெறுப்பற்ற முறையில் உறுதியானதும் தீர்க்கமானதுமான முடிவை எடுப்பவர் என்று எம்மைப் பற்றி விதந்துரைப்பர்.

எம்மிடம் நேர்மை இருக்கின்றதா என்று மற்றவர்கள் அவதானிப்பர். பணம், பொருள் போன்ற விடயங்களில் மட்டுமல்ல. எமது எண்ணங்களிலும் நடத்தையிலும் கூட கட்டாயமாக நேர்மை இருக்க வேண்டும். பிறருடன் அன்பாக பழக வேண்டும். அவர்களை மதிக்க வேண்டும். ஒருவரது முகத்திற்கு முன்பாக அவரை புகழ்ந்து விட்டு அவர் இல்லாத போது பிறருக்கு அவரைப்பற்றி தூற்றி கதைக்க முற்படக் கூடாது.

நாம் எம்மை எவ்வளவு நற்பண்பு உடையவராக உயர்த்திக் கொண்டாலும் நாம் விடும் தவறு மற்றவர்கள் எம்மைப்பற்றி தவறாக கதைக்க இடம் கொடுத்துவிடும்.

சில அலுவலர்கள் அனுபவம் போதாமை காரணமாகவோ அந்நேர பணத்தட்டுப்பாடு காரணமாகவோ சில சமயங்களில் இலஞ்சம் வாங்கியிருந்தால் அவரது சேவைக்காலம் முழுவதுமே அந்த பழி அவருக்கு நீடிக்கும்.

எமது எதிர்கால முன்னேற்றத்திற்காக நாம் தெரிவுசெய்யும் துறை எமது ஆற்றலுக்கும் பண்புக்கும் பொருத்தமானதாக இருக்க வேண்டி யதை நாம்தான் உறுதிசெய்து கொள்ள வேண்டும். ஒரு விஞ்ஞானி யாக பிரகாசிக்கக் கூடியவர் வியாபாரத்தில் ஈடுபட்டால் எப்படி இருக்கும்? ஆதாயத்தை நோக்கமாக கொண்ட ஒரு வைரவியாபாரி யாக பிரகாசிக்ககூடியவர் அரசியலில் ஈடுபட்டால் எப்படி இருக்கும்? பல அரசியல்வாதிகள் சந்தர்ப்ப வசத்தால் அப்படி ஆவதால்தான் அரசியல் என்ற களம் மக்கள் நலனை நோக்கமாகக் கொண்டிருக் காமல் சுயநலத்தை நோக்கமாக கொண்டிருக்கின்றது. அவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையும் திட்டமிட்டபடி அமையாமல் மக்களின் பழியை சுமக்க வேண்டியதாக அமைந்து போகின்றது.

இன்னும் சொல்லப்போனால் அனேகமான பெற்றோருக்கு தம் பிள்ளைகளுக்கு பொருத்தமான கற்கை நெறி எது என்று தெரியாது. ஆனால் தமது பிள்ளைகள் மருத்துவர்களாகவோ பொறியியலாளரா கவோ வரவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருப்பர். சந்தர்ப்பம் நன்றாக அமைந்தால் அந்தப்பிள்ளை எதிர்நோக்கும் நிலைக்கு வந்து விடமுடியும். தவறினால் இரண்டும் கெட்டான் நிலைதான்! எனவே பெற்றோர் தமது பிள்ளையினது ஆசிரியரின் ஆலோசனையை முதலில் நாடவேண்டும். அவர்தான் பிள்ளையின் திறமை பற்றி நன்கு அறிந்திருக்கக் கூடியவர். சட்டத்துறையில் பலர் நாட்டம் காட்டுவதில்லை. ஆனால் பிரச்சனைகள் நிறைந்த இந்த உலகில் ஒரு சட்டத்தரணியின் தேவை அளப்பரியது. ஒரு மருத்துவராக இருந்து நாடி பிடித்துப் பார்த்துக் கொண்டிருப்பதை விட மாணவனுக்கு சட்டத்துறையில் நாட்டம் இருந்து அவன் சட்டத்தரணியாக வந்துவிட்டால் அவன் மக்கள் மத்தியில் மிகுந்த மதிப்புடனும் பிரகாசத்துடனும் வாழமுடியும்.

கணக்கியல், வர்த்தகம், தகவல் தொழில்நுட்பம், Software Engineering. ஹோட்டல் முகாமைத்துவம் போன்ற பல கற்கை நெறிகள் இன்று பிரபல்யம் அடைந்து வருகின்றன. ஒரு மாணவன் தனது தகுதியறிந்து சரியான துறையில் காலடி எடுத்து வைத்தால் நிச்சயம் அவன் திட்டமிட்ட படி அவனது எதிர்காலம் சோபிக்கும்.

பலர் கலைத்துறையை நாடுவதில்லை. ஆனால் கலைத்துறையில் பட்டபடிப்பை முடித்த பலர் செயலாளர்களாகவும் அரச உயர்பதவிகளிலும் உள்ளனர். இலங்கை நிருவாக சேவை (திறந்தபோட்டி) பரீட்சையை கலைத்துறைப் பட்டதாரிகளும் எழுத முடியும்.அப்படி எழுதி சித்திபெற்றுவிட்டால் சந்தர்ப்பம் வாய்க்குமாயின் அரசாங்க அதிபராக உயரக் கூட வாய்ப்பு உண்டு.

இது எதனை உணர்த்துகின்ற தென்றால் எந்த துறையும் நல்ல துறைகளே. ஆனால் எமக்கு அந்த துறையில் நாட்டமும் திறமையும் இருக்க வேண்டியதே அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, திட்டமிட்டபடி வாழ்க்கை அமையாமைக்கு பல புறக்காரணிகளும் இருப்பதை அவதானிக்கலாம். எமது முயற்சிகளில் அடுத்தடுத்து ஏற்படும் தோல்விகள் எம்மைச் சோர்வுறச் செய்து எமது வாழ்கையை சீரழித்துவிடும். தோல்வியே வெற்றியின் முதல்படி என்று பேச்சுக்கு சொல்வதெல்லாம் யதார்த்தமாக மாட்டாது. தோல்வி எமது மன ஓர்மத்துக்கு பாரிய அடியாக விழுந்துவிடுகின்றது. அது எமக்கு உற்சாகத்தை அழித்துவிடுகின்றது. எனவே நாம் விழிப்புடன் இருந்து எமது முயற்சிகளில் எப்போதும் வெற்றியையே பெறவேண்டும்.

வாழ்க்கையில் நாம் சிறப்பதற்கு எமக்கு திட்டமிடப்பட்ட வருமானம் அவசியம். அது தொழில்நிமித்தமாகவோ முதலீடு நிமித்தமாகவோ இருக்கலாம். அதே சமயம் தொழில் முதலீடு இரண்டுமே பாதிப்புறாதபடி நாம் அவதானமாக இருக்க வேண்டும். அரச தொழில் மட்டுமன்றி , தனியார் தொழில்களிலும் போட்டிகள் பொறாமைகள். நிறையவே இருக்கும். எம்மை பின் தள்ளிவிட்டு முன்செல்ல முயற்சிப் பதற்கென ஒரு கூட்டமே தயார் நிலையில் இருக்கும். அதே போன்று இந் நாட்களில் முதலீடு என்பது அபாயத்திற்கேதுவானதாகவே (RISK) அவதானிக்கப்படுகின்றது. மத்திய வங்கியில் பதிவு செய்யப்படாத பல 'கம்பனிகள்' மக்களிடமிருந்து முதலீடுகளை பெற்று சில காலத்தில் வங்குரோத்து நிலைக்கு ( Bankrupt ) சென்றுவிடுகின்றன. மத்தியவங்கியில் பதிவுசெய்யப்பட்ட 'கம்பனிகள்' பலவும் கூட நஷ்டத்தில் ஓடுகின்றன. ரூபா இருபது முகப்புபெறுமதி கொண்ட பங்குகள் சந்தையில் நான்கு ரூபாவுக்கு கீழும் இறங்கி விடுகின்றது. இப்படியான கம்பனிகளில் நீங்கள் ஒரு இலட்சம் பெறுமதியான பங்குகளை வாங்கியிருந்தால் இன்று அப்பங்குகளை விற்று பெறக்கூடிய பணம் ரூபா இருபதாயிரம் மட்டுமே! பணம் அல்லது வருவாய் இல்லாது போனால் திட்டமிட்டபடி எமது வாழ்க்கை அமையாது என்பதை கூறவேண்டியதில்லை.

மனித நேயத்தைப் போன்ற சிறந்த பண்பு எதுவும் இல்லை. பிறருடைய கருத்துக்களை ஏற்கும் பக்குவம் மிக மிக அவசியம். நல்ல நட்பும் சரியான வழிகாட்டலும் சிறந்த காப்புறுதி போன்றவை.

மலைமுரசு வாரமலர் 08.08.2015 - 14.08.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 பணக் கொடுக்கல் வாங்கல்

உலகில் யாருக்குத்தான் பணத்தட்டுப்பாடு இல்லை? மிகவும் வசதி படைத்தவர்கள் முதல் அடிப்படை வசதிகளும் அற்றவர்கள் வரை பணத் தேவை இருக்கத்தான் செய்கின்றது.

அந்த பிரச்சனையை தீர்ப்பதற்கு மனித குலம் கண்டு பிடித்த ஒரே தீர்வு பணக் கொடுக்கல் வாங்கல் தான். இருப்பவர்கள் இல்லாதவர்களுக்கு அவர்களது தேவையை முன்னிட்டு பணம் கொடுப்பதும் அதை ஒரு தவணையில் திரும்ப பெறுவதும் எம் கண்முன்பாக நடைமுறையில் உள்ளது.

வேலையில்லா பிரச்சனை, விலைவாசி உயர்வு, நாட்டின் பொருளாதார வீழ்ச்சி ஆகியன மக்களின் ஏழ்மை நிலைக்கு காரணமாக உள்ளன. எவராவது தமது வருவாய்க்கும், சக்திக்கும் அப்பாற்பட்ட வகையில் செலவுகளை செய்ய முற்படுவார்களா? இல்லை. சந்தர்ப்பம் சூழ்நிலைகள் தான் அவர்களை அந்த நிலைக்கு தள்ளிவிடுகின்றது.

எவரும் தாம் கஷ்டப்படுவதை மற்றவர்களுக்கு மறைத்து மானத்துடன் வாழவே விரும்புவர்.

சில குடும்ப தலைவிகள் வீட்டில் உப்பு இல்லாவிட்டாலும் கூட அயல் வீட்டுக்கு காட்டிக் கொள்ளாமல் தமது கஷ்டத்தை தம்முடனேயே வைத்துக் கொள்வர். தமது குடும்ப வருமானத்திற்கு ஏற்ப செலவுகளை வரையறுத்துக் கொள்வர். இன்னும் சொல்லப்போனால் தமது எதிர்காலத்துக்கென ஒரு சேமிப்பையும் ஏற்படுத்திக்கொண்டு தம் கண்முன்னே கஷ்டப்படுபவர்களுக்கு பண உதவியும் செய்வர்.

வசதியான நிலையில் உள்ள சிலர் மற்றவர்கள் தமது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய இயலாதநிலையில் பணத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்டப்படும் போது சிறிய வட்டியை பெற்றுக்கொண்டு பண உதவி செய்வர்.

சமூகத்தில் வதிவிட வசதி அத்தியாவசியம் என கருதப்படுகிறது. ஒரு பெண்ணின் மண வாழ்க்கையை அமைக்க பெருந்தொகை பணம் அவசியமாகின்றது. பிள்ளைகளின் கல்விக்கும் உடைக்கும் பணம் அவசியமாகின்றது. குடும்ப வருமானத்தை அதிகரிக்க ஏதாவது தொழில்துறை என்று ஆரம்பிக்க முதலீடு அவசியமாக இருக்கின்றது.

இந் நாட்களில் வங்கிகளும் நிதி நிறுவனங்களும் மக்களுக்கு அவசியமான பணத்தை சிறு வட்டிக்கு கொடுத்து அவர்களுக்கு கை கொடுக்க ஆயத்தமாக உள்ளன.

ஒரு குடும்பத்தின் வருமானத்தைப் பொறுத்து இலட்சக்கணக்கில் கூட வீட்டுக்கடனை அவை வழங்குகின்றன.

நிறுவனங்கள் 'லீசிங்' முறையில் 'ஆட்டோ', 'வான்', 'ரிப்பர்', 'லொறி' போன்ற வருவாயை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய வாகனங்களை பெற்றுக்கொடுக்கின்றது. அது பலரின் சுயதொழில் வாய்ப்புக்கு வழி வகுக்கின்றது. இளைஞர்கள் வீட்டில் முடங்கிக் கிடக்காமல் சுறு சுறுப்புடன் இயங்குவதற்கு 'லீசிங்' முறை வழிவகுக்கின்றது.

தவிர வியாபார மற்றும் தொழில் ஸ்தாபனங்களை மேம்படுத்தவும் நிறுவனங்கள் தனியாருக்கு கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றன.

இந் நாட்களில் பல வங்கிகளும் நிதி நிறுவனங்களும் மக்களை நேரில் சந்தித்து குடிசைக் கைத்தொழில், வியாபாரம், விவசாயம், கோழி வளர்த்தல், கால் நடைகளை வளர்த்தல் போன்ற முயற்சி களில் அவர்களை ஈடுபடுத்துவதுடன் பண உதவியும் ஆலோசனையும் வழங்குகின்றன. யுத்த காலத்தில் அரச சார்பற்ற நிறுவனங்கள் இப்படியான ஒத்துழைப்புக்களை மக்களுக்கு இலவசமாக செய்திருந்தாலும் இப்போ அவை செயல் இழந்துள்ளன.

அரச, தனியார்துறை, ஊழியர்களுக்கு வங்கிகளும் நிதிநிறுவனங் களும் பணத்தை குறைந்த வட்டியில் கடனாக வழங்குகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுவளமாக வங்கிகளும் நிதி நிறுவனங்களும் மக்களுக்கு தமது பங்குகளை விற்பதன் மூலம் தமது வியாபாரத்துக்கான முதலீட்டை பெற்றுக்கொள்கின்றன.

சரி....... இதுவரையும் பணம் கொடுத்தல் பற்றி ஆராய்ந்தோம். இனி கொடுத்த பணத்தை எவ்வாறு வாங்குவது..... அறவிடுவது..... அது முடிந்த காரியமா என பார்ப்போம்.

இந் நாட்களில் நட்புக்காகவும் உறவின் அடிப்படையிலும் வாக்கு நாணயத்தில் பண உதவி செய்பவர்கள் அப் பணத்தை மீளப்பெறு வதில் சிக்கல்களுக்கு முகம் கொடுக்கின்றனர். உண்மையில் உதவி செய்யப்போய் உபத்திரவத்துக்கு உள்ளாக நேரிடும்! உண்மையில் உறவுகளுக்கு மத்தியிலேயே பணக்கொடுக்கல்வாங்கலில் சீரான தன்மை இல்லாது இருக்கின்றது.

பணக்கொடுக்கல் வாங்கல் என்பது நிச்சயமாக சிக்கலான ஒரு விடயமேயாகும்!

அதனால் தான் பணத்தை கொடுப்பவர்கள் பொறுப்பு கேட்கின்றார்கள். நகை, காணி போன்றவற்றிற்கு மக்கள் நம்பி பணம் கொடுக்கிறார்கள். பணத்தை வசூலிப்பதில் பிரச்சனை ஏற்படும் பட்சத்தில் நகை, காணி ஆகியவற்றை சுவீகரித்து கொள்ள முடியுமல்லவா?

இந்த தந்திரத்தை வங்கிகளும் நிதி நிறுவனங்களும் கூட பின்பற்று கின்றன.

நிறுவனங்கள் 'லீசிங்' முறையில் வாகன கொள்வனவுக்கு பணம் கொடுக்கும் போது வாகனங்களை தமது நிறுவனத்தின் பெயரிலேயே பதிவு செய்கின்றன. பணம் பெற்றவர் தவணை தவறாமல் கட்டுப்பண த்தை செலுத்த தவறினால் தொடரும் மாதத்திற்கான கட்டணத்தையும் சேர்த்து செலுத்த வேண்டும். தவணைப்பணம் தொடர்ந்து கட்டுப்படாத சந்தர்ப்பத்தில் நிறுவனம் வாகனத்தை கைப்பற்றி ஏலத்தில் விற்று விடும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச, தனியார், வங்கி ஊழியர்களுக்கு கொடுக்கப்படும் கடன் அவர்களது சம்பளத்தில் அறவிடப்படும்.

நிறுவனங்களின் பங்குகளை வாங்குவதற்கு மக்கள் முதலீடு செய்த பணம் Central Depository System ல் பங்குகளாக பதியப்பட்டு வாடிக்கையாளரின் பெயரில் கணக்கு ஒன்று திறக்கப்படும்.

வாடிக்கையாளர் நிறுவனங்களின் நடப்பு சந்தைப் பெறுமதியை அவதானித்து பங்குகளை இலாபம் தரும் நிறுவனங்களுக்கு மாற்ற முடியும். பெறுமதி அதிகரித்திருக்கையில் பங்குகளை விற்று பணமாக்கவும் முடியும்.

பங்கொன்றின் முகப்பு பெறுமதி ரூபா 10/= அல்லது பெறுமதி ரூபா 20/= ஆக இருக்கையில் சந்தைப்பெறுமதி நிறுவனத்தின் இலாபமீட்டலை பொறுத்து சில சமயம் உயரும் அல்லது வீழ்ச்சியடையும். பங்குதாரர் தமக்கு ஆதாயம் கிட்டும் வகையில் அவ்வப்போது முடிவுகளை எடுத்து செயற்படவேண்டும்.

இருவருக்கிடையேயான வாக்கு நாணயம் பிறழாத உண்மையானதும் நேர்மையானதுமான கொடுக்கல் வாங்கல் எப்படி பயன்தரும் என்பதை ஒரு உண்மையான அனுபவ பகிர்வு மூலம் பார்ப்போம்.....

நான் வாடகை வீட்டில் வசிக்கவேண்டிய ஒரு காலகட்டம் இருந்தது. 1999ல் நான் குடியிருந்த வாடகை வீட்டு உரிமையாளர் 'பொலிஸில்' முறைப்பாடு செய்யுமளவுக்கு போய் வீட்டை விடும்படி நிர்ப்பந்தித்தார். அப்போது நான் மாகாணதிறைசேரியில் பணிபுரிந்து கொண்டிருந்தேன். எனது கஷ்டத்தை புரிந்து கொண்ட மேலதிகாரிகள் ஐந்து வருட வீட்டுக்கடனை வழங்க முன்வந்தனர். அது சுமார் 5½ இலட்சம் ரூபாவாகும். திறைசேரி வீட்டு கடனை வழங்குவதற்கு சில சட்ட விதிகளை பின்பற்ற வேண்டியிருந்ததால் கொடுப்பனவில் காலதாமதம் இருந்தது.......

அந் நேரம் எனது நண்பரும் கணக்காளருமான திரு.இராஜகுல வீரசிங்கம் திறைசேரியில் பாதீட்டுக்கு பொறுப்பாக இருந்தார். எனது நிலையை அவதானித்த அவர் தானே முன் வந்து வங்கியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கிருந்த நிரந்தர வைப்புக்களுக்கெதிராக முற்பணம் எடுத்து...... 'காந்தி..... உடனே வீட்டைக்கட்டு' என்று கூறி பண உதவி செய்தார்.

வீடும் இரண்டரை மாத காலத்தில் கட்டி முடிக்கப்பட்டது. திறைசேரிக் கடன் கிடைக்கப்பெற்றதும் நானும் நண்பரின் கடனை அடைத்தேன்! உண்மையில் பணக்கொடுக்கல்வாங்கல் என்பது. கடன் பெறுபவருக்கு அதன் தேவை மிக மிக அத்தியாவசியமாக இருக்க வேண்டும். அதே நேரம் கடன் வழங்குபவர் அந்த தேவையை சரியாக உணர்ந்து கொண்டும் கடன் பெறுபவரின் நாணயத்தை புரிந்து கொண்டும் கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ளவேண்டும்.

மலைமுரசு வாரமலர் 14.03.2015 - 20.03.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26 பிரச்சனைகளும் இலட்சியங்களும்.

எமது நாளாந்த வாழ்க்கை முறையை சுமூகமாக எடுத்துச்செல்ல இயலாதவாறு தடைபோடவல்ல சவால்களைத்தான் நாம் பிரச்சனைகள் என்று கருதுகின்றோம். ஒவ்வொருவருக்கும் வெவ்வேறுபட்ட சவால்கள் இருக்கின்றன. ஒரு குடும்பஸ்தன் எதிர்கொள்ளும் சவால்கள் வேறு...... ஒரு அரசியல்வாதி..... ஒரு உத்தியோகத்தன்..... ஒரு மாணவன்.... என்று ஒவ்வொருவரும் எதிர்கொள்ளும் சவால்கள் வேறு வேறானவை!

அப்படிப்பட்ட சவால்கள் அல்லது பிரச்சனைகள் வெவ்வேறு வகைப் பட்டனவாகவும் அமையும்.

நன்றாக ஓடிக்கொண்டிருக்கும் ஒரு வியாபார தலம் திடீரென நட்டத்துக்கு அல்லது வேறு பாதிப்புக்களுக்கு உள்ளாகல்.... ஏதாவது ஒரு காரணத்தால் நாம் செய்து வந்த தொழிலை இழத்தல்.... எம்மேல் அன்பு பாராட்டி எமக்கு உதவிகள் புரிந்து வந்த நபர்களின் பிரிவு அல்லது உயிர் இழப்பு..... காரணமில்லாமல் எதிரிகள் தோன்றல்..... அரசியல் பகை...!

இப்படிப்பட்ட பிரச்சனைகளுக்கு இலகுவில் ஆளாகி தமது வாழ்க்கையை தொலைப்பவர்கள் பெரும்பாலும் அறிவற்றவர் களாகவும், உடல் பலவீனமானவர்களாகவும் திட சிந்தனை அற்றவர் களாகவும் உறுதியான செயற்பாடு குன்றியவர்களாகவும் இருப்பார்கள். பிரச்சனைகள் சிறியனவாக இருந்தாலும் கூட அவை இலகுவில் அவர்களை ஓரம் கட்டி வாழ்க்கைக் கடலில் மூழ்கடித்துவிடும்!

ஆனால் மலையத்தனை பிரச்சனைகளை எதிர்கொள்ள நேர்ந்தாலும் அவற்றிற்கு சமாதிகட்டி விட்டு ஒன்றும் அறியாதவர்கள் போல் செல்லும் ஜாம்பவான்களும் நம் மத்தியில் இருக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை..... சத்தியம்.... திடசங்கற்பம்.... மதிநுட்பம்.... நல்நடத்தை.... உடற்பலன் ஆகிய தராதரங்களைக் கொண்டவர்களே அந்த வெற்றியாளர்கள்.

பிரச்சனைகளோடு இணைந்து கைகோர்த்து நடந்து உரிய நேரத்தில் அவற்றை ஆழியில் புதைத்துவிட்டு செல்ல அவர்களால் முடிகின்றது!

சரி..... இப்போ பார்ப்போம்.... நாம் பிரச்சனைகளை எதிர்கொள்ள முடியாத நலிவுற்றவர்களாக இருக்க வேண்டுமா...? அல்லது பிரச்சனைகளுக்கு முடிவு கட்டக்கூடிய வெற்றியாளர்களாக இருக்க வேண்டுமா?

நிச்சயமாக நீங்கள் இரண்டாவது தெரிவைத்தான் விரும்புவீர்கள்...!

ஏனென்றால் அடிப்படையில் நீங்கள் ஒவ்வொருவருமே மனத்தாலும் புத்தியாலும் சித்தத்தாலும் உயர்ந்தவர்கள். ஆன்மா என்கின்ற அதீத சக்தி உங்களுக்குள் விழிப்புடன் இருகின்றதென்பதை நம்புங்கள்!

இப்போ நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ஒரு உறுதியான தீர்மானத்துக்கு வருவதே...!

எமக்கென நாம் உயர்ந்த இலட்சியங்களை வகுத்துக்கொள்ள வேண்டும். அந்த இலட்சியத்தை நோக்கிய பாதையில் உண்மை சத்தியம் நேர்மை ஆகிய நெறிகளில் நின்று வீறுநடை பயில வேண்டும். அப்போது எமக்குள்ளாக ஒரு மனோபலம் உண்டாகும். அது காரிய சித்திக்க வழிவகுக்கும். இலட்சியத்தை நோக்கிய எமது முயற்சிகளுக்கு வெற்றி கிட்டும் போது எமது எண்ணத்தில் மகிழ்ச்சி உண்டாகின்றது.....

எமது இலட்சியம் எமக்கு மட்டுமன்றி எம்மைச் சார்ந்தவர்களுக்கும் நன்மை பயக்குமாதலால் அவர்களுடைய பேராதரவு எங்களுக்கு கிட்டும்.

பிரச்சனைகளை நீங்கள் கைதட்டி அழைத்தாலும் அவை உங்களைக் கண்டு அஞ்சும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சியத்துக்காக வாழந்த மனிதர்களை சரித்திரம் ஒரு போதும் மறப்பதில்லை.

கிரேக்க வேதாந்த ஞானி சாக்ரெடிஸ், யேசுநாதர், ஆபிரகாம் லிங்கன், ஆபிரிக்க அமெரிக்கர் விடுதலை பிதா மார்டின் லூதர் கிங், அகண்ட பாரதத்தின் தேசிய தலைவர் மஹாத்மாகாந்தி.... இவர்கள் அனைவருமே பல்வேறுபட்ட பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்தும் தமது இலட்சியத்திலிருந்து சிறிதளவும் நழுவாது வாழ்ந்த தலைவர்கள். இவர்கள் அத்தனை பேருமே கொலை செய்யப் பட்டார்கள். மரணத்துக்குப் பின்னரும் அவர்களது இலட்சியமும் புகழும் பேசப்பட்டன.

மஹாத்மா காந்தியின் மரணச் செய்தியைக் கேட்டு அமெரிக்க ஜனாதிபதி ஹாரி ட்ருமன் 'அகில உலகும் இந்தியாவுடன் சேர்ந்து வருந்துகின்றது' என்ற செய்தியை அனுப்பியிருந்தார். காந்தியின் முதற் போர்க்களமாகிய தென்னாபிரிக்காவிலிருந்து அவரை வெறுத்த தளபதி ஜான் ஸ்மட், 'நம்முடன் இருந்த இளவரசர் பிரிந்து விட்டார்' என்ற புகழுரையை அனுப்பியிருந்தார். இத்தாலியில் வாட்டிகன் போப்பாண்டவர் பையஸ் VII தனது இரங்கல் மொழியில் 'கிறிஸ்தவ மதத்தின் நண்பர், சமாதானத்தின் சீடர் ஒருவர் மறைந்தார்' என்று எழுதியிருந்தார். சீனாவும், இந்தோனேசியாவும் 'ஆசிய விடுதலையின் முதல் மூலகர்த்தா மாண்டார்' என்று கூறி அதிர்ச்சி யடைந்தன!

இத் தலைவர்கள் தாம் எதிர் கொண்ட பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்த விதத்தில்தான் அவர்களது வெற்றி தங்கியுள்ளது. பாரத பிரதமர் இந்திரகாந்தியும் ராஜீவ்காந்தியும் கூட கொலை செய்யப்பட்ட தலைவர்கள் பட்டியலில் இருக்கிறார்கள். அவர்கள் பற்றி பேசப்படுவதில்லையே!

எனவே எமது வாழ்க்கையின் வெற்றி பிரச்சனைகளுக்கு நாம் முகம் கொடுக்கும் விதத்திலேயே தங்கியிருக்கின்றது!

மலைமுரசு வாரமலர் 02.08.2014 - 08.08.2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27 விமர்சனங்களும் விமோசனங்களும்.

'கிரிட்டிசம்' (Criticism) என்ற ஆங்கில பெயர்ச் சொல்லுக்கு தமிழில் பெரும்பாலும் வழக்கில் உள்ள பதம் ' விமர்சனம்' ஆகும் அது சுட்டும் பொருள் கண்டனம், குணா குணங்களை ஆராய்தல் என்பதாக அமைகின்றது. விமர்சனம் என்ற சொல் சுட்டாத நபர்களோ செயல்களோ பொருள்களோ இல்லை எனலாம். எந்த ஆபத்துக்களிலிருந்தும் தப்பலாம். விமர்சனம் என்ற சொற் கணையிலிருந்து தப்புவது அரிதிலும் அரிது. பல அரசியல்வாதிகள் முதல் நடிகர்கள் வரை விமர்சனத்தால் உயர்ந்தும் இருக்கின்றார்கள். வீழ்ந்தும் இருக்கின்றார்கள். பல பாவலர்கள் இயற்கை அழகையும் பாவைகள் எழிலையும் வர்ணித்து விமர்சனத்திற்குட்பட்டுள்ளார்கள். கம்பரின் கற்பனையை விமர்சிக்காத இலக்கியவாதிகள் எவராவது இருக்ககூடுமா? பாரதியாரின் பாடல்களில் சொக்கி பாராட்டுக்களையும் விமர்சனங்களையும் குவிக்காத புலவர்களும் மக்களும் உண்டா? கம்பரையும் பாரதியையும் நோக்குகையில் அவர்களது படைப்புக்கள் விமர்சனத்துக்கு உட்படுத்தப்படுவது சரியா என்ற சிந்தனை பலரிடம் தோன்றியுள்ளது. இன்னும் சொல்லப் போனால் இலக்கியமும் கலையும் திறமைகளால் மெருகூட்டப்பட்டவை. அவற்றை விமர்சன நோக்கில் பார்க்க கூடாது. அவற்றின் திறனை அவை வெளிப்படுத்தும் உயரிய கலை அம்சங்களை திறனாய்ந்து சொல்லவேண்டும். அதனால் தான் 'திறனாய்வு' ' திறனாய்வாளர்கள்' என்ற சொற்கள் புதிதாக நடைமுறைக்கு வந்துள்ளன. திறனாய்வாளர்களுக்கு பெரும் தகுதிகள் இருக்கவேண்டும். விமர்சகர்களுக்கு எதுவும் கட்டாயம் இல்லை. மனத்தைரியம் இருந்தால் எவரையும் எந்த செய்கையையும் எந்த படைப்புக்களையும் விமர்சிக்க முடியும்.

சரி இனி விமர்சனத்திற்கே திரும்புவோம். அதன் பிரதான பணி குற்றம் குறைகளை குணா குணங்களை அறிந்து சொல்லல் ஆகும். ஒரு வெண்பலகையில் கறுப்பு புள்ளி இருந்தால் விமர்சகர்களின் கண்ணுக்கு முதலில் புலப்படுவது அந்த கறுப்பு புள்ளிதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் விமர்சகர்களை எடுத்துக்கொள்வோம். பலருக்கு 'சரிதான் போலும்' என்று தோன்றும் அரசியல் நடவடிக்கைகள் அவர்களுக்கு தவறு என்று தெட்டத்தெளிவாக தோன்றும். அவர்கள் தமது நிலைப்பாடு பற்றி மிகத்துல்லியமான விவாதங்களை முன்வைப்பர். கடந்தகால நிகழ்வுகளை சாட்சியாக சமர்ப்பிப்பர். எதிர்காலத்தில் நடக்கபோவன பற்றி துல்லியமாக கணிப்பிட்டு சொல்லுவர். அவர்கள் அறிந்ததெல்லாம் நாளாந்த அரசியல் நடப்புக்கள் தான். எந்த அரசியல் கட்சி என்ன கொள்கை அடிப்படையில் இயங்குகின்றது. மக்களுக்காக உழைக்கும் அரசியல் வாதிகள் யார்? சுய இலாபத்திற் காக சம்பாதிக்கும் அரசியல் வாதிகள் யார்? என்ற விபரங்களெல்லாம் அவர்களுக்கு தண்ணிபட்ட பாடமாக இருக்கும். அவற்றுக்கெல்லாம் மேலாக அரசியல் வாதிகளின் மனத்தைரியத்தை பாராட்டாமல் இருக்க முடியாது. மாகாணசபை அங்கத்தவர்களில் இருந்து நாட்டின் பெரும் அரசியல் வாதிகள் வரை பெயர் குறிப்பிட்டு விமர்சித்து விடுவார்கள். பலருக்கு உயிர் அச்சுறுத்தல் இருந்தபோதும். அவர்கள் தாம் கருதியதை ஒரு போதும் எழுத தயங்கியதில்லை!

இனி சினிமா துறையை எடுத்தால் அது கலை உலகை சார்ந்தது. அதற்கென சினிமா விமர்சகர்கள் என்று ஒரு கூட்டம் இருக்கின்றது. அவர்களது தொழில் சினிமா பார்ப்பது. அவர்களின் திறமை சினிமா பார்ப்பதனால் உண்டானதே! தமிழ் மொழிபடங்களை மட்டும் அவர்கள் பார்ப்பதில்லை. ஆங்கிலம் ,கன்னடம், மலையாளம் உட்பட பல மொழிப்படங்களையும் அவர்கள் தவறவிடுவதில்லை இனி எந்த மொழி படமாயினும் அதற்கு விருது கிடைத்துவிட்டால் அதை தேடிப்பார்ப்பார்கள். படத்தின் கதையோட்டம் பங்குபற்றிய நடிகர் நடிகையர், இயக்குனர், கதை, வசன கர்த்தா, இசையமைப்பாளர், என்று அனைவரையும் அறிந்து வைத்திருப்பர். பிற மொழி படங்களை தாய்மொழி படங்களுடன் ஒப்பிட்டு விமர்சிக்கும் ஆற்றல் அவர்களிடம் நிறைந்திருக்கும். பல படங்கள் வசூலில் கொடிகட்டி பறப்பதற்கும் மற்றும் பல ஓரிரு வாரங்களில் காட்சிகளை நிறுத்திக்கொள்வதற்கும் காரணமாக இருப்பவர்கள் பெரும் சினிமா விமர்சகர்கள்தான்!

இப்படியே எந்த துறையை எடுத்தாலும். அவற்றை விமர்சிப்பதற்கு கட்டாயமாக ஒரு குழு இருக்கவே செய்யும். அவ்வத் துறைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் காரணகர்த்தாக்களாக இருப்பவர்கள் விமர்சகர்களே. பத்திரிகைகளை எடுத்துப்பாருங்கள் பல சஞ்சிகை களின் சிறப்புக்கள் பற்றி விதந்துரைக்கப்பட்டிருக்கும். அவையே முன்னோடி சஞ்சிகைகளாக இருக்கும். அதே போன்று பல படைப்பாளி கள் பற்றிய பேட்டிகள் மக்களுக்கு அவர்களை இனம் காண வைக்கும்.

இன்றைய சந்தர்ப்பவாத சூழ்நிலையை எடுத்தால் எந்த துறையில் இருப்பவர்களும் சரி விமர்சனத்துக்கு முகம் கொடுக்க வேண்டிய கட்டாயம் இருக்கவே செய்கின்றது. பெரும் அரசியல் வாதிகளும்.சரி சினிமா தயாரிப்பாளர்களும்.சரி விமர்சனத்துக்கு முகம் கொடுக்க வேண்டிய கட்டாயம் இருக்கவே செய்கின்றது. ஆனால் அவர்கள் விமர்சனத்துக்கு பயந்து அடிபணியாமல் தொடர்ந்து தமது முயற்சி களில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதனால்தான் என்றும் தமது துறைகளில் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றார்கள். அந்த நிலைப்பாட்டினை நாமும் கடைப்பிடிக்க வேண்டும்.

எம்மைப்பற்றிய எமது அபிப்பிராயம் தலையானது. பிறரது விமர்சனங் களுக்கு தலையாட்டினால் குட்டிச்சுவராகவேண்டியதே.! பிறரது பாராட்டுக்களுக்காக ஆமோதிப்புக்களுக்காக புகழுக்காக காத்தி ருப்பது நாம் பிறரால் ஆட்டுவிக்கப்படுவதற்கு முதற்படி என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். அர்த்தமில்லாத சொற்களும் கண்டனங்களும் நியாயம் தப்பிய அதிருப்தியும் கடும் சொற்களும் எம்மை வீழ்த்தி விடாதபடி நாம் அவதானமாக இருக்கவேண்டும். பிறர் எம்மைப்பற்றி விமர்சனம் செய்வது குற்றங்குறைகளை சுட்டிக்காட்டுகின்றார்களென்றால் நாம் அவற்றை திருத்திக்கொண்டு அடுத்த முன்னேற்ற படிக்கு தாவ வேண்டும்.

இனி அடுத்த வளமாக சிலர் ‘ சுயவிமர்சனம்’ செய்வதன் மூலம் தமது பெயரையும் புகழையும் வளர்த்துக்கொள்வதில் மிகுந்த சாதுர்யத்தைக் கையாள்கின்றார்கள் அவர்கள் தமது திறமையை வளர்க்காமலும் அதனை வெளிப்படுத்தாமலும் மற்றவர்களது அங்கீகாரத்திற்காகவும் ஆமோதிப்பிற்காகவும் விருதுகளுக்காகவும் ஏங்குகின்றார்கள். அதனால் அவர்கள் தமக்கான தனிதன்மையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழக்கின்றார்கள். சில எழுத்தாளர்கள் ஓரளவு படைப்பாற்றல் கொண்டவர்களாயினும் அவர்களது கற்கை மட்டுப்படுத்தபட்டிருப்பதாலும் பரந்து பட்ட அறிவு இன்மையாலும் அவர்களால் ஒரு குறுகிய எல்லைக்குள் நின்றே இலக்கியம் செய்யக்கூடியதாக இருக்கின்றது. ஆங்கிலம் உள்ளிட்ட பிறமொழிகள் மீதான அறிவு சூன்யமாக இருந்துவிட்டால் பிற மொழி இலக்கிய பரிட்சயம் அவர்ளுக்கு இருக்காது. ஆனால் அவர்கள் தம்மை பிரபல்யப்படுத்திக் கொள்வதற்காக சில சாதுர்யங்களை கடைப்பிடிக்கின்றார்கள். தமது எழுத்துக்கள் சில 'இஸம்' களை அடிப்படையாக கொண்டவை என பிரபல்யப்படுத்துகின்றார்கள். அதைக்காட்டிலும் பிரதானமாக சுயவிமர்சனத்தை தந்திரமாக கையாள்கின்றார்கள்.

அதாவது எந்த கல்விமானின் படைப்புக்களாக இருந்தாலும் சரி பெரும் படைப்பாளிகளின் ஆக்கங்களாயினும் சரி அவற்றை அவர்கள் துணிந்து நிராகரிப்பர். ' அகிலனின் எழுத்துக்களா?' 'அவரும் ஒரு எழுத்தாளரா?' என்று பரிகசிப்பர். 'ஜெயகாந்தனின் படைப்புக்களா?' 'அவர் எப்போது எழுத்தாளரானார்?' என்று கேட்டு கர்ஜிப்பர்! அதனை கேட்டுக்கொண்டிருப்பவர்கள் அசந்து போய்விடுவார்கள். அகிலனும் ஜெயகாந்தனும் அவர்களுக்கு தூசு என்றால் அவர்கள் எப்பேற்பட்ட எழுத்தாளராக இருக்கவேண்டும் என்று வியப்பில் ஆழ்ந்துவிடுவார்கள். வாய் வீச்சு மட்டும் வரலாறு படைக்காது என்பதை அவர்கள் என்று தான் புரிந்து கொள்வார்களோ தெரியாது!

இனி தனிநபர் விமர்சனங்களுக்கு எமது சமூகத்தில் குறைவே இல்லை. தம்மை சூழ உள்ளவர்கள் பற்றி தாம் அறிந்தவர்கள் பற்றி வாய் மொழி விமர்சனம் செய்வது எம்மவருக்கு கைவந்த கலை. பிற அலுவலர்களின் ஒத்துழைப்பு இன்றி தமது கடமைகள் எதனையும் நிறைவேற்ற இயலாதவர்கள் கூட மற்றவர்களை குறைத்தே விமர்சித்துவிடுவார்கள். தமது மனைவி பிள்ளைகள் பற்றி பிறர் மத்தியில் பேச்சு எடுக்காதவர்கள் கூட மற்ற மற்ற பெண்களின் விவாகம் காதல் என்று பேச்சு வந்தால் கலியாணம் தடைப்படும் அளவுக்கு குறைத்து மதிப்பிட்டு விமர்சித்துவிட்டு போய்விடுவார்கள். கல்வியிலும் விளையாட்டிலும் சமூக சேவையிலும் ஒருமித்து திறமைகளை வெளிப்படுத்தும் ஒரு இளைஞன் அயல் வீட்டுக்காரனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையில் 'ஊதாரி' சோம்பேறி, படிப்பில் படுமோசம், மூத்தவர் களை மதிப்பதில்லை' என்றே விமர்சிக்கப்படுவான். என்ன செய்வது எமது தலைவிதி அப்படித்தான் அமைந்திருக்கின்றது.

நாம் மட்டும் ஒன்றை மனதில் பதித்துக்கொள்ள வேண்டும். குறை சொல்வது என்பது தன்னம்பிக்கை இல்லாதவர்களின் கடைசி அஸ்திரம். நாம் அதற்கு அடிபணியக்கூடாது.. ஆபிரகாம் லிங்கன், மகாத்மா காந்தி போன்ற பெரும் அரசியல்வாதிகளின் வாழ்கையை முன்னுதாரணமாகக் கொள்ளல் வேண்டும். தாம் நம்பியதை பிடிவாதமாக கொண்டு போராடியவர்களே எப்போதும் வெற்றிவாகை சூடியவர்களாவர். சில சமயம் பிறரது அபிப்பிராயங்களுக்கு எதிராக போரிட நேரிடலாம். அதற்கான மனோபலத்தை வளர்த்துக்கொள்ளல் வேண்டும். எவ்வகை விமர்சனத்துக்கும் விமோசனம் உண்டு என்று நம்புங்கள்!

மலைமுரசு வாரமலர் 26.09.2015 - 02.10.2015

ஒளி அரசி - மார்கழி 2018 இதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28

# மாறுபட்ட மனோநிலைகள்

'வாயிருந்தால் வங்காளம் போகலாம் என்று ஒரு பழமொழி உண்டு. அப்படி ஒரு சக்தி வாய்க்கு உண்டு! கஷ்டமோ நஸ்டமோ... இன்பமோ துன்பமோ... வெற்றியோ தோல்வியோ... எதுவாக இருந்தாலும் எமது வாழ்க்கையை சோடை போகாதபடி ஓட்ட முடிகின்றது என்றால் அதற்கு பிரதான காரணம் வாய்தான்.!

அப்படிப்பட்ட வாயின் வெற்றிக்கு அடிப்படை காரணம் என்னவென்று ஆராய்ந்தால் அது எமது மனம் தான். 'வாய் ஒன்று சொல்ல மனம் ஒன்று நினைக்கும்'என்பதுதான் தத்துவம்.. அந்த சுவாரசியமான அனுபவத்தை பிறரும் எம்முடன் பகிர்ந்து கொண்டால் எப்படி இருக்கும் என்று ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

சரி பார்ப்போம்....'ஆசிரியர்கள்' தான் எமது முன்னேற்றத்திற்கு வழிகாட்டிகள். அதனை எவரும் வாயால் ஏற்றுக்கொள்வர். ஆனால் மனம் அப்படி ஏற்றுக்கொள்ளாது....

'இன்று நான் இந்த நிலைக்கு வந்ததற்கு காரணம் ஆசிரியர்கள் என்று எப்படி சொல்வது... என்னுடைய முயற்சி இல்லாமல் எதுவும் நேர்ந்திருக்காது... இரவு பகல் என்று பாராமல் நித்திரை முழித்ததின் பயன் தான் எனது வெற்றி... ஆசிரியர்களுக்கு தாம் படித்தது எல்லாம் மறந்துவிட்டது. ஒரு கேள்விக்கு மறுமொழி சொல்ல பெரும் கஷ்டப்படுவர். நான் எத்தனை பொது நூலகங்களில் ஏறி இறங்கி அறிவை வளர்க்க வேண்டியிருந்தது. விளையாட்டுப்போட்டி...தமிழ் தினபோட்டி கலைநிகழ்ச்சி என்றால் மட்டும் போட்டி போட்டுக்கொண்டு வேலை செய்வர். தனியார் கல்வி நிறுவனங்கள் காசுக்கும் கலாச்சாரத்திற்கும் கேடு' என்று பிரச்சாரம் வேறு.. எங்கடை முன்னேற்றத்திலை அக்கறை கிடையாது!..

இனி... அயலவருடைய ஒத்தாசை இல்லாமல் நாம் ஒரு வீட்டில் தனித்து வாழ்வது என்பது அசாத்தியம். நல்ல அயலவரால் வீட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுமதி கூட உயரும் வாய்ப்புண்டு. எனவே நாம் எப்போதும் எமது அயலவர் பற்றி புகழ்பாடவே செய்வோம். ஆனால் மனதில் வேறு எண்ணங்கள் ஓடும்...

வரவர எங்கடை அயலவர் தலை நகரிலை வாழ்கிறவர்கள் மாதிரி வந்துவிட்டார்கள். பக்கத்து வீட்டிலை யார் யார் இருக்கிறார்கள்... அங்கு என்ன நடக்கிறது என்று எதையுமே கருத்திற்கு எடுக்காத நிலைதான் நீடிக்கின்றது. தற்செயலாக வீட்டில் நாம் எவரும் இல்லாத நேரத்தில் தபால்காரன் வந்து 'பெல்' அடி அடி எண்டு அடிச்சாலும் எட்டி ஏன் என்று கேட்க ஆளில்லை. சில வாரங்களுக்கு முன்னர் சாமத்திலை யாரோ கள்வர் எங்கடை வீட்டு கதவை திறக்க முயற்சித்தவங்கள். அன்று வீட்டில் பெண்கள் தான் அதிகம் பேர்.'கள்ளன் கள்ளன்' என்று பயத்திலை விடிய விடிய கத்தினவை. எந்த ஒரு அயலவரும் ஏன் என்று கேட்கவில்லை.போக, ஏதும் மனத்தாங்கலை வைத்துக்கொண்டு வீட்டுக்கு கல் எறியும் விழும். அயலவரின்ரை ஒத்தாசை இல்லாமல் அதெல்லாம் நடக்காது..

'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு.' என்று வள்ளுவர் சொன்னவர். நாங்களும்அப்படித்தான் சொல்லுறம். ஆனால் மனம் அப்படி சொல்லாது.!

'நான் என்னுடைய நண்பனுக்காக அவனுடைய வீட்டிலை கூலி வேலையும் செய்வன். மதில் கட்டுறது முதல் வீட்டிற்கு 'பெயின்ற்' அடிக்கிறவரைக்கும் எல்லா ஒத்தாசையும் கொடுப்பன். எங்கடை வீட்டிலை ஒரு உதவி ஒத்தசை தேவை என்றால் நண்பன் மெதுவாய் மாறிவிடுவான். நண்பன் வசதியானவன். எனது தங்கையின்ரை சாமத்திய வீட்டிற்கு ஒரு இலட்சம் கடன் தந்தவன். நாளும் இழுபட்டுபோய்விட்டதுதான். நான் என்ன பணத்தை வைச்சுக்கொண்டா திருப்பிக் கொடுக்காமல் இருக்கிறன்.

குல தெய்வம் என்று ஒன்று எல்லோருக்கும் இருக்கும். நாம் வாழும் வளவுக்குள்ளாகவே உள்ள வைரவர் கோயிலில் நம்பிக்கை வைத்து தீபம் ஏற்றுதல் மடை வைத்து வேள்வி செய்தல் என்று உறவினர் ஒரு குறையும் வைக்கமாட்டார்கள். எவரும் எதிர்த்து கதைக்கவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிய மாட்டார்கள். ஆனால் மனம் மட்டும் வேறு வழியில் சிந்திக்கும்...

'இந்த வேப்ப மரத்திலை வைரவர் இருக்கிறார் என்று சொல்லுகினம். உண்மையில் வைரவர் ஒரு தெய்வம் எண்டு சொன்னால் தனக்கென்று ஒரு பெரிய ஆலயத்தை கட்டாமல் மரத்திலை இருப்பாரா? 'வைரவர் எங்கடை காவல் தெய்வம். நாங்கள் அவரை நேரிலை கண்டிருக்கிறம்' என்று எங்கடை மூதாதையர் சொன்னவையாம். அதேன் எனக்கு மட்டும் அவர் காட்சி தாறாரில்லை. நான் 'செக்கண்ட ஷோ ' படம் முடிந்து சாமத்திலை வைரவர் கோயிலடியாலை வந்திருக்கிறன். எனக்கெண்டால் எந்த அசுமாத்தமும் இல்லை. வைரவர் மடை வைக்கசொல்லியோ வேள்வி செய்யவோ எவரையாவது கேட்டி ருப்பாரா? சனம் தனக்கு தேவையானதை வைரவருடைய பெயரை சொல்லி அனுபவிக்குது...!

வாழ்க்கையில் தங்கள் தங்களுடைய உறவுகளுக்கு கைகொடுத்தவர் பல பேர் இருப்பார்கள். அதுவும் இந்நாட்களில் வெளிநாட்டில் உள்ளவர்கள் தமது சொந்தங்களை அழைத்து தொழில் வாய்ப்பையும் பெற்றுக்கொடுத்துள்ளார்கள். அவர்களை சம்மந்தப்பட்டவர்கள் வாயார போற்றவே செய்வார்கள். ஆனால் அது சிறிது காலம்தான். பிறகு மனம் குற்றம் காண தொடங்கிவிடும்...

'கனடாவுக்கு நான் செல்ல மாமிதான் ' ஸ்பொன்சர்' பண்ணினவா... அதுக்காக நான் அவவுக்கு அடிமையாக சேவகம் செய்யலாமா? அவாவின்ரை செலவிற்கெல்லாம் நான் வட்டியோடை கொடுத்திட்டேன். ஆனால், நான் தான் அவனை கனடாவிற்கு எடுத்து விட்டன் என்று சொல்லித்திரிவது மட்டும் இன்னும் குறையவே இல்லை. நான் அவாவுடைய கோபக்காரரோடை கதைச்சு சிரிக்க கூடாது. உறவாடக்கூடாது. தொலைபேசி எடுக்க கூடாது. யாரும் எனக்கு தங்கடை வீட்டு விஷேடங்களுக்கு அழைத்தால், அங்கை கண்ட கண்ட எல்லோரும் வருவினம்... நான் போறன் தானே.. நீ போகாதே என்று தடுத்துவிடுவா.. தங்கடை வீட்டு விஷேடங்களுக்கு என்னிட மிருந்து காசு , நகை, புடவை என்று எதிர்பார்ப்பா... சில வேளை யோசித்தால் ஏன்தான் மாமியின்ரை உதவியை பெற்று வெளிநாட்டுக்கு வந்தனோ என்று இருக்கும்...'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மை இந்த உலகத்திற்கு அறிமுகப்படுத்தியவர்கள் எமது பெற்றோர்கள். எமது வாய் அவர்களை பாராட்டாத நாட்களே இருக்காது. ஆனால் முதுமை என்பது பெற்றோரை மட்டுமே விட்டு வைப்பது அல்லவே, அப்போது எம் பெரும்தன்மை எப்படி இருக்கின்றதென்று பார்ப்போம்...

'அவரும் நானும் வேலைக்கு போக வேணும். பிள்ளைகள் இருவரையும் நேரத்திற்கு பாடசாலைக்கு அனுப்ப வேணும். வீட்டிலை 'காஸ்' அடுப்பு இருக்கு. அம்மா தவண்டு தவண்டு எண்டாலும் சமையல் வேலையை செய்யலாம் தானே. அப்பா எந்த நேரம் பார்த்தாலும் 'ஈஸி சேயருக்குள்ளை' முடங்கிக்கிடந்து கொண்டு புத்தகம் பேப்பர் வாசிக்கிறதுதான் வேலை. 'வோஷிங் மெசின்' இருக்கு. அம்மாவின்ரையும் தன்னுடையதுமான உடுப்புக்களை துவைக்கலாம் தானே . வெளிநாட்டிலை எல்லோரும் பெற்றோரை முதியோர் இல்லத்தில தான் விட்டு பராமரிக்கினம். ஒரு வயது வந்திட்டால். அவைக்கும் தொந்தரவு இல்லாமல் எங்களுக்கும் பாரமில்லாமல் போய்விடவேண்டும்!.

இனி, கணவன் மனைவி உறவென்பது மிகவும் தூய்மையானது. ' கல் என்றாலும் கணவன் புல் என்றாலும் புருஷன்' என்று பெண்கள் வாயார புகழ்வார்கள். ஆனால் நடைமுறையில் அப்படியெல்லாம் இருக்காது.

'இவர்தான் ஒரு புதுவிதமான மனுஷன். அலுவலகம் அலுவலகம் என்று காலையில் விழுந்தடித்து ஓடினால் வீடு வர இரவு எட்டு மாணியாகும். கேட்டால் 'ஓவர் டைம்' என்று சொல்லுவார். எந்த காவாலி பெட்டைகளோடை இருந்து கதைத்துவிட்டு வாராரோ ஆருக்கு தெரியும். ... கலியாணம் முடிச்ச புதிசிலேயே எனக்கு ஒரு சந்தேகம் இருந்தது. இந்தாளுக்கு முந்தியே பெண்கள் தொடர்பு இருந்திருக்கும் எண்டு. பிள்ளைகள் பிறக்க பிறக்க என்னிலை நாட்டமும் குறைந்து கொண்டு போகுது. எந்த நேரமும் கைபேசியிலை கதைக்கிறதுதான் வேலை. கேட்டால் சண்டையும் அடிபுடியும் தான்'.

இனி கணவனை பற்றிய மனைவியின் நினைப்புக்கு அப்பால் கணவன்மாரின் மனைவி பற்றிய நினைப்பு ஒன்றும் தாழ்ந்ததில்லை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இவள் ஒருநாள் ...' நான் உங்கடை சொந்தகாரி... என்னை ஏன் நீங்கள் கலியாணம் முடிக்க கூடாதென்று கேட்கப்போய்தானே நான் ஓமென்று இவளுக்கு வாழ்வு கொடுத்தனான். இவள் இப்படி எத்தனை பேரை கேட்டிருப்பாள் என்று நான் அப்போ யோசிக்கவில்லை. இப்ப தானே இவளுடைய துடியாட்டம் தெரியுது. முகநூலிலை எனக்கு அறிமுகமில்லாத நூற்றுக்கணக்கானவர்களோடு சினேகிதம். 'வைபரிலை' நீண்ட உரையாடல்கள். சனி விடுமுறை என்று வேலைக்கு போறது . கந்தோராலை சுற்றுலா போறது.. கொஞ்சம் அவதானமாய்தான் இருக்க வேணும்.'

நாக்குக்கு நரம்பு இல்லை. அதே போன்று மனதுக்கு கட்டுப்பாடு கிடையாது. நாம் தான் விழிப்பாக இருக்கவேண்டும்.!

மலைமுரசு வாரமலர் 19.03.2016 - 25.03.2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29 வரலாற்றில் இடம்பிடித்தல்.

நம் அனைவருக்குமே கட்டாயமாக ஒரு ஆசை இருக்கும்.... அது எம்மை எமது வாழ்கையை வரலாற்றில் இடம் பெற வைக்கவேண்டும் என்பதேயாகும்! நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் போது மற்றவர்கள் பெருமைப்படும் படி நல்லொழுக்கம், அன்பு , பரிவு, இரக்கம், சமூகநோக்கு ஆகிய நற்பண்புகளை கடைப்பிடிப்பவர்களாக வாழ்ந்தால் தான் சமூகம் எம்மை அடையாளம் காணும். நாலுபேர் எம்மைப்பற்றி எப்படி கணக்கிட்டு பேசுகிறார்கள்... பொது நிகழ்வுகளில் எப்படியான வரவேற்பு கிடைக்கின்றன என்பவற்றை யெல்லாம் வைத்தே எமது தராதரம்... சமூகத்தில் எமக்கு இருக்கும் இடம் ஆகியவற்றை இலகுவாக கணக்கிட்டு கொள்ள முடியும்.

நாம் எல்லோருமே வசதி வாய்ப்புக்களுடன் பிறந்தவர்களல்ல. பெற்றவர்களாக இருந்தாலும் கூட அவர்கள்தான் எமது முன்னேற்றத் திற்கு உதவி செய்ய வேண்டுமென்று காத்திருக்கலாகாது. .மன உறுதி ஒன்றுதான் அவசியமானது. நிதி நெருக்கடி எதுவும் தடங்கலாக இருக்க மாட்டாது. கூலித்தொழில் புரிந்து பலர் ஜனாதிபதி போன்ற உயரிய பதவிகளையும் எய்தியிருக்கிறார்கள். நாம் சிறுவர்களாக இருக்கிறோமே என்று கலங்க கூடாது. எமது குடும்ப கௌரவம் என்னாவது என்று தயங்கக் கூடாது. எதிர்காலத்தை நல்ல படியாக அமைப்பதற்கு பணம் அவசியமாகும். தொழிலின் தகுதி பற்றி கவலைப்படாமல் கூலித் தொழிலாக இருப்பினும் அதை செய்ய வேண்டும். இந்த உலகில் எமது எதிர்காலத்தை நல்ல படியாக அமைப்பதற்கு பணம் அவசியமாகும்.. கல்வியே ஒருவனை உயர்த்தவல்லது. எப்பாடு பட்டாயினும் பட்டப்படிப்பை பூர்த்தி செய்யும் வரை ஓயக் கூடாது!

எங்களுக்கு ஒரு உண்மை மட்டும் தெற்றெனப் புரிய வேண்டும். அது எதிர்காலம் பற்றிய பேராவலும் போராடும் உள்ளமும்தான் எமது வெற்றிகளுக்கு முன்னோடியாக அமையும் என்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹிட்லரையும் நெப்போலியனையும் சற்று மனக்கண்முன் கொண்டு வாருங்கள். என்ன ஆர்வம்! எத்தனை உறுதி! அந்த உறுதியில் நூற்றில் ஒரு பங்கு எமக்கு இருந்தால் போதுமானது. எம்மாலும் வரலாற்றில் இடம் பிடிக்க முடியும். விடாப்பிடியான முயற்றி ஒன்று போதுமானது... எமது பேரவாவை நிறைவு செய்ய முடியும்.

உலக வரலாற்றில் இன்னும் பல தலைவர்கள் அஹிம்சை வழி நின்றுபோராடி வெற்றி பெற்றிருக்கின்றார்கள். அவர்களை இன்னும் உலகம் போன்றுகின்றது. மனித குலத்திற்கு தொண்டு செய்வது பெரும் சேவையாகும். மக்கள் சேவை மகேசன் சேவை என்று கூறுவார்கள். பொது நலம் பேணுவதை காட்டிலும் சிறந்த முயற்சி வேறெதுவும் இல்லை. உலகெங்கணும் கோடான கோடி மக்கள் அடிமைப்பட்டு வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். உண்ண ஆகாரமன்றி, உடுக்க ஆடையின்றி, தங்க வதிவிடமில்லாமல் அல்லலுறும் மக்களின் துன்பத்தைத் துடைப்பதைக்காட்டிலும் வேறொரு சிறந்த தொண்டு உண்டா? நாம் ஏன் அந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கும் முயற்சி யில் எம்மை ஈடுபடுத்த கூடாது எமக்கு மனச்சோர்வு மட்டும் வந்துவிட்டால் எதனையும் சாதிக்கமுடியாது. எம்மிடம் பண வசதி இல்லை. ஆள்வலு இல்லை என்று தயங்க கூடாது. மஹாத்மா காந்தியையும் அன்னை தெராசாவையும் எண்ணிப்பாருங்கள் தமது தேசத்திற்கும் இந்த உலகத்துக்கும் கோடானு கோடி மக்களுக்கும் தனித்து நின்றுதானே சேவையாற்றினார்கள்!.

அனைத்து இடர்களுக்கும் தீர்வுதரும் ஒரே திறவுகோல் நம்பிக்கை யேயாகும். துன்பங்களைக் கண்டு துவளக்கூடாது. அதிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும், வெற்றியை சம்பாதிக்க வேண்டும்.

பெண்களை எடுத்துக்கொள்ளுங்கள். அவர்களை இறைவன் மென்மை யானவர்களாக படைத்துள்ளான். அதற்காக அவர்கள் முடங்கிப்போயா இருக்கின்றார்கள். அவர்களுக்கு தம்மேல் நம்பிக்கை இருக்கின்றது. ஒரு தலைவலி வந்தால் பத்து நிமிடம் பொறுத்துக் கொள்ளும் திராணி ஆண்களிடம் இல்லை. பெண்களோ பத்துமாதம் கருவை சுமந்து பொறுமை காக்கிறார்கள். ஒரு முழு குடும்பத்தை தாங்கு கிறார்கள். அனைவரின் வெற்றிக்காவும் உழைக்கின்றார்கள். இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் தமது நம்பிக்கையை மேம்படுத்திக் கொண்டதால்தான் அவர்களால் இன்று அனைத்து துறைகளிலும் கால் பதித்து சாதனை புரிய முடிகிறது எதிர்காலத்தில் செவ்வாய் கிரகத்தில் கால் பதிக்கும் நம்பிக்கையுடன் உள்ளார்கள்.

எம்மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஊனமுற்றோர்களை அவதானியுங்கள். அவர்களுக்கு தன்நம்பிக்கை ஒன்றுதான் பெரும் துணையல்லவா? எத்தனை பேர் தமது கால்களை பயன்படுத்தியும் வாயை பயன்படுத்தியும் சித்திரம் வரைகின்றார்கள்... சிற்பங்கள் செதுக்குகிறார்கள். பார்வை இழந்தவர்கள் தமது பட்டப்படிப்பை மேற்கொண்டு சித்தியும் பெறுகின்றார்கள்.

ஏழை கூட நம்பிக்கையுடன் முயற்சி செய்ததன் மூலம் கோடிஸ்வரனாக முடிந்திருக்கின்றது. பற்பொடி, சவர்க்காரம், ஊதுபத்தி, போன்ற சிறு கைத்தொழில்களில் ஈடுபட்ட பலர் பெரும் வர்த்தகராகி உள்ளனர்.

நம்பிக்கை உடையவர்கள்தான் விமானமோட்டிகளாக தம்மை வளர்த்துக்கொண்டார்கள். நம்பிக்கைதான் 'ஆம்ஸ்ரோங்கை' நிலாவில காலடி பதிக்க வைத்தது.

பொதுநலம் ஒன்றுதான் எமது இலட்சியமாக இருக்க வேண்டும். பிறருக்கு செய்யும் சேவைதான் வரலாற்றில் எமக்கு இடம்பிடித்துத் தரப்போகின்றது என்ற நம்பிக்கை இருக்க வேண்டும். நாம் 'கின்னஸ்' சாதனைப்புத்தகத்தில் எமது பெயரை பதித்துக்கொள்ளவா முயற்சிகள் செய்கிறோம். இல்லவே இல்லை! பலர் சினிமா மூலம் வளர்ச்சி அடைந்திருக்கின்றார்கள். அது அவரவரது சொந்த கலைத் திறமை ஆகும். நடிப்பு, நாட்டியம், பாட்டு, இசையமைப்பு , படத்தை இயக்குதல், ஆகிய துறைகளில் வெற்றிக்கொடி நாட்டியவர்கள் பலர் இருக்கின்றார்கள். இவர்களது புகழெல்லாம் ஒரு நூற்றாண்டுக்கு உட்பட்டதேயாகும். அதாவது பேசும் படம் கண்டு பிடிக்கப்பட்ட பின்னரே இவர்கள் மக்களுக்கு அறிமுகமானார்கள். எமது மூதாதையர் எவரும் இவரை அறியவும் மாட்டார். சினிமா, கலைத்துறை என்ற அளவிலேயே மதிக்கப்படுகின்றது. அதில் சம்மந்தப்பட்டவர்கள் கோடிக்கணக்கில் உழைக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மக்களுக்கு ஒரு சதமேனும் ஈயமாட்டார். அவர்களெல்லோரும் வரலாற்றில் தடம் பதித்தவர்கள் என்று கொள்ளலாகாது. அண்மைக் காலத்தில் மட்டும் விஷால் என்ற நடிகர் சில பொது தொண்டுகளில் ஈடுபட்டதாக அறியக்கிடக்கின்றது. மற்றொரு நாட்டிய நடிகர் லோரன்ஸ் நூற்றுக்கு மேற்பட்ட ஏழை மக்களின் இருதய சத்திர சிகிச்சைக்கான செலவை பாரம் எடுத்து சேவையாற்றியுள்ளார். நிச்சயமாக நடிகர்கள் என்று இல்லாமல் தமது சேவையின் மூலம் இவர்கள் வரலாற்றில் தடம் பதித்தவர்களாகின்றார்கள்.

பணம் குவிப்பது மட்டுமே உண்மையான வெற்றியாகாது. வெற்றி என்பது வளர்ச்சி , பெருக்கம், தியாகம், ஆகியவற்றில் தங்கியுள்ளது. இறைவன் அனைவர் இதயத்திலும் குடி கொண்டுள்ளான். பேரான்மா என்பதும் சிற்றான்மா என்பதும் வெவ்வேறானவையல்ல. பிறர் துன்பத்தில் பங்குகொள்பவர் எவரோ அவராலேயே இறைவனை வெளிக்கொணர முடியும். மந்திரம் பூஜை என்பவையெல்லாம் பொது பணிக்கு பிற்பட்டவையாகும். சோதிடர்களும் பூசாரிகளும் வரலாற்றில் தடம்பதித்தவர்களல்ல. ஆதிசங்கரர், ரமணமகரிஷி ஸ்ரீஇராமகிருஷ்ணர், விவேகானந்தர் போன்றோர் தன்னலம் கருதாத துறவிகளாக வாழ்ந்தார்கள். மக்கள் துன்பத்தை தமது சக்தி மூலம் தீர்த்தார்கள். அதனால் தான் அவர்கள் வரலாற்றில் தடம் பதிக்க முடிந்தது.

பன்னெடுங்காலம் படைப்பாளிகள் தமது எழுத்துக்கள் மூலம் மக்களுக்கு சேவையாற்றியுள்ளார்கள்.'இருக்கு யசுர், சாமம், அதர்வணம்' ஆகிய வேதங்களை தெய்வத்திற்கு நிகரானவரே படைத்து அருளினர். அவர்கள் பெயர் இன்றும் பதிவில் உள்ளது. மகா பாரதத்தை எழுதிய வியாசரையும் இராமாயணத்தை யாத்த வால்மீகி முனிவரையும் மறக்கத்தான் முடியுமா? இன்று பல எழுத்தாளர்கள் கவிஞர்கள் மக்கள் நலனுக்காக அல்லாமல் தமது விருத்திக்காக எதை எதையோ எழுதுகிறார்கள். அவர்களது நோக்கம் தம்மை பிரச்சாரப்படுத்துவதேயன்றி வேறில்லை. பட்டம் விருது, பொன்னாடை என்றால் பாய்ந்து ஓடுவார்கள். அவையெல்லாம் வெறும் மாயைக்கு உட்பட்டவையே. உண்மையாகவும் உறுதியாகவும் சிறந்ததை தேடுகிற எவனுக்கும் அனைத்து வளங்களும் கைகூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் அல்ல பெரியது. காலம் தான் பெரியது. நேர்மையும் கடின உழைப்பும் வெற்றிக்கான படிக்கட்டுகளாகும். அவை மனிதனை கடவுள் ஸ்தானத்திற்கு உயர்த்தவல்லது. புகழ் , பெருமை, பட்டம், விருது, எவையும் இன்பம் தர மாட்டாது. பிறருக்கு தொண்டு செய்வதே ஆனந்தத்தை தரும். எமக்கு சாதகமான சூழ்நிலைகள் இருக்கலாம். பாதகமான சூழ்நிலைகளும் இருக்கலாம். அவற்றை வெற்றி கொள்வதொன்றே எமது இலட்சியமாக இருக்கவேண்டும். விதியென்பது வெளியே இருந்து எம்மை தொடர்வதல்ல. ஏழ்மை , சுகவீனம், துன்பம், இவற்றை வெல்பவர்களே இறைவனுக்கு நிகரானவர்..

தவறு செய்தால் எவருக்காவது மனநிறைவு கிட்டுகிறதா? இல்லவே இல்லை. நன்று செய்வதே என்றும் நிறைவு தரும். நேர்மையாக இருக்க வேண்டும். உண்மை பேச வேண்டும்., மற்றவருக்கு ஒளிவு மறைவின்றி வாழவேண்டும்.

தம்மை, தமது பெயரை வரலாற்றில் தடம் பதிக்க விரும்புபவர்கள். தமது வாழ்கையை தூய்மையாக வைத்திருக்க வேண்டும் எந்த அற்ப நலன்களுக்காகவும் விலை போக கூடாது!

மலைமுரசு வாரமலர் 30.04.2016 - 06.05.2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 'மகிழ்ச்சியின் இரகசியங்கள்'

எம் அனைவரினதும் இலட்சியமே மகிழ்ச்சியான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளல் தான். அதற்காகவே நாம் தினமும் பல பிரயத்தனங்களில் ஈடுபடுகின்றோம். பணம் சம்பாதித்தல் என்பது எமது முதன்மை இலக்காக உள்ளது. பணத்தால் மகிழ்ச்சியை வாங்கிவிடலாம் என்றுதான் பெரும்பான்மையோர் நம்புகின்றனர். புதிய மனை, புதிய கார், வீட்டு தளபாடங்கள், பதவிஉயர்வு, புகழ் அனைத்தையுமே பணம் கொடுத்து பெற்றுவிடலாம். ஆனால் அவை தற்காலிக மகிழ்ச்சிக்கே வழிவகுக்கும். உண்மையான நிரந்தர மகிழ்ச்சியானது எமது மனச்சுத்தியிலேயே உள்ளது. சுத்தமான மனத்திலேயே இறைவன் குடிகொண்டிருக்கின்றான். அந்த மனம் அன்பு, கருணை, இரக்கம், நீதி என்ற வழிகளில் சித்திக்கின்றது. தன்னைப்பற்றி மட்டும் எண்ணாது மற்றவர்களை பற்றியும் எண்ணுபவன் மனத்தில் மகிழ்ச்சியானது நிரந்தரமாக குடியேறி விடுகின்றது.

இயன்றவரை நாம் எமது வாழ்க்கையை சமூகத்துடன் பின்னிப் பிணைத்துக் கொள்ளல் வேண்டும். எமது சிந்தனை செயல் இரண்டுமே சமூக தொடர்பு கொண்டதாக இருந்தால் அது எமக்கு மகிழ்ச்சியை மட்டுமல்ல உடல் ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் தரும். குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் நாம் கொண்டிருக்கும் உறவானது எப்படி அன்பையும் ஒத்தாசையும், சுயநம்பிக்கையையும் வழங்குமோ அப்படியே சமூகத்துடன் நாம் கொண்டிருக்கக்கூடிய உறவு பரந்த அளவில் எமக்கு பலத்தையும் மகிழ்ச்சியையும் உண்டு பண்ணும்.

இன்னும் கூறப்போனால் சமூகத்துக்கு சேவை செய்வதை நாம் எமது இலட்சியமாக வரித்துக்கொண்டால் அதன் பின் எம் வாழ்வில் மகிழ்ச்சிக்கு குறைவே இருக்காது. உலகில் பல தரப்பினர் வாழ்கின் றனர். உணவுக்காக, கல்விக்காக மட்டுமன்றி ஆரோக்கியத்துக்காகவும் அவர்கள் யாசிக்கும் நிலையில் உள்ளனர். அவர்களுக்கெல்லாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழு மனத்துடன் எம்மால் சேவையாற்ற முடிந்தால் அது எமது உறவுகளை வலுப்படுத்தும். சமுகத்துடனான ஐக்கியம் பலப்படும். பண உதவி மட்டுமல்ல நாம் எமது நேரத்தை, சக்தியை, ஆலோசனைகளைக்கூட அவர்களது மேம்பாட்டுக்காக வழங்கலாம். எவ்வளவுக்கெவ்வளவு நாம் மற்றவர்களுக்கு நன்மைகளைச் செய்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு எமது சிந்தனை தெளிவும் மகழ்ச்சியும் பெறும் என்பதில் ஐயமே இல்லை! கவலையுடன் இருப்பவர்களுக்கு ஆறுதல் கூறுவது கூட அரும் பணியாகும். அவர்களுக்கு எமது அனுபவங்களை கூறி ஆற்றுப்படுத்துவதும் சிரிக்க வைப்பதும் அவர்களை உற்சாகப்படுத்துவதுடன் எமக்கு மகிழ்ச்சியைத் தரும். சிறு பிள்ளைகளை ஒன்று சேர்த்து பலர் முன்னிலையில் விளையாட வைப்பது அனைவர்க்கும் பெரும் குதூகலத்தை உண்டு பண்ணும்.

எமது உடலுக்கும் உள்ளத்துக்கும் பெரும் முக்கியத்துவம் உண்டு. உடலை ஆரோக்கியமாக இருக்கும்படி பேணுவதில் தான் எமது அனைத்து முயற்சிகளுக்குமான வெற்றி தங்கியுள்ளது. உடலாரோக் கியத்தை பேணுவதில் முக்கிய பங்கு வகிப்பது திட்டமிடப்பட்ட சத்தான உணவு முறையேயாகும். எமது உடலுக்கு தேவையான உயிர்ச் சத்துக்களையும், புரதச்சத்துக்களையும் வழங்கக்கூடிய பழ வகைகள், தானியங்கள், மரக்கறிவகைகளை நாம் தவறாமல் உண்ணு வது அவசியம். எமது நாவுக்கு சுவைதரும் உணவுகள் எமக்கு மகிழ்ச்சியை தரும். அவற்றை தேடிச் சாப்பிடுவதில் எந்த தவறும் இல்லை. அதே பொன்று சிறு பயிற்சிகளும் உடலுக்கு மிக மிக அத்தியாவசியமானவை. நீச்சலடித்தல், ஈருருளி சவாரி, நடைப்பயிற்சி ஆகியன உடலுக்கு சுறுசுறுப்பையும் மகிழ்ச்சியையும் உண்டு பண்ணுவதுடன் ஆரோக்கித்திற்கும் அத்திவாரமாக அமைந்து ‘மன அழுத்தம்’ எம்மை அண்டவிடாது காப்பாற்றும். அதனால் எமது உடல் போன்றே உள்ளமும் எப்போதும் திடகாத்திரமாகவும் தெளிவாகவும் இருக்கும்.

தவிர, வீட்டிற்குள்ளேயோ அலுவலகத்திலோ எப்போதும் முடங்கி கிடத்தல் மனச்சோர்வையே உண்டு பண்ணும். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் வெளியுலகில் நடமாட வேண்டும். காலை மற்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை நேரங்கள் மனதுக்கும் உடலுக்கும் பெரும் மகிழ்ச்சியை தருவனவாகும். காலையில் பறவைகளும் கால்நடைகளும் இரை தேடும் ஆவலில் உற்சாகமாக புறப்படுகின்றன. பகல் பூராகவும் உணவை சேகரித்த பின்னர் மாலையில் தமது இருப்பிடங்களுக்கு செல்கின்றன. பறவைகளின் இன்னிசை மனதை குதூகலத்தில் ஆழ்த்துகின்றது. சூரியன் கிழக்கில் உதிப்பதும், மேற்கில் மறைவதும் வானத்தில் வர்ண ஓவியங்களைத் தீட்டுகின்றது. மரம் செடிகள் சூரிய ஒளியில் பிரகாசிக்கின்றன. பலவகை பூக்கள் மலர்ந்து நறுமணம் வீசுகின்றன. பாடசாலை செல்லும் சிறுவர்களின் குதூகலமும் சிரிப்பொலியும் எம்மையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்துகின்றது!

அடுத்து, வாசித்தல் எமக்கு பெரும் மகிழ்ச்சியையும் பயனையும் தரவல்லது. மனித மனம் பல சந்தர்ப்பங்களில் தனிமையை விரும்புகின்றது. அப்போதெல்லாம் நல்ல நூல்களை வாசித்தல் பிரயோசனமாக அமையும். வாசிப்பதன் மூலம் நாம் அறியாத பல விடயங்களை அறிய சந்தர்ப்பம் ஏற்படும். எமது அறிவு வளர்ச்சியடையும். எமது ஆற்றல் விருத்தி அடையும். நண்பர்களுடன் நாம் கற்ற விடங்களை பகிர்ந்து கொள்வது பெரும் தன்னம்பிக்கையையும் உற்சாகத்தையும் எமக்கு உண்டாக்கும். கற்பதன் மூலம் நாமும் எமது பிரச்சனைகள் பலவற்றுக்கான தீர்வை அறிந்து கொள்வதற்கான வழி பிறக்கும். கற்றலின் மூலம் நாம் சங்கீதம், ஓவியம் வரைதல் போன்ற கலைகளை தெரிந்து கொள்ளலாம். முடிந்தால் மேடையேறி பாடி அனைவரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தவும் முடியும்!

நிற்க, நாம் அனைவருமே தூங்கும் போது கனவுகள் காண்கின்றோம். அவை சில சமயம் மகிழ்ச்சியையும், சில சமயம் துயரத்தையும் தரும். அவை எமது கட்டுப்பாட்டில் இல்லை. ஆனால் நாம் நிஜத்திலேயே எமது எதிர்காலம் பற்றி கனவு காண முடியும். அதை நாம் கற்பனை என்றோ, ஆர்வம் என்றோ கூட கூறலாம். அவற்றில் எம்மால் சாதனைகளை ஏற்படுத்த முடியும். அந்த எதிர்காலம் பற்றிய சிந்தனையே எமக்கு மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் தரவல்லது. எமது குறிக்கோள் மிகவும் சவாலானதாக இருக்கலாம். ஆனால் எம்மால் அதை நிறைவேற்றக்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கூடியதாக இருக்க வேண்டும். எமது சக்தியையும் புரிந்து கொண்டு இலக்கை நிர்ணயித்தால் தான் நல்லது. அது எமக்கான பாதையை நல்லுணர்வை திருப்பதியை அளிக்கும். எமது எதிர்கால திட்டங்களை மற்றவர்களுக்கு கூறுவதால் மகிழ்ச்சியே உண்டாகும். அவர்களும் அத் திட்டம் பற்றிய தமது கருத்துக்களை எம்முடன் பகிர்ந்து கொள்ள முன்வருவதுடன் ஒத்துழைப்பும் வழங்கி உற்சாகப்படுத்துவர்.

எல்லோருக்கும் அழுத்தம், இழப்பு, தவறு என்பன வாழ்க்கையில் நேர்வதுண்டு. எங்களுக்கு என்ன நடக்கும் என்பதை எம்மால் தீர்மானிக்க முடியாதிருக்கலாம். ஆனால் எந்த ஒரு பிரச்சனைக்கும் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டு எம்மால் தீர்வை கண்டு பிடிக்க முடியும். எமது மகிழ்ச்சியை அந்த வழியில்தான் எம்மால் நிலை நாட்ட முடியும். எமக்கு ஒரு இழப்பு நேர்ந்து விட்டதென்பதற்காக நாம் பிறரில் பழியை போடுவதாக எண்ணி எந்த தவறான சங்கல்பத்தையும் எடுக்க கூடாது. எனக்கு தெரிந்த ஒரு பெண்மணி.... தனது மகன் காணாமல் போய்விட்டான் என்பதற்காக அவன் திரும்பும் வரை 'சோறு' உண்பதில்லை என சங்கல்பம் செய்து கொண்டாள். பல வருடங்கள் கழிந்தும் அவளது மகன் திரும்பவில்லை. அவளது சங்கல்பம் பற்றி பலரும் அறிந்திருந்ததால் அவளால் சங்கல்பத்தை கைவிடவும் முடியவில்லை. அவளோ நன்றாக மெலிந்து ஆரோக்கியம் கெட்ட நிலைக்கு வந்து விட்டாள். இறைவன் எமது கவலைகளை நாளாவட்டத்தில் மறக்கும்படியே எமது மனதை படைத்திருக்கின்றான். மகனில் அன்பாய் இருப்பதென்பது இயற்கையே. ஆனால் அர்த்தமற்ற சங்கல்பத்தால் தன்னை அந்த தாய் அழிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாதல்லவா?

உண்மையில் எம்மை ஒரு கவலை வாட்டுமாக இருந்தால் தீர்வும் கிட்டுவதாக இல்லையென்றால், எமக்கு விருப்பமான ஒரு செயலில் ஈடுபடுவதே நல்ல வழி. மற்றவர்களை உதவி கேட்கலாம். அயலவர் உதவியை நாடலாம். நிபுணர்களின் ஆலோசனையைக் கேட்கலாம்.

எப்போதுமே நாம் அறிந்ததையே செய்ய வேண்டும். அது எம்மை மகிழ்விக்கும். மற்றவர்களைப் போல் இருக்க எண்ணி கவலைப்படாதே. உனது தவறுகளை உணர்ந்து திருந்து. மேலானவற்றறை சிந்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது நேரத்தை மற்றவர்களுக்காக செலவு செய். நட்சத்திரங்களின் எண்ணிக்கையையும் இந்த பிரபஞ்சத்தின் அகண்ட தன்மையையும் சிந்தித்துப்பார். எமக்கு மேல் ஒரு சக்தி இருப்பதை நம்பு.

தினமும் சிறிது நேரம் தனிமையில் தியானம் செய். எந்த எண்ணத்தையும் மனதில் எடுக்காதே. எவரினதும் வழிகாட்டலும் அவசியமில்லை. தொடர் தியானம் உன்னை சரியான இடத்துக்கு இட்டுச்செல்லும். அங்கு மகிழ்ச்சி வெள்ளத்தில் நீ மூழ்குவாய்!

மலைமுரசு வாரமலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு வாசக நெஞ்சங்களே...!

எமது வாழ்க்கையில் எம் முன்னேற்றத்திற்கு காரணியாகவும் ஒன்றுபட்ட செயற்பாட்டுக்கு உந்து சக்தியாவும் விளங்கும் பல அம்சங்களில் 'பொது எதிரி' முக்கியத்துவத்தை பெறுகின்றது!

அந்தவகையில் 250க்கு மேற்பட்ட நாடுகளை கொண்ட நாம் வாழும் பரந்த உலகிற்கு பொது எதிரியாக ' கொரோன வைரஸ்' தலை எடுத்துள்ளது.

அமெரிக்கா, ஈரான் , இந்தியா , சீனா, இஸ்ரேல் பாலஸ்தீனம் , வடகொரியா , தென்கொரியா ஆகிய நாடுகளை மையமாக கொண்டு மூன்றாவது உலக மகாயுத்தம் ஆரம்பிக்க களை கட்டிய நிலையிலும் எவரும் தடுக்கமுடியாத நிலையிலும் 'கொரோன வைரஸ்' அனைத்து நாடுகளின் பிடிவாதத்தையும் திசை திருப்பியது . அதனால் யுத்த மேகம் கலைந்து உயிரை பிடிக்க போராடும் நிலை ஏற்பட்டது!

விஞ்ஞானத்திற்கே வியப்பளிக்கும் பிரபஞ்சம் மில்லியன் கணக்கான உயிரினங்களை படைத்துள்ளது. அவற்றில் சக்தி மிக்க உயிரினமாக மனிதன் இருக்கின்றான். விந்தணுவும் கருவும் கர்ப்பத்தில் இணைந்து பத்தே மாதத்தில் ஐம்புலன்களைக் கொண்ட உயிர்களை மண்ணில் தவள விடுகின்றது.

பிரபஞ்ச சக்தியை மீறி கொரோனா வைரஸ் தோன்றியிருக்க முடியாது ! அது எதிர்மறை சக்தி அல்ல , நேர்மறை சக்தி என்பதை எவரும் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்!.

எம் கண்முன்னாலேயே காற்றும் நீரும் சுத்தமடைந்துள்ளது. ஓஸோன் மண்டலத்தில் ஏற்பட்ட விரிசல் படிப்படியாக சுருங்கிச் செல்கின்றது. இவை பிரபஞ்சத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்.

அதே போன்று மனிதனது அடாவடித்தனங்களில் பெரும் மாற்றத்தை அவதானிக்க முடிகின்றது...

நாட்டு பிரஜைகளை காப்பாற்ற நல்ல நல்ல தலைமைத்துவம் உருவாகின்றது. அரசியல் வாதிகளும் கல்வி மான்களும் முன்னின்று உழைக்கின்றார்கள்...தாம் தாம் பெற்ற அறிவையும் ஆற்றலையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கின்றார்கள்... அநாவசிய செலவுகளை தவிர்த்து பொருளாதாரத்தை வளர்க்க முற்படுகின்றார்கள். எதிரியை நண்பனாக மதிக்கின்றார்கள். நமது உடலை எப்படி பராமரிக்க வேண்டும்... குடி எப்படி தீங்கானது... சட்டத்துக்கு ஏன் பணியவேண்டும்.... என்பதற்கான விளக்கங்கள் மேலோங்குகின்றது....

இன்னும் மற்றவர்களின் பசி உணரப்படுகின்றது... பெண்ணியம் போற்றப்படுகின்றது... ஒவ்வொருவரும் சொந்தகாலில் நிற்பதுடன் வாழ்கையை திட்டமிட்டு அமைப்பதன் மூலம் மகிழ்ச்சியின் இரகசியங்களை அறிந்து கொள்ள முடிகின்றது.

அன்பு வாசக நெஞ்சங்களே...!

எனது எட்டு தசாப்தகால வாழ்கைப் பயணத்துக்கு மதிப்பளித்து இந் நூலில் உள்ள கட்டுரைகளை உங்கள் வெற்றிக்காக பயன்படுத்துமாறு வேண்டுகின்றேன்.

நன்றி.

கலாபூஷணம் வீ.என்.சந்திரகாந்தி.
071-9392190 / 026-2224706

ISBN 978-955-98979-6-5

Printed By : ART - Trinco 0776566173

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org